YARL OSAI
# யாழ் ஓசை
வார இதழ்
பெப் 04-10
ஓசை : 01 நாதம் : 14 வெள்ளிக்கிழமை 04.02.2011 வார இதழ் விலை : ரூபா 15.00

# காட்டாறு போல பாயும் கனகராயன் குளம்

**மக்கள் இடம்பெயர்வு; போக்குவரத்து தடை; 'ஏ-9' வீதியை அண்டிய பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கின**

(நெடுங்கேணி நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் தொடரும் பெரும் மழை காரணமாக மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். வவுனியா வடக்கிலுள்ள கனகராயன் குளம் பெருக்கெடுத்து ஓடுவதனால் அப்பகுதியை அண்டிய குடியிருப்புக்களில் வசிக்கும் மக்கள் அங்கிருந்தும் இடம்பெயர ஆரம்பித்துள்ளனர். கடும் மழையால் தாழ்வான பிரதேசங்கள் வீதிகள் என்பன வெள்ளக் காடாகக் காட்சியளிக்கின்றன. இந் நிலையில் கையில் கிடைத்த பொருட்களுடன் மக்கள் பாடசாலைகள் மற்றும் பொது இடங்களை (6 ஆம் பக்கம் பார்க்க)



கனகராயன் குளம் பெருக்கெடுத்த பிரதேசத்தில் மாணவர்கள் செல்வதை படத்தில் காணலாம். (படம்:- நெடுங்கேணி நிருபர்)

## தடைசெய்யப்பட்ட தமிழர் புனர்வாழ்வு கழகத்தை கே.பி.யிடம் ஒப்படைக்க அரசாங்கம் தீர்மானம்

**ஐ. தே. க. குற்றச்சாட்டு; குடாநாடு தொடர்பான கூற்றிலும் சந்தேகம்**

(ஜே. ஜி. ஸ்டீபன்)

இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய அல்லது தூக்குத் தண்டனை விதிக்கப்பட வேண்டிய கே.பி.யிடம் தடை செய்யப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை மீண்டும் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. தற்போதைய குடாநாட்டு நிலைமைகளை நன்கு உணர்ந்து வைத்துள்ள (6 ஆம் பக்கம் பார்க்க)




## இராமாவில் நலன்புரி முகாமில் உணவுப் பொருட்கள் திருட்டு

கொடிகாமம்,

கொடிகாமம்-இராமாவில் நலன்புரிமுகாம் களஞ்சிய அறையில் வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்கள் திருட்டுப்போயுள்ளதாக கொடிகாமம் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. இராமாவில் நலன்புரி முகாமில் வசிக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்காக, குறிப்பாக கர்ப்பிணிகள் (6 ஆம் பக்கம் பார்க்க)

## எமது மீனவர்களின் வயிற்றில் அடிக்கும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்!

**கண்டித்து ஆர்ப்பாட்டம்; சமாசத் தலைவர் தெரிவிப்பு**

வண்ணார்பண்ணை,

இலங்கை வட பகுதிக் கடலில் அத்துமீறி உள்நுழையும் இந்திய மீனவர்களின் வருகையைக் கண்டித்து யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் போராட்டம் ஒன்றினை நடத்தவுள்ளதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் (6 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் பல பகுதிகளுக்கும் கட்சிகள் செல்லமுடியாத நிலை சுதந்திரமான தேர்தலை எப்படி எதிர்பார்ப்பது?

## - 'கபே' அமைப்பு கேள்வி

(எம். நேசமணி)

வடக்கில் மீள்குடியமர்த்தப்பட்ட பல பகுதிகளுக்கு அரசியல் கட்சிகள் உட்பட சமூகசேவை அமைப்புக்களுக்கும் செல்வதற்கான அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, ஊடகவியலாளர்களும் அப்பகுதிகளுக்கு செல்ல முடியாதுள்ளது. இவ்வாறான நிலையில் அங்கு சுதந்திரமானதும் சுயாதீனமானதுமான தேர்தல் ஒன்றை எப்படி எதிர்பார்ப்பது என்று 'கபே' அமைப்பின் தேசிய இணைப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் கேள்வி எழுப்புகிறார்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் அரசியல்வாதிகள், பொதுமக்கள் மற்றும் பொதுநல அமைப்புக்கள் அனுபவிக்கும் அத்தனை உரிமைகளையும் அப்பகுதியிலும் அனுபவிக்கும் சூழலை அரசு ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

உள்ளூராட்சி சபை தேர்தலில் வட மாகாண நிலைமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் அவர் தெரிவித்ததாவது :-

வட மாகாணத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட பச்சிலைப்பள்ளி, மாந்தை கிழக்கு, மாந்தை மேற்கு, துணுக்காய், கரைதுறைப்பற்று மற்றும் புதுகுடியிருப்பு போன்ற பகுதிகளுக்கு செல்வதில் பல சிக்கல்கள் உள்ளன. அத்தோடு, சில பகுதிகளுக்கு செல்லவேமுடியாத நிலையுள்ளது.

இவ்வாறான நிலையில் அரசியல் கட்சிகள் எவ்வாறு அங்கு சுதந்திரமாக பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். மக்களைத் தெளிவுபடுத்தும் பொது நல அமைப்புக்களும் அப்பகுதிகளுக்கு செல்ல முடியாதுள்ளது. விசேடமாக, ஊடகவியலாளர்களாலும் அப்பகுதிக்கு சுதந்திரமாக செல்லமுடியாதுள்ளது.

சில பகுதிகளுக்குச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியினை பெற வேண்டியுள்ளது. அதனைப் பெற்றுக் கொள்வதில் அரசியல் கட்சிகளுக்கு ஏற்படும் கால தாமதங்களும் அவர்களுடைய பிரசார நடவடிக்கைகளுக்கு பங்கம் ஏற்படுத்துவதாக அமைகிறது.

இவ்வாறு வடக்கின் பல பகுதிகளில் சுதந்திரமான தேர்தலுக்குத் தடையாக இருக்கும் காரணிகளை அகற்றி அப்பகுதிகளில் சுதந்திரமானதும் சுயாதீனமானதுமான தேர்தலை உறுதிப்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கையினை எடுக்க வேண்டும்.

# எரிவாயு தாங்கி வெடித்ததில் 10 பேர் காயம்; சேதங்கள் இல்லை

## கொழும்பு துறைமுகத்தில் சம்பவம்

கொழும்பு துறைமுகத்தின் இறங்குதுறையில் எதிர்பாராத விதத்தில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் துறைமுக ஊழியர்கள் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த சகலரும் உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ள அதேவேளை, உயிராபத்துக்கள் ஏற்படும் வகையில் காயங்கள் ஏற்படவில்லையென வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் ஹெக்டர் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த வெடிப்புச் சம்பவம் நேற்று மதிய வேளையில் இடம்பெற்றுள்ளதாக துறைமுகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நாணயநிதியத்தின் அடுத்தகட்ட கடனுதவி தவணைப் பணம் விடுவிப்பு

சர்வதேச நாணய நிதியம் அதன் இலங்கைக்கான அடுத்தக் கட்ட கடன் உதவியான 216.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை விடுவித்துள்து. நேற்று முன்தினம் புதன்கிழமை இந்த கடனுதவி விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 2.6 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்குவதற்கு ஆரம்பத்தில் இணங்கியிருந்து. அந்த கடனுதவி எட்டு தவணைகளாக வழங்கப்படும்.

அதனடிப்படையில், இம்முறை தவணையான 216.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளன. யுத்தத்தின் பின்னர் நாட்டைக் கடியெழுப்புவதற்கான உதவி என்ற அடிப்படையிலேயே இந்த கடனுதவி வழங்கப்படுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்படவேண்டிய 2.6 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியில் இதுவரை இலங்கைக்கு 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டுவிட்டன.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் நவோயுகி ஷினஹாரா குறிப்பிடுகையில்,

இலங்கையில் சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவி மூலமான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னேற்ற நிலைமையை அடைந்துள்ளன. பாரிய பொருளாதார அபிவிருத்திகள் சாதகமாக முறையில் தொடர்கின்றன. பொருளாதார வளர்ச்சி பலமடைகின்றது என்றார்.

# ஜெனிவா மனித உரிமை பேரவை கூட்டத் தொடரில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான குழு

ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் கூட்டதொடரில் இலங்கையை பிரதிநிதித்துப்படுத்தி பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான பிரதிநிதிகள் குழு கலந்துகொள்கின்றது

ஜெனிவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடர் இம்மாதம் 28 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் இறுதிப் பகுதி வரை நடைபெறவுள்ளது.

வெளிவிவகார அமைச்சின் கீழ் இருந்த மனித உரிமைப் பிரிவு மீண்டும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையிலேயே அமைச்சர் சமரசிங்க ஜெனிவா கூட்டத் தொடரில் கலந்துகொள்கின்றார்.

முதற்கட்ட அமர்வுகளில் கலந்து கொண்டுவிட்டு அமைச்சர் சமரசிங்க நாடு திரும்பிவிடுவார் என்றும் ஏனைய அமர்வுகளில் தூதுக்குழுவின் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் எனவும் அமைச்சு தகவல்கள் தெரிவித்தன.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமை பேரவையின் அமர்வில் இலங்கையினால் கொண்டுவரப்பட்ட பிரேரனை மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தினால் நிறைவேற்றப்பட்டிருந்தது.

அண்மையில் தான் ஜெனிவாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்ததாகவும் அங்கு இலங்கையின் நிலைமை சிறப்பாக உள்ளதாகவும் பெருந்தோட்டக் கைத் தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



வவுனியாவில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழையினால் நூற்றுக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ள நிலையில் வெள்ளம் பாதித்துள்ள பகுதிகளை வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனுடன் வவுனியா நகரசபையின் உறுப்பினர்களான ஜி.ரி. லிங்கநாதன், சு. குமாரசாமி ஆகியோர் பார்வையிடுவதையும் வீடுகள் மூழ்கியுள்ளதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- ஓமந்தை திருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்ட தமிழ் மொழித் தினப் போட்டிகளின் பரிசளிப்பு விழாவை ஜூலை 19 இல் நடத்தத் தீர்மானம்

வண்ணார்பண்ணை

இந்த வருடத்திற்கான தேசிய மட்ட தமிழ் மொழித் தினப் போட்டிகளின் பரிசளிப்பு விழாவை ஜூலை 19 ஆம் திகதி நடத்தவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தெரிவிக்கையில்:-

2011 ஆம் ஆண்டு தமிழ் மொழித் தினப் போட்டிகளை நடத்துவது தொடர்பில் கல்வி அமைச்சின் தமிழ் மொழிப்பிரிவு கடந்த 31 ஆம் திகதி திங்கட்கிழமை விசேட கூட்டம் ஒன்றினை நடத்தியுள்ளது.

இக்கூட்டத்தில் இந்த ஆண்டிற்கான தமிழ் மொழிப்போட்டி பரிசளிப்பு விழா விபுலானந்தர் தினமான ஜூலை 19 ஆம் திகதி நடைபெறும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் பாடசாலை மட்டப் போட்டிகள் மார்ச் 10 ஆம் திகதிக்கு முன்னரும் வலய மட்டப்போட்டிகள் மார்ச் 25 ஆம் திகதிக்கு முன்னரும் நடத்தப்படவேண்டுமெனவும் மாகாண மட்டப்போட்டிகள் ஜூன் 5 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்படவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் அனைத்தும் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். இப்போட்டிகள் தொடர்பான விதி முறைகள் 2009 ஆம் ஆண்டு 5 ஆம் சுற்று நிருபத்திற்கு அமைவாகவும் பின் இணைப்புக்கள் அடங்கிய சுற்று நிருபம் இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுமென வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.



டெங்கு ஒழிப்பு மற்றும் எயிட்ஸ் நோய்க்கு எதிரான பிரசாரத்தில் சாவகச்சேரி பஸ் நிலையப்பகுதியில் செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரி கிளை உறுப்பினர்களும் இளைஞர்களும் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம். (படம்:- சாவகச்சேரி நிருபர்)

# வடக்கின் கல்வி அபிவிருத்திக்கு 310 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

வண்ணார்பண்ணை

வடக்கு மாகாண கல்வி அபிவிருத்திக்கு இவ்வாண்டு 310 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் 200 மில்லியன் ரூபாவும் நவதோயா திட்டத்தில் 30 மில்லியன் ரூபாவும் உலக வங்கியின் நிதி 80.5 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இதனைவிட அறிவு சார் கல்வி செயல் திட்டத்தில் (E.K.S.P) 335 பாடசாலைகளுக்கு 2 ஆயிரத்து 500 கணனிகளும் 10 ஆயிரம் மாணவர்களுக்கான கதிரை மேசைகளும் ஆசிரியர்களுக்கான ஆயிரம் கதிரை மேசைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் 65 வீதமான தளபாடங்கள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் யுனிசெவ் நிறுவனத்தினால் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கும் இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மாணவர்களுக்கும் கல்வி உபகரணங்கள் அடங்கிய பொதிகள் விநியோகிக்கப்படவுள்ளன.

இவற்றுடன் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாடசாலைகளுக்கு புதிய கட்டிடங்களை அமைத்து வருகிறது. இதனுடன் மேலதிகமான வேலைத்திட்டங்களைச் செய்து கொடுப்பதற்கு யுனிசெப் நிறுவனம் முன்வந்துள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

## தென்மராட்சி பாடசாலைகளில் வாய்ப்பாட்டு மனனப்போட்டி

சாவகச்சேரி

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான வாய்ப்பாட்டு மனனப் போட்டி நாளை 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை 'அத்தியாவசிய கற்றல் தேர்ச்சி கையேடுகள், அங்கு விநியோகிக்கப்படும் என்றும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.




இலங்கை வங்கியின் அச்சுவேலி கிளையில் நடைபெற்ற வாழ்வாதார மேம்பாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில், விருந்தினராக கலந்து கொண்ட இலங்கை வங்கியின் பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் வி.எஸ்.சிவநாதன் பயனாளி ஒருவருக்கு சைக்கிள் வழங்குவதையும் அருகில் வங்கியின் முகாமையாளர் த.புவனேந்திரன் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:- அச்சுவேலி நிருபர்)

# தொடரும் மழையால் நெல் அறுவடை பாதிக்கப்படுமென விவசாயிகள் கவலை

வடமராட்சி

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் நெல் அறுவடை பாதிப்படைவதுடன் நெற் பயிர்கள் அழிவடையும் நிலையை எதிர்நோக்கியுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த கால யுத்தத்திற்குப் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகள் பெரும் நிலப்பரப்பில் நெற் செய்கையை இம் முறை மேற்கொண்டிருந்தனர்.

வவுனியாவில் பெய்துவரும் மழையினால் பல நெல் வயல்கள் பாதிப்படைந்துள்ளன. இதனால் வன்னிப் பெரு நிலப்பரப்பிலுள்ள ஓமந்தை, நெடுங்கேணி உள்ளிட்ட கிளிநொச்சிப் பிரதேச நெல் வயல்களுக்கும் பாதிப்பு ஏற்படுமோ என விவசாயிகள் அச்சம் கொள்கின்றனர்.

நெற்பயிர் நன்றாக விளைந்துவரும் வேளையில் நெற்பயிருக்கு எரிபந்தம் நோய் ஏற்பட்டதுடன் கடுமையான மழையும் பெய்ய ஆரம்பித்தது. இந் நிலையில் எரிபந்தம் நோயைக் கட்டுப்படுத்த கிருமி நாசினிகளைப் பயன்படுத்த முடியாமல் விவசாயிகள் திண்டாடுகின்றனர்.

எரிபந்தம் நோயால் நெற்பயிர் பாதிக்கப்பட்ட அதேவேளை, கடுமையாக மழை பெய்யத் தொடங்கியதால் நெல் வயல்கள் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கிறன. இதனால் நோயிலிருந்து தப்பிய நெற் பயிர் கூட அறுவடை செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது.

இச் சூழ்நிலையில் நெற்பயிர் அழியக்கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது. மீள்குடியேற்றத்தின் பின்னர் முதன் முதலாக நெற் செய்கையில் ஈடுபட்ட வேளையில் இவ்வாறான கஷ்டங்களையும் சிரமங்களையும் விவசாயிகள் எதிர்நோக்கியுள்ளனர். அத்துடன் பெருந்தொகைப் பணத்தினையும் இழக்க வேண்டியவர்களாக உள்ளனர். இப் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கும் நஷ்டஈட்டைப் போல் வழங்கவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சண்டிலிப்பாயில் நடைபெற்று வரும் இலவச ஆயுள்வேத வைத்திய சேவை

ஏழாலை

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாய் உப அலுவலகத்தின் நடமாடும் இலவச ஆயுர்வேத வைத்திய சேவை சண்டிலிப்பாயில் இடம்பெற்று வருகின்றது.

அரச விடுமுறை தவிர்ந்த ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் சண்டிலிப்பாய் மத்தி கிராம அலுவலர் அலுவலகக் கட்டடத்தில் காலை 8.30 மணிமுதல் மதியம் 12 மணிவரை நடைபெற்று வருகின்றது.

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் ஆயுர்வேத வைத்திய நடமாடும் சேவையினை இலவசமாக மக்களுக்கு வழங்கும் முகமாக இந்த நடமாடும் சேவை இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மானிப்பாய் ஆயுர்வேத வைத்திய நிலையத்தின் இந் நடமாடும் சேவை நாளை 5 ஆம் திகதி , 12 ஆம் திகதி , 19 ஆம் திகதி , 26 ஆம் திகதிகளில் சண்டிலிப்பாய் மத்தி கிராம அலுவலரின் அலுவலகத்தில் நடைபெறும் எனவும் மீண்டும் மார்ச் மாதம் 5ஆம்ட , 12 ஆம் மற்றும் 26 ஆம் திகதிகளிலும் ஏப்ரல் மாதம் 2ஆம் , 9ஆம் , 16ஆம் , 23 ஆம் மற்றும் 30 ஆம் திகதிகளிலும் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yarl Osai
# யாழ் ஓசை
2011 பெப்ரவரி 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

# 63 ஆவது சுதந்திர தினமும் மக்களின் எதிர்பார்ப்பும்

இலங்கை தனது 63 ஆவது சுதந்திர தினத்தை இன்று கொண்டாடுகிறது.

இதன் பொருட்டு பிரதான சுதந்திர தின வைபவம் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தலைமையில் கதிர்காமத்தில் இன்று காலை நடைபெறுகிறது.

இதுவரை காலமும் தலைநகர் உட்பட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்க ளிலேயே சுதந்திர தின பிரதான நிகழ்வு கள் நடைபெற்றுள்ள போதிலும் முதன் முறையாக இம் முறையே ஊவா மாகாண த்தில் நடைபெறுவது விசேட அம்சமா கும்.

இந்த இடத்தில் பிரித்தானியரின் கால னித்துவ ஆட்சியிலிருந்து இலங்கையை விடுவிப்பதற்காக முன்னின்றுழைத்த தலைவர்களை நினைவு கூருவது இலங் கைப் பிரஜைகள் மீதுள்ள கடமையாகும்.

இன, மத பேதங்களைக் கடந்து நாட்டு க்காக ஓரணியில் நின்று போராடியதன் மூலமே இலங்கை மக்களால் சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடிந்தது என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது.

இவ்வாறு வெளிநாட்டவரின் ஆதிக்கத் திலிருந்து விடுபட்ட இலங்கையானது தன்னைத்தானே ஆளுவதற்கான தகுதி யைப் பெற்றுக் கொண்ட போதிலும் பின் னாளில் உள்நாட்டில் இடம்பெற்ற விரும் பத்தகாத அரசியல் முன்னெடுப்புகள் கார ணமாக மீண்டும் மக்கள் மத்தியில் முர ண்பாடுகளையே தோற்றுவித்தன.

அதன் விளைவாக ஏற்பட்ட மூன்று தசாப்த கால போரினாலும் ஆயிரக் கணக் கான உயிரிழப்புகளாலும் இடப்பெயர்வுக ளாலும் இலங்கைத் தேசத்தின் வரலாறு கறைபடிந்து போனமை கவலைக்குரிய தாகும்.

இன்று போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு இரண்டு ஆண்டுகள் கழிகி ன்ற நிலையில் மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ வேண்டும் என் பதே அனைவரதும் எதிர்பார்ப்பாக மாறி யிருக்கிறது.

இன்றைய சுதந்திர தினம் தொடர்பில் ஜனாதிபதி விடுத்துள்ள வாழ்த்துச் செய் தியில் "சுதந்திரத்தை நோக்கிய இந்தப் பயணத்தில் கடந்த கால நிகழ்கால தவறு களை நாம் சரிசெய்து கொள்ள வேண் டும். பிரிவினைகள் ஊடாக நாம் எந்த வித வெற்றிகளையும் பெற்றதில்லை. பிரிவினை எம் எல்லோருடைய சுதந்திர த்தையும் பறித்துவிடக் கூடியதாகும். எனவே ஐக்கிய இலங்கைத் தேசமொன் றைக் கட்டியெழுப்புவதே சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் அதனை அர்த்தம் நிறைந் ததாக ஆக்கவும் சிறந்த வழியாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் ஜனாதிபதி குறிப்பிட்டு ள்ளதைப் போன்று சுதந்திர இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் இந்நா ட்டு மக்கள் அனைவரும் இன, மத , மொழி பேதங்களைக் கடந்து கைகோர் க்க வேண்டியது காலத்தின் தேவையா கும்.

அன்று எவ்வாறு சகல தலைவர்களும் ஒன்றுபட்டு நின்று நாட்டை விடுவிப்பத ற்காக போராடினார்களோ அதேபோன்று இன்றும் நாம் எல்லோரும் ஓரணியில் நின்று நாட்டைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும்.

குறிப்பாக போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேச த்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டிய தன் அவசியத்தை நாம் ஒவ்வொருவரும் மனதிற்கொள்வது அவசியமாகும்.

அதேபோன்று வடக்கு கிழக்கு மக்க ளின் நிம்மதியை குலைத்து அவர்களை பீதிக்குள்ளாக்குகின்ற தீய சக்திகளை இல்லாதொழிக்க வேண்டியதும் சமகால த்தில் மிக முக்கியமானதொரு பணியா கவே கருதப்படுகிறது.

அண்மைக்காலமாக யாழ்ப்பாண நகரில் இடம்பெற்று வரும் கொலைக ளும் கொள்ளைகளும் மக்களது சுதந்திரத் தைப் பறித்துள்ளன. இரவு நேரத்தில் சுத ந்திரமாக நடமாட முடியாத துரதிஷ்டவச மான நிலைக்கு யாழ்ப்பாண மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். வீடும் தொழிலு மாக அவர்களது வாழ்க்கை மட்டுப்படுத் தப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இத் தருணத்தில் இவ்வா றான தீய சக்திகளால் சுதந்திரம் பறிக்கப் பட்டுள்ள யாழ். மக்களைப் பற்றியும் நினைத்துப் பார்ப்பது பொறுப்புவாய்ந்த அதிகாரிகளினதும் தலைவர்களதும் பொறுப்பாகும்.

"இனம், கட்சி அல்லது சமயம் என்ற எந்த வேறுபாடுகளுமின்றி மக்களின் கவ லையைப் போக்கி மனநிறைவை அதிகரி ப்பதற்காகவே சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்கிறோம்" என சுதந்திர இலங்கை யின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநா யக்க அன்று தேசத்தைப் பொறுப்பேற்ற போது தெரிவித்த கருத்தை இந்த இடத் தில் நினைவுபடுத்திப் பார்ப்பது பொருத் தமானது. அவரது இந்தக் கூற்று அன்று மட்டுமல்ல இன்றும் என்றும் இலங்கைத் தேசத்துக்குப் பொருந்துவதாகும்.

எனவேதான் இலங்கையின் எப்பாகத் தில் வாழ்கின்ற மக்களாயினும் சரி அவர் கள் அனைவரும் நிம்மதியாகவும் சுதந்தி ரமாகவும் வாழ வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

# வல்லரசுகளின் நலன் பேணும் ஆயுதமாக மனித உரிமை மீறல்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

பொருளாதார வளர்ச்சியையும் வேலை வாய்ப்பையும் காட்டியதன் மூலம் தாம் செய்த குற்றங்களை மறைக்கடிக்கச் செய்து விட்டதாகவும் ஆய்வாளர்கள் கணிப்பிட் டுள்ளனர். இதற்கு உதாரணமாக, இந் தியாவின் குஜராத் மாநில முதல்வர் நரேந் திர மோடியையும், தியனமென் சதுக்க படுகொலைகளின் பின் சீனா கண்ட பொருளாதார முன்னேற்றத்தையும் ஆய் வாளர்கள் முன்வைக்கின்றனர்.

குஜராத் மாநிலத்திலே 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி பல கலவரங்களின் தொடர்ச்சியில் உத்தர பிரதேசத்தை நோக்கிச்சென்று கொண் டிருந்த ரயில் வண்டி எரிக்கப்பட்டது. இந்த ரயில் வண்டியிலே ஐம்பத்தி எட்டு பொது மக்கள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட வர்கள் அனைவரும் இந்துமதத்தைச் சார்ந் தவர்களாயிருந்தனர். இந்த ரயில் எரிப்பு இடம்பெற்ற இடம் கோதரா எனப்படும் இஸ்லாமியர் நகரமாகும்.

புதிதாக குஜராத் முதல்வராக பதவி யேற்றிருந்த இந்து அடிப்படைவாத போக்கை கொண்ட நரேந்திர மோடியும், அயோத்தியில் இராமர் கோயில் கட்ட வேண்டும் என்ற போராட்டங்களும் ஒரே தருணத்திற்கு வர ரயில் எரிப்பும் சேர்ந்த மைந்தது.

அடுத்த நாள் 28 ஆம் திகதி மாநிலம் தழுவிய துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. தொடர்ந்து குஜராத் தலைநகரான அகமதா பாத்தில் இஸ்லாமிய தெருக்களும் இதர இஸ்லாமிய சிற்றூர்களும் இஸ்லாமியர்க ளுக்கு மரணப்பொறிகளாயின.

ஆயிரக்கணக்கான குண்டர்கள் வீதி வீதியாக இஸ்லாமியர்களை படுகொலை செய்தனர். இஸ்லாமியப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாயினர். பின்பு மண்ணெண்ணெய் ஊற்றி தீவைக் கப்பட்டனர். குழந்தைகளின் வாயில் மண்எண்ணை ஊற்றப்பட்டு தீவைக்கப் பட்டன. இந்த கொடுமையை ஆண்கள் வலுக்கட்டாயமாக பார்க்கவைக்கப்பட்ட னர். பின்பு கொலைசெய்யப்பட்டனர்.

இந்த கொலை கொடூரம் நடைபெற்று கொண்டிருந்த போது தலைமை அமைச் சர் நரேந்திர மோடி, "ஒவ்வொரு தாக்கத் திற்கும் சமமான எதிர்த்தாக்கம் இருக்கும்" என்று புவியீர்ப்பு சக்தியை கண்டறிந்த ஐசாக் நியூட்டனின் மூன்றாவது விதியை மேற்கோள்காட்டி சாதாரணமாகக் குறிப் பிட்டிருந்தார்.

ஆனால், சுமார் இரண்டாயிரம் இஸ்லா மியர்கள் கொல்லப்பட்டனர். நானூறு இஸ் லாமிய பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாயினர். இரண்டு இலட்சம் பேர் வீடு வாசல்களை இழந்தனர். இச் சம்பவம் தொ டர்பில் மனித உரிமை அமைப்புக்கள் பெரும் கரிசனை கொண்டிருந்தனர்.

ஆனால், இத்தனைக்குப் பின்பும் குஜ ராத்தின் பொருளாதார வளர்ச்சி காரண மாக அரபிக் கடலிலே டுபாய்க்கு அடுத்ததாக மிகப்பெரிய நகராக குஜராத் தின் ஹச் பகுதியை உருவாக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டதோ பல்வேறு தொழில் பேட்டைகள் உருவாகியதைத் தொடர்ந்து 2002 ஆம் ஆண்டின் பின்பு குஜராத்தில் எந்த ஒரு வன்முறையும் இடம்பெற வில்லை.

நரேந்திர மோடி புதிய மோட்டார் வண்டியான 'நானோ'வை வெளியிட்டார்

வேலைவாய்ப்பு, தொழில்வளர்ச்சி என் பன இந்தியாவின் சமூகங்களை வெகு வாக பற்றிக்கொண்டதைத் தொடர்ந்து, இனசமய விவகாரங்களில் மக்கள் கவனத்தை குறைப்பதிலே ஆளும் தரப் பினர் கணிசமான அளவு வெற்றியும் கண்டுவருகின்றனர்.

தியனமென் சதுக்க படுகொலைகளுக்கு பின்பு சீனா தனது பொருளாதார வளர்ச்சி வேலைவாய்ப்பு போன்றவற்றின் அதி கரிப்பால் தான் செய்த மனித உரிமை மீறல்களிலிருந்து சுதாகரித்து முன்னேறி யது போன்று குஜராத்தும் தப்பி கொண் டுள்ளது.

இதனால் மனித உரிமை என்பது ஒரு இனத்துக்கோ அல்லது தனிமனிதனுக்கோ இழைக்கப்பட்ட கொடுமை என்ற நிலை யில் அல்லாது மேலை நாடுகளின் மென் மையான சீன பொருளாதார வலைப்பின் னல்களுக் கெதிரான ஆயுதமாகவே பார்க் கப்படலாம். இந்த சீன பொருளாதார வலையில் சிக்கிக் கொண்ட வறுமை மிகுந்த திட்டமிடல்களற்ற சூடான் இருநாடாக பிரிந்து போகவுள்ளது.

தனது மக்கள் பெருக்கத்திற்கேற்ற வகையில் பொருளாதார சக்தியிலே பலம் குறைந்த கடன் பளுக்களினால் அவதி யுறும், சீன பொருளாதார வலையில் சிக்குண்டு கிடக்கும் மேலும் இரு நாடு கள் மியன்மரும், இலங்கையுமாகும்.

மியான்மருக்கும் இலங்கைக்கும் இடை யில் பல்வேறு ஒற்றுமைகள் காணப்படு கின்றன. இரு நாடுகளும் 1948 இல் பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்றுகொண்டன. இரு நாடுகளும் சுதந் திரம் பெற்ற பொழுது இருந்த தமது பெயர்களை மாற்றி அமைத்து கொண் டுள்ளன சிலோன்-சிறீலங்கா, பர்மா-மியன்மர்.

இரு நாடுகளும் தேரவாத பௌத் தத்தை கடைப்பிடிப்பனவாகும், அத்து டன் சீனாவின் முத்துமாலை வியூகத்தில் இலங்கையைப் போலவே மியன்மரும்

லோகன் பரமசாமி

பங்குபற்றுவதும் முக்கியமானதாகும்.

இலங்கை புவிசார் கேந்திர முக்கியத்து வம் வாய்ந்த பகுதியில் அமைந்திருப்பது போல மியான்மரின் கேந்திர முக்கியத்து வம் அது சீனாவை இந்து சமுத்திரத்துடன் அதுவும் வங்கக்கடலை இணைக்கும் கொல்லைப்புற வாசல் நாடாக அமைந் திருப்பதாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசாவின் கைதால் பிரதமரின் மதிப்பு உயர்ந்துள்ளது: காங்கிரஸ்

## தி.மு.க. - காங்கிரஸ் உறவில் பாதிப்பு இல்லை என்கிறது



ஆ.ராசா

**புதுடில்லி,**

ராசா கைது செய்யப்பட்டதால் தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணிக்கு பாதிப்பு ஏற்படாது என்று காங்கிரஸ் மேலிடம் அறிவித்துள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் நடந்ததாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக சி.பி.ஐ. தீவிரமாக விசாரணை நடத்தி வருகிறது. தொலைத் தொடர்புத் துறை முன்னாள் அமைச்சர் ஆ.ராசாவிடம் நேற்றுமுன்தினம் காலை முதல் 4ஆவது முறையாக விசாரணை நடந்தது. இந்த விசாரணையை தொடர்ந்து அவரும் மற்றும் இரு உயர் அதிகாரிகளும் கைது செய்யப்பட்டனர்.

பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த கைது நடவடிக்கை பற்றி அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளரும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் பொறுப்பாளருமான குலாம் நபி ஆசாத்திடம் நிருபர்கள் கருத்து கேட்டபோது:-

தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி தனிப்பட்ட இரு நபர்களுக்கு இடையேயான உறவின் அடிப்படையில் ஏற்பட்ட கூட்டணி அல்ல. இரு கட்சிகளுக்கும் இடையேயான கூட்டணி, கொள்கைகள் மற்றும் பிரச்சினைகளின் அடிப்படையிலானது ஆகும். இரு கட்சிகளுக்கும் இடையேயான உறவு வலுவாக உள்ளது. எனவே ஆ.ராசா கைது சம்பவத்தின் காரணமாக தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணிக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.

புகார்களின் மீது விசாரணை நடந்து கொண்டு இருக்கும் நிலையில், சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவரை குற்றவாளி என தீர்மானித்து விட முடியாது.

மேலும் சி.பி.ஐ. விசாரணை நடத்தி நடவடிக்கை எடுத்து இருக்கிறது. என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்? எந்த திகதியில் யாரை கைது செய்ய வேண்டும் என்பது பற்றியெல்லாம் அரசியல் தலைவர்களுடன் சி.பி.ஐ. ஆலோசனை நடத்துவது இல்லை என்று தெரிவித்தார்.

இது குறித்து காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் அபிஷேக் சிங்வி அளித்த பேட்டியில்:-

ராசா கைது செய்யப்பட்டிருப்பது, ஸ்பெக்ட்ரம் வழக்கில் அரசாங்கம், தீவிரமான நடவடிக்கை எடுத்துள்ளதைத்தான் காட்டுகிறது. இதனால் பிரதமர் மன்மோகன் சிங்கின் நம்பிக்கையோ, மதிப்போ அல்லது மத்திய அரசின் நம்பிக்கையோ, மதிப்போ குறைந்து விடவில்லை.

மாறாக, சட்டம் தனது கடமையை செய்ய அனுமதி அளித்ததன் மூலம், பிரதமரின் மதிப்பும், அரசாங்கத்தின் மதிப்பும் உயர்ந்து உள்ளது என்பதுதான் உண்மை.

மேலும் ஆ.ராசா கைது செய்யப்பட்டு இருப்பதால் காங்கிரஸ்-தி.மு.க. கூட்டணிக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று தெரிவித்தார்.

# இலங்கை போக்குவரத்தில் நிபந்தனை கண்காணிப்பு பணியில் வனத்துறை

**இராமநாதபுரம்:**

இந்தியா - இலங்கை கடல் போக்குவரத்தில் வனத்துறை சார்பில் பயணிகளுக்கு புது நிபந்தனை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான கண்காணிப்பு பணியிலும் அவர்கள் ஈடுபடவுள்ளனர்.

நீண்ட இடைவேளைக்கு பின், இந்தியா - இலங்கை இடையே கப்பல் போக்குவரத்திற்கு இரு நாடுகளும் முன் வந்துள்ளன. இது குறித்து முறையாக மத்திய அரசு அறிவித்துள்ள நிலையில், விரைவில் போக்குவரத்து ஆரம்பிக்கவுள்ளது. தூத்துக்குடி - கொழும்பு, இராமேஸ்வரம் - தலைமன்னார் என இரு தடங்களில் கப்பல் பயணிக்க உள்ளது. இதற்கான ஏற்பாடுகளில் மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை மும்முரமாக உள்ளது.

வணிகம் மற்றும் நட்பு ரீதியாக சுமூக உறவுக்கு வழிவகுக்கும் இப்போக்குவரத்தில், பின்னடைவும் நிறைய உள்ளன.

இராமேஸ்வரம் தீவில், பிளாஸ்டிக் மீதான தடைக்கு ஒத்துழைப்பு கிடைத்த நிலையில், வெளியிலிருந்து வரும் பயணிகளிடம் அதை எதிர்பார்க்க முடியாது. தற்போதைய நிலைவரப் படி, சுற்றுச்சூழல் சீர்கேட்டால் இந்திய கடற்பகுதியின் பவளப்பாறைகள் சேதமடைந்துள்ளன. இந்த சமயத்தில், கப்பல் பயணிகளால் கடலில் சேரும் பிளாஸ்டிக் கழிவுகள், பவளப் பாறைகளுக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தலாம். இதனால், மீன் உற்பத்தி பாதிப்பதுடன், மீனவர்களின் வாழ்வாதாரமும் கேள்விக்குறியாகும்.

இலங்கைக்கு கப்பல் போக்குவரத்து ஆரம்பித்தவுடன் மத்திய அரசின் பணி நிறைவடைந்து விடும். அதன் பிறகு ஏற்படும் பாதிப்புகளை சமாளிக்க வேண்டிய கட்டாயம், வனத்துறை மற்றும் மீன்வளத்துறைக்கு மட்டுமே உண்டு. இதை கவனத்தில் கொண்ட வனத்துறையினர், 'இலங்கை செல்லும் பயணிகள் பிளாஸ்டிக் பொருட்களை கொண்டு செல்லக்கூடாது' என்ற நிபந்தனையை அறிவுறுத்தியுள்ளனர்.

இது குறித்து இராமநாதபுரம் வன உயிரின பாதுகாவலர் சுந்தரகுமார் கூறியதாவது:

பவளப்பாறைகளை பாதுகாக்கும் விதமாக இப்பிரச்சினையில் வனத்துறை தலையிட வேண்டிய கட்டாயம் நேர்ந்துள்ளது. பயணிகள் முழு சோதனைக்கு பின்னரே பயணத்திற்கு அனுமதிக்கப்படுவர். இதற்கான பணியில் மாவட்ட நிர்வாகத்துடன், வனத்துறையினர் ஈடுபடுவர். இலங்கையிலிருந்து வரும் பயணிகளையும் சோதனைக்கு உட்படுத்த வலியுறுத்துவோம் என்றார்.

# மகள்மாருடன் இந்தியா வர மிசெல் ஆர்வம்



**டில்லி:**

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி மிசெல் மீண்டும் இந்தியாவுக்கு வர ஆர்வமாகவிருப்பதாகவும், அப்படி வரும் போது தனது இரு மகள்மார்களையும் இங்கு அழைத்து வர விருப்பம் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தனது மனைவி மிசெலுடன் கடந்த நவம்பர் மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அதில் மிசெலுக்கு இந்தியா மிகவும் பிடித்துப் போய் விட்டதாக வெள்ளை மாளிகையில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருடன் நடந்த சந்திப்பின்போது ஒபாமா தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

மிசெல் இந்திய பயணத்தை பெரிதும் விரும்பியதாகவும், மீண்டும் ஒரு முறை வர விரும்புவதாகவும், இந்த முறை இரு மகள்மாருடன் வர வேண்டும் என்று விரும்புவதாகவும் ஒபாமா தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

முதன்முறையாக மிசெல் இந்தியா வந்த போது அவர்கள் இரு மகள்மார்களும் உடன் வருவதாகத் தான் இருந்தது. ஆனால் அவர்களுக்கு பள்ளியில் விடு முறை கிடைக்காததால் பயணம் ரத்தானது. எனவே மிசெல் விரைவில் இந்தியா வருவார் என்று இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆனால் அதற்கு அதிகாரப்பூர்வமாக எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தானும், மிசெலும் இந்திய பயணத்தை பெரிதும் விரும்பியதாகவும், இந்த வாய்ப்புக்காக தாங்கள், பிரதமர் மன்மோகன் சிங்குக்கு நன்றி கூறியதாக அவரிடம் தெரிவிக்குமாறும் மேனனைக் கேட்டுக் கொண்டார் ஒபாமா.

# விஜய ஸ்ரீஹரிக்கு மனோதத்துவ சோதனை நடிகை வனிதா வழக்கில் நீதிபதி உத்தரவு



**சென்னை:**

நீதிமன்ற உத்தரவுப்படி தாய் வனிதாவுடன் செல்ல மறுக்கும் விஜய ஸ்ரீஹரிக்கு மனோதத்துவ பரிசோதனை நடத்தும்படி சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிபதியின் உத்தரவின் விபரம் வருமாறு, விஜய ஸ்ரீஹரியை சமாதானம் செய்வதற்கு இரு தரப்பினராலுமே முடியவில்லை. தாய் வனிதாவுடன் செல்வதற்கு அவன், மிகவும் ஆணித்தரமாக மறுக்கிறான். ஆனாலும் அவனை வனிதாவின் வீட்டில் விட்டுவிட்டு பின்னர் தன்னுடன் அழைத்துச் செல்வதற்கு தயாராக இருப்பதாக அவரது முதல் கணவர் ஆகாஷ் குறிப்பிட்டார். அதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்த போதிலும் அது பிரச்சினையாகியிருப்பதினால் தாய் வனிதாவுடன் குழந்தை விஜய ஸ்ரீஹரியை தனியாக பேச விட்டும் பார்த்தோம். ஆனால் அதிலும் சரியான தீர்வு கிடைக்கவில்லை.

வனிதா மற்றும் அவரது 2ஆம் கணவரும் மாற்றுத் தந்தையுமான ஆனந்தராஜனுடன் வசித்தபோது விஜய ஸ்ரீஹரிக்கு சில துன்பமான நிகழ்வுகள் நடந்து, அதன் மூலம் அவனுக்கு இந்த அளவுக்கு வெறுப்பு ஏற்பட்டு இருக்க வாய்ப்புள்ளது. அல்லது, வனிதாவிடம் சென்றுவிடக்கூடாது என்பதற்காக ஆகாஷ் அவனை இந்த அளவுக்கு மனதை கலைத்து தன்வசப்படுத்தி இருக்க முடியும்.

எனவே இதில் சரியான உண்மை தெரிந்து கொள்ள சிறுவன் விஜய ஸ்ரீஹரியை குழந்தைகள் நல மருத்துவமனையில், அழைத்துச் சென்று, ஆழ் மனதில் என்ன இருக்கிறது என்பதை பரிசோதிக்க வேண்டும்.மேலும் அங்குள்ள நிபுணர் குழுவினர் கூறினால் ஆகாஷ் மற்றும் வனிதா தங்களை பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் இயங்கும் வட மாகாண திணைக்களங்கள்

வண்ணார்பண்ணை,

வடக்கு மாகாணத்தில் சகல அமைச்சுக்களினதும், திணைக்களங்களினதும் அலுவலகங்கள் யாழ்ப்பாணத்தில் இயங்க ஆரம்பித்துள்ளன. கடந்த முதலாம் திகதி முதல் பல திணைக்களங்களின் செயற்பாடுகள் ஆரம்பாகியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வடக்கு மாகாண அலுவலகங்கள் அமைந்துள்ள இடங்களும் முகவரிகளும் வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றின் விபரம் வருமாறு,

பிரதம செயலாளர் அலுவலகம் இல. 187, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. உட்கட்டமைப்பு அமைச்சு இல. 82, செட்டித் தெரு நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ஆளுநர் அலுவலகளம் இல. 34 காட்டுக்கந்தோர் வீதி, சுண்டுக்குளி. கல்வி அமைச்சு மருதனார்மடம் உரும்பிராய் வீதி, சுன்னாகம். சுகாதார அமைச்சு இல. 55 மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம். மாகாண திட்டமிடல் செயலகம் டச்சு வீதி, கல்வியங்காடு.

பொது நிர்வாக செயலகம் இல. 695, நாவலர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம். மாகாண திறைசேரி அலுவலகம் இல. 79/2 றக்கா வீதி, சுண்டுக்குழி. பொதுச் சேவை ஆணைக்குழு 10 ஆம் கட்டை பருத்தித்துறை வீதி, ஆவரங்கால். வீதி அபிவிருத்தி அதிகார சபை இல. 653, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனம் இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு. கட்டிடங்கள் திணைக்களம் இல. 40, றக்கா வீதி, சுண்டுக்குளி. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு இல. 35, அம்மன் வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

கணக்காளர் திணைக்களம் இல. 115, செம்மணி வீதி, யாழ்ப்பாணம், சிறுவர் நன்னடத்தை திணைக்களம் முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி கைதடி. உள்ளூராட்சி திணைக்களம் முதியோர் இல்லம், கண்டி வீதி, கைதடி. சமூகசேவை திணைக்களம் கைதடி, கைத்தொழில் திணைக்களம், கூட்டுறவுத் திணைக்களம், கிராமிய அபிவிருத்தி திணைக்களம், சுகாதாரத் திணைக்களம் ஆகியன மார்ட்டின் வீதி, யாழ்ப்பாணம். உள்ளூராட்சி அமைச்சு கைதடி. விவசாய அமைச்சு இல. 4 கண்டி வீதி, அரியாலை. நில அளவைத் திணைக்களம் இல.295, கண்டி வீதி, அரியாலை, கல்வித் திணைக்களம் மருதனார்மடம். விளையாட்டுத் திணைக்களம் கலாசாரத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியன கச்சேரி வீதி ,கிளிநொச்சி. நிதிப்பிரிவின் பிரதம செயலாளர் அலுவலகம் இல. 187, ஆடியபாதம் வீதி திருநெல்வேலி.

---

**எமது...(தொடர்ச்சி)**

எஸ். தவரட்ணம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - 30 வருட கால யுத்தத்தினால் வட பகுதி மீனவர்கள் பல்வேறு சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து அண்மையிலேயே சுதந்திரமாகத் தொழிலைச் செய்வதற்கு படிப்படியாக அனுமதி கிடைத்து வருகிறது.

இந்த 30 வருட காலத்தில் யுத்த அனர்த்தம் , இயற்கை அனர்த்தங்களால் பல உயிரிழப்புக்கள், சொத்திழப்புக்கள் , இடப்பெயர்வுகள் என துன்பத்தினாலும் உயர் பாதுகாப்பு வலயம் கடல் வலய சட்டங்களாலும் தமது தொழிலைச் செய்யமுடியாது வேறு தொழிலைச் செய்து வந்துள்ளனர். தற்போது யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து கடல் வலய சட்டம் , உயர் பாதுகாப்பு வலயம் அகற்றப்பட்டு கடற்றொழிலைச் செய்ய முற்படும்போது அரசாங்கத்தினால் இழுவைப் படகு மற்றும் தங்கூசி வலை உட்பட 10 தொழில் முறைகளுக்குத் தடை விதிக்கப்பட்டடுள்ளது. எனினும் எமது தொழிலாளர்கள் அதனை மதித்து தமது கிடைக்கும் உதவிகளைக் கொண்டு தொழிலைமேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு இருக்கையில் இந்திய மீனவர்கள் தமது எல்லையை மீறி இலங்கை கடல் எல்லைக்குட்பட்ட வட பகுதிக்குள் தினந்தோறும் இழுவைப் படகில் வந்து தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இது எமது மீனவர்களின் வயிற்றில் அடிக்கும் செயலாகும்.

இலங்கை அரசாங்கம் கடல் வளத்தைப் பாதுகாப்பதற்காக பல தடைச் சட்டங்களை பிரயோகித்துள்ளது. இதனை எமது மீனவர்கள் மதித்து நடக்கும்போது இந்திய மீனவர்கள் சுதந்திரமாக கடல் வளங்களை அழித்து எமது எல்லைக்குள் தொழிலைச் செய்கிறார்கள். இதனை எவரும் எதிர்ப்பதாகத் தெரியவில்லை.

இவர்களது இந்தச் செயலால் எமது வளங்கள் அழிக்கப்படுகின்றன. இந்திய மீனவர்கள் தமது கடல் வளங்களை அழிப்பது போல் எமது வளத்தையும் அழிக்கும் முயற்சியில் தற்போது ஈடுபட்டு வருகிறார்கள்சி

இதனை கடுமையாகக் கண்டித்து யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்கள் , சம்மேளனங்கள் கூடி இந்திய மீனவர்களின் இந்த செயலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளன.

இதேவேளை அண்மையில் இந்திய வெளியுறவுச் செயலாளர் திருமதி நிருபமாராவ் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டபோது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எமது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்துத் தெரியப்படுத்தியுள்ளார். இதற்காக அமைச்சருக்கு எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். இதன் பிரகாரம் முடிவு ஒன்று எட்டப்படாவிடின் விரைவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவோம் - என்றார்.

---

**இராமவில்... (தொடர்ச்சி)**

குழந்தைகளுக்கு வழங்குவதற்கு களஞ்சிய அறையில் வைக்கப்பட்டிருந்த சத்துணவு மா உட்பட்ட பல தரப்பட்ட உணவுப் பொருட்கள் திருட்டுப்போயு[illegible]ன. இவ்வாறு இதுவரை 5 முறைக்ள் திருட்டுப்போயுள்ளதாக அப்பகுதியில் வசிக்கும் மக்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

---

**காட்டாறு... (தொடர்ச்சி)**

நோக்கி இடம் பெயர்ந்து வருகின்றனர்.

சுமார் மூன்று அடிக்கும் மேலாக வெள்ளம் பாய்வதாகவும் அதனால் சின்ன அடம்பன் பெரிய அடம்பன் கரப்புக்குத்தி விஞ்ஞானகுளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நிர்க்கதியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியில் இயங்கும் பாடசாலைகள் அனைத்தும் அவசரமாக மூடப்பட்டுள்ளதுடன் மாணவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர். நெடுங்கேணி, மகா இலுப்பைக்குளப் பகுதியிலிருந்து இடம் பெயரும் மக்களை நெடுங்கேணி பாடசாலையில் வந்து தங்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

சேம மடுக்குளம், ஓமந்தைக்குளம், புளியம்குளம், நொச்சிக்குளம், ஆனை கல் போட்ட குளம், குறிசுட்ட குளம் ஆகிய பல குளங்கள் உடைப்பெடுத்து கனகராயன் குள ஆற்றில் கலந்துள்ளமையினால் கனகராயன்குள ஆறு காட்டாறு போல் பாய்ந்து இரணைமடுக் குளத்துடன் சேர்ந்து வருகிறது.

அத்துடன் ஏ-9 வீதியை அண்டியுள்ள பிரதேசங்கள் மாங்குளத்தை அண்டியுள்ள பிரதேசங்கள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பயிர்கள் அணைத்த[illegible]ாசமடைந்துள்ளதுடன் கால்நடைகள் பலவும் இறந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

**தடைசெய்யப்பட்ட... (தொடர்ச்சி)**

கே. பி. அந்த மக்களது தங்க ஆபரணங்களை வங்கிகளில் வைத்து பாதுகாப்பினை ஏற்படுத்திக் கொள்ளுமாறு கூறியிருப்பதானது உள்நோக்கம் கொண்ட கருத்தாகும்.

இதன் மூலம் குடாநாட்டு மக்களது சொத்து விபரங்களைத் திரட்டி அதனை தமது வழியில் பயன்படுத்திக் கொள்வதற்கான முயற்சியா இது என்ற கேள்வியும் எழுந்துள்ளதாகவும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அக்கட்சியின் குருணாகல் மாவட்ட எம்.பியான தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில்,

தமிழர் புனர்வாழ்வுக் கழகமானது புலிகளுக்கு சாதகமானது என்ற காரணத்தினாலேயே இன்றைய அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டது. ஆனால் அவ்வாறு தடை செய்யப்பட்ட அந்த நிறுவனத்தை புலிகளின் தலைவர்களில் ஒருவரான கே. பி.யிடம் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

இதன் முதற்கட்டமாக முழங்காவில் பகுதியில் 100 ஏக்கர் நிலப் பரப்பினை உள்ளடக்கிய பிரதேசத்தில் மேற்படி நிறுவனத்தை நிறுவி அதனை கே. பி. யின் தலைமையின் கீழ் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

உண்மையில் கே. பி. என்கின்ற குமரன் பத்மநாதன் ஒரு பயங்கரவாதத் தலைவர் என்பது தெளிவானதாகும்.

சிறையில் இருக்க வேண்டிய அவர் இன்று சுதந்திரமாக நடமாடித் திரிகின்றார். அதுவும் இராணுவப் பாதுகாப்புடன் குடாநாட்டுக்கும் சென்று வருகின்றார். ஆனாலும் இந்த நாட்டுக்கு சுதந்திரத்தையும் மீட்சியையும் பெற்றுக் கொடுத்த இராணுவ வெற்றியாளன் கைதி சீருடையுடன் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருக்கு வெற்றி[illegible] [illegible]ளைகள் கட்டுப்படுத்தப்படுவதற்குக் கூட நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டிய நிலைமை இங்கு ஏற்பட்டுள்ளது.

இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட வேண்டிய அல்லது தூக்குத் தண்டனை அனுபவிக்க வேண்டிய கே. பி. சகல சுகபோகங்களுடன் சுதந்திரமாக இருக்கின்றார். இந்நிலையில் அவரது குடாநாட்டு விஜயமும் அங்கு அவர் வெளிப்படுத்தியுள்ள கருத்துக்களும் சிந்திக்கப்பட வேண்டியவையாகும்.

யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைமைகளை அவர் நன்றாக உணர்ந்திருக்கின்றார். இதன் பின்னணியில் தான் அங்குள்ள மக்கள் தமது தங்க ஆபரணங்களை வங்கிகளில் வைத்து பாதுகாக்குமாறு கூறியுள்ளார். இந்தக் கருத்தானது இரண்டு அர்த்தங்களைக் கொண்டிருக்கின்றது.

அதாவது யாழ். குடாநாட்டில் இன்னும் மக்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை. [illegible] இல்லை என்பதைக் கூறியுள்ள அவர் இரண்டாவது விடயமாக மேற்படி மக்கள் தமது தங்க ஆபரணப் பொருட்களை வங்கிகளில் வைத்து பாதுகாப்பதற்கு முன்வருவதன் மூலம் அதன் விபரங்களையும் குறித்த வாடிக்கையாளர்களது ஏனைய சொத்து விபரங்களையும் திரட்டிக் கொள்ளும் நோக்கிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார் என்பது நன்றாகவே தெளிவாகின்றது.

அந்த மக்களின் சொத்து விபரங்களை அறிந்ததன் பின்னர் கே. பி. யோ அல்லது அவருடன் சம்பந்தப்பட்டவர்களோ தமது குழுக்களைப் பயன்படுத்தி தமது தேவைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளும் ஒரு நோக்கம் இங்கு பொதிந்துள்ளது என்பதை எம்மால் கூற முடியும். இதுதான் இன்றைய நிலைமையாக இருக்கின்றது.

விடுதலைப் புலிகளிடமிருந்து விடுதலை பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கின்றபோதிலும் அது இன்னும் யாழ். மக்களைச் சென்றடையவில்லை என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகை எப்படி மேம்படுத்தலாம்

நம்முடைய சமையலறையிலேயே நம்முடைய அழகிற்கான புதையல் இருக்கிறது. சமையலறையில், உபயோகமில்லாமல் தூக்கி வீசப்படும் சில பொருட்களைக் கொண்டு நம் அழகை எப்படி மேம்படுத்தலாம் என்று பார்ப்போமா?

**தக்காளி :** சமையலுக்கு உபயோகப்படுத்த முடியாத தக்காளியை குப்பையில் போட்டுவிடுவோம். அதை சமையலுக்கு பயன்படுத்தமாட்டோம். ஆனால், அடுத்த முறை இத்தகைய தக்காளியைக் கண்டால் அதைத் தூக்கிப் போட்டுவிடாதீர்கள். அதை கூழாக்கி, முகத்தில் பேஸ்ட்டாக போட்டுக் கொள்ளலாம். அதிலுள்ள 'சி' மற்றும் 'ஏ' விட்டமின்கள் முகத்தின் கரும்புள்ளிகளை நீக்குவதில், சிறந்த முறையில் செயல்படுகிறது.

**பால் :** பாலை உபயோகித்துவிட்டு, பாத்திரத்தை சுத்தம் செய்வதற்காக போடுவதற்கு முன், அதிலிருக்கும் சிலதுளி பாலை, சிறிது பஞ்சில் எடுத்து நம்முடைய முகத்தை சீராக துடைத்து எடுக்கலாம். இவ்வாறு செய்வதன் மூலம், நம்முடைய முகத்தின் துவாரங்கள் திறக்கும். முகம் சுத்தமாகவும் பிரகாசமாகவும் மாற இது உதவுகிறது. சிறிது தேன் கலந்து பூசினால், சிறந்த மாய்ஸ்டரைசராகவும் செயல்படுகிறது.

**ஓட்ஸ் கூழ் :** சாப்பிட்டுவிட்டு எஞ்சிய ஓட்ஸ் கூழை தூக்கி எறிய வேண்டாம். அதை முகத்திற்கான மாஸ்க்காகவும் ஸ்கரப்பராகவும் பயன்படுத்தலாம். ஓட்ஸ் கூழை சிறிது பால் அல்லது தயிருடன் சேர்த்து, நன்றாக அரைத்து முகத்தில் தடவலாம். பத்து நிமிடங்கள் கழித்து முகத்தை சுத்தம் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால் முகம் சுத்தமாகும். முகம் உலர்ந்து விடாமலும் பாதுகாக்கப்படும்.

**அப்பிள் :** சாப்பிட்டுவிட்டு வீசப்படும் அப்பிளில் சிறிது சதைப் பகுதி இருக்கும். இதை வீணடிக்க வேண்டாமே. இதை அரைத்து, அதனுடன் தேன் சேர்த்து முகத்தில் தடவவேண்டும். இப்படி செய்வதால் முகத்தில் ஏற்படும் மெல்லிய கோடுகள் நீங்கும். அதோடு, ஆரோக்கியமான பளபளப்பையும் இது கொடுக்கும்.

**வோல் நட் :** நம் பிள்ளைகளுக்கு வோல்நட் கொடுத்தால், அதை பாதி தின்றுவிட்டு போட்டுவிடுவார்கள். அதைத் துருவி பால் அல்லது பப்பாளி கூழுடன் சேர்த்து முகத்தில் தடவலாம். பாலுடன் சேர்க்கும்போது, அது முகத்தை பளபளப்பாக்குவதுடன் முகத்துவாரங்கள் திறப்பதற்கும் பயன்படுகிறது. பப்பாளியுடன் சேர்க்கும்போது, முகத்தை சுத்தமாக்குவதுடன் இறந்த செல்கள் உதிர்ந்து விடுவதற்கும், முகத்தின் தசை இறுகி, இளமையான பொலிவிற்கும் உதவும்.

**ஒலிவ் எண்ணெய் :** தற்போது எல்லா வீடுகளிலும் ஒலிவ் எண்ணெய் பயன்படுத்தப்படுகிறது. மணம் போய்விட்ட எண்ணெயை நாம் பயன்படுத்துவதில்லை. நம்முடைய கால்களின் முடியை நீக்கியபின் இந்த எண்ணெய் கொண்டு நன்கு மசாஜ் செய்யலாம். இதன்மூலம் கால்களில் ஏற்பட்டுள்ள பிளவுகள் மற்றும் வெடிப்புகள் சரியாகும்.

# கணவாய்க் கறி



**தேவையான பொருட்கள்**

கணவாய் - 250 கிராம், உருளைக்கிழங்கு - 100 கிராம், சின்ன வெங்காயம் - 10, பச்சை மிளகாய் - 2, கறிவேப்பிலை, றம்பை - அளவுக்கு ஏற்ப வெள்ளைப் பூடு - 4 பல்லு, வெந்தயம் - 1/2 தேக்கரண்டி மிளகாய்த்தூள் - 1 1/2 மேசைக்கரண்டி, தேங்காய்ப்பால் - 1/2 தம்ளர் (முதற்பால்), 1 தம்ளர் (பிற்பால்), பெருஞ்சீரகத்தூள் - 1 தேக்கரண்டி (வறுத்து அரைத்தது), உப்பு - தேவைக்கேற்ப பழப்புளிக் கரைசல் - தேவைக்கேற்ப, இஞ்சி - சிறு துண்டு.

**செய்முறை**

கணவாயைச் சுத்தம் செய்து சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும்.

உருளைக்கிழங்கு, வெங்காயம் முதலானவற்றைச் சுத்தம் செய்து வெட்டிக் கொள்ளவும்.

கணவாயுடன் உருளைக்கிழங்கு, வெங்காயம், பச்சைமிளகாய், பூடு, இஞ்சி கறிவேப்பிலை றம்பை, மிளகாய்த் தூள், வெந்தயம், உப்பு யாவற்றையும் கலந்து தேங்காய்ப்பாலையும் சேர்த்து மூடி வேக விடவும்.

அதன்பின் கிழங்கு வெந்ததும் புளிக்கரைசலைச் சேர்த்துக் கறி வற்றியதும் பெருஞ்சீருகத் தூளைச் சேர்த்து நன்கு கலந்து இறக்கிக் கொள்ளவும். (கறி இறுக்கமாக இருத்தல் வேண்டும்)

# பலூடா



**தேவையான பொருட்கள்**

ரின்பால் - 1 ரின், நீர் - 5 கப், சீனி - 2 மேசைக்கரண்டி, றோஸ் எசென்ஸ் - 3 தேக்கரண்டி, நிறமூட்டும் எசென்ஸ் - 3 தேக்கரண்டி (சிவப்பு அல்லது பச்சை), எலுமிச்சம் பழச்சாறு - 1 மேசைக்கரண்டி, கசகசா - 2 மேசைக்கரண்டி.

**செய்முறை**

ஒரு பாத்திரத்தில் பாலையும், சீனியையும் சேர்த்து நீரை விட்டுக் கரைத்து வடித்துக் கொள்ளவும்.

பின் விரும்பிய நிறமூட்டும், எசென்ஸ், றோஸ் எசென்ஸ், எலுமிச்சம் சாறு, கசகசா என்பவற்றைச் சேர்க்கவும்.

(கசகசாவை சுத்தமாக்கி 1/2 கப் நீரில் ஊறவைத்த பின் பாவிக்கவும்)

குளிருட்டியில் 5 அல்லது 6 மணிநேரம் வைத்தெடுத்துப் பரிமாறவும்.

நீருக்குப் பதிலாக ஐஸ் நீரைச் சேர்த்துக் கொண்டால் குளிருட்டத் தேவையில்லை.

விரும்பின் ஜெலியை சிறுசிறு துண்டுகளாக்கிச் சேர்த்தும் கொள்ளலாம்.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளருக்கான சேவைகளை வழங்குவதற்கு வளவசதிகளை எதிர்பார்த்து காத்திருக்கும் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை

யாழ். மாவட்டத்தில் உள்ள மூன்று பிரதான பெரும் பிரிவுகளான வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி வாழ் மக்களுக்கு வைத்திய சேவையை வழங்குவதற்கு பொருத்தமான அமைவிடத்தில் அமைந்துள்ளது அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை. உரிய சேவையை பெறுவதற்கு தன்னை நாடிவரும் நோயாளர்களுக்கு உரியமுறையில் சேவையை வழங்கமுடியாமல் வள வசதிகளை எதிர்பார்த்து காத்துக்கிடக்கின்றது.

வசதியான இடத்தில் பொருத்தமான சேவை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் மக்கள் 18 கிலோமீற்றர் தூரம் பயணம் செய்து யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் செல்கின்றனர். அல்லது ஆயிரக் கணக்கான ரூபாய்களை செலவு செய்து தனியார் வைத்திய சேவையைப் பெற்றுக் கொள்ள வேண்டி இருக்கின்றது. என கவலை தெரிவிக்கின்றனர் பொது மக்கள்.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை யாழ்ப்பாணம்-அச்சுவேலி பிரதான வீதிக்கு மேற்குப் பக்கத்தில் வீதியோரமாக அச்சுவேலியில் அமைந்துள்ளது. நோயாளர் பொதுப் போக்குவரத்து வாகனங்களில் பயணம் செய்து தமக்கான வைத்திய சேவையை பெற்றுக்கொள்ளத்தக்க வசதியான அமைவிடம்.

வைத்தியசாலைக்கான நிர்வாக பிரிவுக்கான மாடிக்கட்டடம் 90 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2009-03-21 ஆம் திகதி வடக்கு மாகாண சுகாதாரச் சேவைகள் சுதேச வைத்தியத் துறை அமைச்சின் செயலாளர் ஆர்.இரவீந்திரனால் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கட்டடத்துக்கான இரண்டு பக்கங்களுக்குமான தொடர் கட்டிடம் 10 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு அண்மையில் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கட்டடத் தொகுதியை அமைப்பதற்கான அமைவிடமானது 10 பரப்பு நிலம் பொதுமக்களின் நிதியுதவியுடன் 10 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட நிதியில் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையால் கொள்வனவு செய்யப்பட்டு வைத்தியசாலையின் பயன்பாட்டுக்கு கையளிக்கப்பட்டது.

இந்தக் கட்டடத்துக்கான காணிக் கொள்வனவுக்குப் பொதுமக்கள் நிதி யுதவியை வழங்கும் போது புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டால் எமக்கான வைத்திய சேவைகளை சொந்த இடத்தில் பெற்றுக் கொள்ளமுடியும் என நம்பிக்கை கொண்டிருந்தனர். அதுவும் 'இலவு காத்த கிளியாக' ஏமாற வைத்தது.

பொருத்தமான அளவு சேவையை வழங்குவதற்கு வைத்தியர் ஆளணி வசதி இல்லை. இரண்டு வைத்தியர்கள் மட்டும் வைத்தியசாலை பொறுப்பதிகாரியுடன் சேவையில் உள்ளனர்.

பொருத்தமான வைத்திய சேவையை வழங்குவதற்கான தாதியர் சேவையை சேர்ந்தவர்களோ, பராமரிப்பு சேவையைச் சேர்ந்தவர்களோ, சிற்றூழியர்களோ, சுத்திகரிப்பு ஊழியர்களோ மற்றும் ஆளணியோ இல்லை எனக் கூறப்படுகின்றது.



வைத்தியசாலையில் இறந்தவர்களையோ இறந்தநிலையில் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்படும் சடலங்களையோ உரிய முறையில் பாதுகாப்பதற்கு 'பிரேத அறை வசதி இல்லை' ஆண்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான வைத்திய விடுதி 1946 ஆம் ஆண்டு வைத்தியசாலை ஸ்தாபித்த பரோபகாரி சேர் சிற்றம்பலம் காடினரால் கட்டப்பட்டு கையளிக்கப்பட்ட பழைய கட்டடம். அதற்கு பொருத்தமான மலசலகூட வசதியோ மற்றும் வசதிகளோ இல்லை. நோயாளர் கால் இடறி விழ வேண்டிய நிலையில் நோயாளர் விடுதியின் தரை அமைப்பு.

இரத்தப் பரிசோதனை செய்வதற்கு பொருத்தமான ஆய்வுகூட உத்தியோகத்தர் இல்லை.

இத்தனைக்கும் 'எக்ஸ்ரே' கருவி சாதனங்களை இணைப்புச் செய்வதற்கான கட்டுமான வசதியுண்டு. எக்ஸ்ரே கருவி சாதனங்கள் உண்டு.

வைத்தியசாலை பொறுப்பதிகாரிக்கான விடுதி மட்டும்தான் உள்ளது. தாதியர் விடுதியோ உதவி வைத்திய அதிகாரிக்கான விடுதியோ இல்லை.

இதயத்துடிப்பை அளவீடு செய்யும் E.C.G கருவி பல ஆண்டுகளாக பழுதடைந்த நிலையில் உள்ளது. அதைப் பராமரித்துப் பயன்படுத்துவதற்கு உரிய தொழில் நுட்ப உத்தியோகத்தர் வசதி இல்லை.

'இல்லை' என்ற பட்டியல் இந்த வகையில் நீண்டு கொண்டே போகும். வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறவரும் நோயாளியின் வெப்பம் அதிகரித்த நெடுமூச்சு நீண்டு கொண்டே போகின்றது. நோயாளரின் உள்ளக் குமுறல்கள் உரியவர்களின் செவிகளுக்கு இன்றுவரை கேட்கவில்லையே என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

**அச்சுவேலி நிருபர்**

# அபிவிருத்திக்காகக் காத்திருக்கும் கட்டைப்பிராய் கிராமம்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிராமங்களில் கட்டைப்பிராய் கிராமமும் ஒன்றாகும். இக்கிராமம் யாழ். - பருத்தித்துறை வீதியில் 3 ஆம் கட்டைக்கு அருகில் உள்ளது.

இங்கு வசித்து வரும் அனைத்து மக்களும் ஒரு தாய் பிள்ளைகள் போல் காலங்காலமாக ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றார்கள்.

இங்கு காலத்துக்குக் காலம் சைவசமய பெரியார்கள் தோன்றி சைவத்தையும் தமிழையும் வளர்த்துவருகின்றார்கள். இதனால் இங்கு சைவமும் தமிழும் தலைநிமிர்ந்து வாழ்கின்றது. இக்கிராமத்தின் மத்தியில் கோவில் கொண்டு எழுந்தருளியிப்பது அருள் மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயமாகும்.

இக்கிராமத்திற்கு இவ்வாலயம் அமைந்திருப்பது ஒரு தனிச் சிறப்பாகும்.

அன்னை முத்துமாரியின் அற்புதங்களை எழுதினால் எழுதிக் கொண்டே போகலாம். இப்பகுதி மக்களின் துன்பங்கள், துயரங்களை அகற்றி வேண்டுவோர்க்கு வேண்டுவதை அம்பாள் அள்ளி வழங்கி வருகின்றாள். அம்பாளின் அற்புதங்களை கேள்விப்பட்டு அயல் கிராம மக்களும் மேற்படி ஆலயத்திற்கு வந்து வழிபட்டு பொங்கல் பொங்கி தங்கள் நேர்த்தி கடனகளை நிறைவேற்றி செல்வதையும் காண முடிகின்றது.

இதைவிட வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் பாடசாலை மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வுகளும் தவறாது நடைபெற்று வருகின்றன. இதைவிட விசேட தினங்களில் விசேட பூஜை வழிபாடுகள் அன்னதானங்கள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

நயினை அருள் மிகு நாகபூஷினி ஆலய உற்சவ காலங்களில் மேற்படி ஆலயத்தின் வருடாந்த உற்சவமும் இடம்பெறுவது வழக்கமாகும்.

15 தினங்கள் வருடாந்த உற்சவம் இடம் பெற்று நிறைவுபெறும். உற்சவ தினங்களில் அடியார்களுக்கு தினமும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, மேற்படி வீதியில் உள்ள பிரதான வீதி தற்பொழுது பெய்துவரும் மழை காரணமாக இங்குள்ள குண்டு குழிகளில் மழை வெள்ளம் நிரம்பி சிறுசிறு குளங்கள் போல் காணப்படுகின்றன. இதனால் மேற்படி வீதியால் செல்லும் பாதசாரிகளும் வாகனங்களும் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றன.

இவ்வீதியை புனரமைத்துத் தருமாறு மக்கள் நீண்ட நாட்களாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிவருகின்றனர். இனியாவது கோப்பாய் பிரதேச சபை அதிகாரிகள் இவ்வீதியை புனரமைக்க முன்வருவார்களா?

இது இவ்வாறு இருக்க பருத்தித்துறை வீதியில் குறுக்காக செல்லும் கலைமணி வீதி ஆரம்பிக்கும் இடத்தில் மின்சாரம் இன்மையால் பல வீதி விபத்துக்கள் இடம் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் தனது தேநீர் கடையை பூட்டிவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிய குடும்பஸ்தர் ஒருவர் எதிரே வந்த மோட்டார் சைக்கிளில் மோதுண்டு இறந்துள்ள சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனியாவது மேற்குறிப்பிட்ட இடத்தில் வீதி விளக்குகளைப் பொருத்துமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அத்தோடு கலைமணி வீதிக்கு குறுக்காக செல்லும் ஞானவைரவர் ஆலய வீதியும் நீண்ட காலமாக புனரமைக்காமல் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

ஆகவே இவ்வீதிக்கு கல் போட்டு தார் ஊற்றி இவ்வீதியை செப்பனிட்டு உதவும் படியும் கோரிவருகின்றனர். அண்மையில் கட்டைப்பிராய் கிராமத் திலுள்ள ஒரு வீட்டில் இரவு மின்சாரம் துண்டிக்கப்பட்ட நேரத்தில் இனம் தெரி யாத திருடர்கள் வீட்டிற்குள் புகுந்து பெறுமதியான பொருட்களை திருடிச் சென்றுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மக்கள் இரவு நேரங்களில் திருடர்களுக்க அஞ்சி விடிய விடிய கண் விழித்து வருகின்றார்கள். அடிக்கடி மின்சாரம் துண்டிப்பதால் மாணவர்கள் கல்வி கற்க முடியாது கஷ்ரப் படுகிறார்கள்.

கிராமத்தில் அறநெறிப் பாட சாலைகளை அமைத்து மாணவர்களுக்கு இளமைக் காலத்திலேயே இறைசிந்தனையை ஊட்டி வளர்க்க வேண்டும்.

**வேலணை நிருபர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்

# சிந்தில்லா



சிந்தில்லா ஒரு ஏழைக் குடும்பப் பெண். அவள் பிறந்தவுடனே அவளது அம்மா இறந்துவிட்டார். அதனால் அவளது அப்பா மறுமணம் செய்தார். அவர் மறுமணம் செய்த பின்னர் அவருக்கு 2 பிள்ளைகள். அவர்கள் தமக்கு பிள்ளைகள் பிறந்தவுடன் சிந்தில்லாவை வெறுத்தனர். அவளை ஒரு வேலைக்காரியாக நடத்தினர். ஒரு நாள் மன்னன் ஊர்மக்கள் எல்லோரையும் ஒரு விழாவிற்கு அழைத்திருந்தான். அது சிந்தில்லாவிற்கு தெரியவந்தது. அந்த நேரம் அவளது சித்தி சித்தியின் பிள்ளைகள் அவளது அப்பா என எல்லோரும் அரசன் விழா எடுக்கும் இடம் செல்ல உடைகள் ஆபரணங்கள் என்பன அணிந்துசெல்லும் போது சித்தி உங்களுடன் நானும் வருகிறேன் என சிந்தில்லா கேட்டாள். அதற்கு அவளின் சித்தி வேண்டாம் நீ அங்கு வரவேண்டாம். ஏனென்றால் உனக்கு உடைகள் ஒன்றும் இல்லை. இந்த கிழிந்த ஆடையுடன் அங்கு வர வேண்டாம். என மறுத்துவிட்டு எல்லோரும் சென்றனர்.

சிந்தில்லா தான் பாவம் அழுது கொண்டு தனது அறைக்கு ஓடிச் சென்று கட்டில் விழுந்து விம்மி விம்மி அழுதாள். அப்போது ஒரு தேவதை வந்தது அது சிந்தில்லாவைப் பார்த்து ஏன் அழுகிறாய் என வினாவியது. அதற்கு சிந்தில்லா நடந்தவற்றை கூறினாள். உடனே தேவதை, சரி. நான் உன்னை ஆடை ஆபரணங்கள் எல்லாம் அணிவித்து ஆடம்பரமாக அனுப்பி வைக்கிறேன். ஆனால் நீ அரை மணித்தியாலயம் தான் அங்கு இருப்பாய். பல நேரம் கழித்து இருந்தாய் என்றால் நீ பழைய படி கிழிந்த உடுப்புடன் காணப்படுவாய் என்றது. சிந்தில்லாவும் சரி என்று கூறிவிட்டு அவள் வீட்டிற்கு முன்னின்ற குதிரை வண்டியில் ஏறி இருந்து விழா நிகழும் இடத்தை அடைந்தாள். அவள் அங்கு வந்து இருந்ததும் எல்லோரும் அவளை வைத்தகண் வாங்காமல் பார்த்தனர். அரசனது தந்தையும் அவளைப் பார்த்தார். திடீரென்று சிந்தில்லா நேரத்தைப்பார்த்தாள் நேரம் 1/2 மணித்தியாலயதிற்கு 5 நிமிடம் இருந்தது. அப்பொழுது அரசன் அவளைப் பார்ப்பதற்கு வந்தான். அதற்கு அவள் குதிரை வண்டியின் மிது ஏறி உட்கார்ந்து சென்றுவிட்டாள். அரசன் வந்து பார்த்த போது அவளது ஒரு சப்பாத்து விழுந்து கிடந்தது. அவன் அதை எடுத்தான். அதிகாலை அவன் கிராமம் சென்று இது யாருடைய சப்பாத்து எனக் கேட்டான். உடனே ஒருவரும் பதில் அளிக்கவில்லை. அப்போது அந்த கிராமத்துப் பெண்கள் ஒவ்வொருவரும் வந்து அந்த சப்பாத்தை அணிந்து பார்த்தனர். அவர்களுக்கு அது அளவில்லாமல் இருந்தது. அவர்களுள் சிந்தில்லாவும் சென்றாள். அவள் போட்ட போது அது அளவாக இருந்தது. உடனே இளவரசன் அவளைச் கூட்டிச் சென்று திருமணம் செய்தான்.

த.சரண்யா தரம் 6ஏ
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

# பொம்மை



சின்னச்சின்ன
பொம்மை
சிரிக்கும் நல்ல
பொம்மை
அன்னை தந்த
பொம்மை
ஆட்டம் ஆடும்
பொம்மை
வண்ணச் சட்டை
போட்டு
வடிவாய்ச் சிரிக்கும்
பொம்மை
என்னைப் போல
சிரிக்கும்
எழுந்து நின்று
சிரிக்கும்.

த.பிரணவி
பாலர் முன்பள்ளி



செ.இலக்கியா தரம் 5
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூர்



வி.சதுயன்
யா/கைதடி கலைவாணி வித்தியாசாலை

# யானை



"யானை வரும்
பின்னே
மணியோசை
வரும் முன்னே"
என்ற பழமொழி எல்லோரும் கேட்டிருப்பீர்கள்.

- யானையின் துதிக்கையில் எலும்புகள் இல்லை.
- யானைக்கு கிட்டப்பார்வை மட்டும்தான் உள்ளதாம்.
- இந்தியப் பெண் யானைகளுக்குத்தான் தந்தம் கிடையாது. ஆனால் ஆபிரிக்க பெண் யானைகளுக்கு தந்தம் உள்ளது.
- பொதுவாகவே பெண் யானைகளுக்கு மதம் பிடிப்பதே கிடையாதாம்.
- யானையின் இரண்டு தந்தங்களும் சம அளவில் இருப்பதில்லை.
- யானைக்குட்டிக்கு 3 முதல் 5 வயதுக்குள்

சிறுவர்களே உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**

'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# இலங்கையின் நெடுஞ்சாலைகள்

| நெடுஞ்சாலை இலக்கம் | இணைப்பு நகரங்கள் | நீளம் (கி.மீ) |
|---|---|---|
| ஏ1 | கொழும்பு-கண்டி | 116 |
| ஏ2 | கொழும்பு-வெல்லவாய | 318 |
| ஏ3 | பேலியகேட-புத்தளம் | 128 |
| ஏ4 | கொழும்பு-மட்டக்களப்பு | 430 |
| ஏ5 | பேராதனை-செங்கலடி | 283 |
| ஏ6 | அம்பேபுஸ்ஸ-திருக்கோணமலை | 192 |
| ஏ7 | அவிசாவளை-நுவரெலியா | 120 |
| ஏ8 | பாணந்துறை-இரத்தினபுரி | 60 |
| ஏ9 | கண்டி-யாழ்ப்பாணம் | 318 |
| ஏ10 | கடுஸ்தோட்ட-புத்தளம் | 125 |
| ஏ11 | மரதன்கடவல-வாழைச்சேனை | 126 |
| ஏ12 | புத்தளம்-திருகோணமலை | 179 |
| ஏ13 | கல்குளம்-அநுராதபுரம் | 10 |
| ஏ14 | மதவாச்சி-தலைமன்னார் | 110 |
| ஏ15 | மட்டக்களப்பு-திருகோணமலை | 137 |
| ஏ16 | பெரகல-ஹாவாளிஅல | 39 |
| ஏ17 | காலி-மாதம்பே | 144 |
| ஏ18 | பெல்மதுனை-நோனாகம | 86 |
| ஏ19 | பொல்ஹகாவெல-கேகாலை | 11 |
| ஏ20 | அநுராதபுரம்-ரம்பேவ | 14 |
| ஏ21 | கேகாலை-கரவவனெல | 42 |
| ஏ22 | பஸ்சர-மொனராகலை | 34 |
| ஏ23 | வெள்ளவாய-கூபல்வெல | 30 |
| ஏ24 | மாத்தறை-அக்குரஸ்ஸ | 20 |
| ஏ25 | சியம்பலாண்டுவ-அம்பாறை | 56 |
| ஏ26 | கண்டி-பதியத்தலாவ | 104 |
| ஏ27 | அம்பாறை-மஹாஓயா | 56 |
| ஏ28 | அநுராதபுரம்-பாதவியா | 85 |
| ஏ29 | வவுனியா-கொரபொத்தானை | 45 |
| ஏ30 | வவுனியா-பரயனபலன்குளம் | 35 |
| ஏ31 | காரைதீவு-அம்பாறை | 24 |
| ஏ32 | நாவற்குழி-மன்னார் | 98 |
| ஏ33 | ஜாஎல-யக்கல | 37 |
| ஏ34 | மாங்குளம்-முல்லைத்தீவு | 48 |
| ஏ35 | பரந்தன்-முல்லைத்தீவு | 53 |

நேசராஜ்குமார் வித்யாசாகர்
தரம் 07
கிளி/கிளிநொச்சி ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்தை தொடர்ந்து ஜோர்தானிலும் போராட்டம் வெடித்தது; மந்திரிசபை கலைப்பு

எகிப்தைத் தொடர்ந்து ஜோர்தானிலும் போராட்டம் வெடித்தது. இதனையடுத்து மந்திரி சபையும் கலைக்கப்பட்டது. தியுனிசியா மற்றும் எகிப்தைத் தொடர்ந்து அரபுநாடான ஜோர்டானிலும் பொது மக்களின் போராட்டம் வெடித்தது.

அங்கு சமீர் ரீபை பிரதமராகப் பதவி வகித்துவந்தார். அவரது ஆட்சியில் வேலையில்லாப் பிரச்சினை மற்றும் எரிபொருள், உணவுப் பொருட்களின் விலை பல மடங்கு உயர்ந்தது.


எனவே, பிரதமர் பதவிவிலக வேண்டும் எனவும், புதிய பிரதமரை மக்களே நேரடியாக தேர்ந்தெடுக்க வேண்டும் எனவும் அதற்காக அரசியல் சட்டத்தில் மறுசீரமைப்புச் செய்யப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுமக்கள் வீதிகளில் ஒன்று திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டதனால் வன்முறை வெடித்தது.

இதைத் தொடர்ந்து அது கலவரமாக மாறியது. நிலைமை கட்டுக்கடங்காமல் மோசமடைந்து சென்றதால் நிலைமையைச் சமாளிக்க ஜோர்டான் மன்னர் அப்துல்லா இரண்டு அதிரடி முடிவுகளை மேற்கொண்டார். பிரதமர் சமீர் ரிபை தலைமையிலான மந்திரி சபையைக் கலைத்து புதிய பிரதமராக மரூப் அல்-பகித் என்பவரை நியமித்தார்.

மேலும், நாட்டில் ஏற்பட்டுள்ள வேலையில்லாப் பிரச்சினை, மற்றும் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தவும், பிரதமரை நேரடியாக தேர்ந்தெடுப்பதற்கான அரசியல் சட்டத்தை மாற்றவும் மன்னர் அப்துல்லா உத்தரவிட்டார்.

இதைத் தொடர்ந்து மக்களின் போராட்டம் கட்டுக்குள் வந்தது.



ஜப்பானின் கியுஷூ தீவிது கிறிஷிமா மலைத்தொடரில் அமைந்துள்ள ஷின் மோடேக் எரிமலை குமுறி தொடர்ந்து புகையையும் சாம்பலையும் வெளியேற்றி வருகிறது. இதன் காரணமாக புதன்கிழமை டோக்கியோ நகருக்கான சில சர்வதேச விமான சேவைகள் தாமதத்தை எதிர்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

# அவுஸ்திரேலியாவில் புயல் மழை; ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றம்



அவுஸ்திரேலியாவில் பெய்துவரும் புயல் மழையைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான மக்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு அவுஸ்திரேலியாவின் வட - கிழக்கில் உள்ள குயீன்ஸ்லாந்து மாகாணத்தில் புயல் தாக்கியது. இதன் தாக்கத்தால் பெய்த பலத்த மழையால் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டது.

தற்போது நிலைமை ஓரளவு சீரடைந்து வரும் நிலையில், மீண்டும் அங்கு புதிய புயகாற்று வீச ஆரம்பித்துள்ளது. அதற்கு புயாசிபூ என பெயரிடப்பட்டுள்ளது.

இப்புயல் காற்று காரணமாக கெய்ன்ஸ் நகரில் கடும் மழையும் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே, நேற்று யாசி புயல் கரையைக் கடந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அங்குள்ள விமானநிலையம் மூடப்பட்டுள்ளது. வெள்ளப்பெருக்கு அதிகரித்து வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்ததால், அப்பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் விமானங்கள் மூலம் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

## பிரிட்டனில் தங்குவதற்காக மோசடி திருமணம்

லண்டன்:

பிரிட்டனில் தங்குவதற்காக, அந்நாட்டு பெண்ணை போலியாக திருமணம் செய்ய முயன்ற இந்தியர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பிரிட்டனில் தங்கி வேலை பார்ப்பதற்காக, அந்நாட்டு குடியுரிமை பெறுவதற்காக, அங்குள்ள பெண்களை போலியாக திருமணம் செய்யும் வழக்கம், மறைமுகமாக நடந்து வருகிறது.

இது போன்ற திருமணங்களை தடுப்பதற்காக, அந்நாட்டு குடியேற்றத்துறை அமைச்சகம் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

# "நான் கடவுள்" என கூறியவர் ஈரானில் தூக்கிலிடப்பட்டார்

தெஹ்ரான்:

ஈரான் நாட்டில் தன்னை கடவுளாக கூறி மக்களை ஏமாற்றி, ஊழலில் ஈடுபட்டு வந்தவர் தூக்கிலிடப்பட்டார். ஈரானை சேர்ந்த அப்துல்ரீசா கராபத். இவர் தன்னை கடவுளாக கூறி குலுஸ்தான் மாகாண மக்களை ஏமாற்றி, ஊழலில் ஈடுபட்டு வந்தார். இதை கண்டுபிடித்த அரசு நிர்வாகம் நேற்று முன்தினம் அவரை தூக்கிலிட்டது. கடந்த மாதத்தில் மட்டும் ஈரான் அரசு, 67 பேரை குற்றவாளிகளாக அறிவித்து தூக்கிலிட்டது.

ஈரான் நாட்டில் பிறந்து வளர்ந்த வெளிநாட்டு பெண் சாரா பஹ்ரமி (46). உறவினர் வீட்டிற்கு சென்றிந்தபோது அரசுக்கு எதிராக பேசியதால் அவரும் தூக்கிலிடப்பட்டார்.

# குடல் புற்றுநோயை ஆரம்ப கட்டத்தில் இனங்கண்டறியும் நாய்கள்



குடல் புற்றுநோயை ஆரம்ப கட்டத்திலேயே நுகர்ந்து கண்டறியும் ஆற்றலை நாய்கள் பெற்றுள்ளதாக புதிய ஆய்வொன்று கூறுகிறது.

நாய்கள் குடல்புற்றுநோயை மட்டுமல்ல ஏனைய புற்றுநோய்களையும் கண்டறியும் வல்லமையை கொண்டிருப்பதாக மேற்படி ஆய்வை மேற்கொண்ட ஜப்பானிய விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

சில வகை புற்றுநோய்களின் போது வெளிப்படும் குறிப்பிட்ட இரசாயன உள்ளடக்கங்கள், நோயாளியின் சுவாசம் மற்றும் மலத்தில் காணப்படுவதாக நம்பப்படுகிறது.

இந்நிலையில் இந்த இரசாயனங்களை நுகரும் நாய்கள் நோயை இனங்கண்டறிவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

குடல்புற்று நோயால் பாதிக்கப்பட்ட 48 பேரிடமும் ஆரோக்கிய நிலையிலுள்ள 258 பேரிடமும் நாய்களைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட 74 நுகர்வு பரிசோதனைகள் மூலமே 'இந்த உண்மை கண்டறியப்பட்டுள்ளது. குடல் புற்றுநோயானது சுவாச நுகர்வின் மூலம் 95 சதவீதமும் மல நுகர்வின் மூலம் 98 சதவீதமும் புற்றுநோய் துல்லியமாக இனங்காண்டறியப்பட்டதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

ஆரம்பகட்டத்தில் குடல் புற்றுநோயைக் கண்டறிவது அதனை குணப்படுத்தும் வாய்ப்பை அதிகரிப்பதாக உள்ளது.

மேலும் சிறுநீர்பை, தோல், மார்பு மற்றும் கருப்பை புற்றுநோய்களையும் நாய்கள் முகர்ந்து கண்டறியும் திறமையைப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# இந்துக்களுக்கு பாதுகாப்பு வழங்க பாகிஸ்தானிய எம்.பி.க்கள் வலியுறுத்தல்

இஸ்லாமாபாத்:

பாகிஸ்தானில் வாழும் இந்துக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை தடுக்கும்படி அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

பாகிஸ்தானின் பலுஜிஸ்தான் மாகாணத்தில் 82 வயதான லக்மிசந்த் என்ற இந்து ஆன்மிக தலைவரை கடத்தல்காரர்கள் கடத்திச்சென்று கணிசமான பணம் வசூலித்தனர். அதேசமயம், 66 வயதான பாகிஸ்தானிய இந்து அரசியல்வாதியான ராமசிங் சோதோ என்பவர் அங்குள்ள சமூக விரோதிகளின் மிரட்டலுக்கு பயந்து சமீபத்தில் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார்.

அதுமட்டுமல்லாமல் பலுஜிஸ்தானிலுள்ள 27 இந்துக் குடும்பங்கள் அங்குள்ள அச்சுறுத்தல்களை சமாளிக்க முடியாமல் இந்தியாவில் அரசியல் தஞ்சம் அடைவதற்கு விண்ணப்பம் செய்துள்ளன. இந்த சம்பவங்கள் குறித்து பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் விவாதித்தனர்.

பாகிஸ்தானில் வசிக்கும் சிறுபான்மை மக்களுக்கு சமத்துவம் அளிக்கப்படும் என்ற 73 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சட்டம் ஒழுங்காக பின்பற்றப்படுவதில்லை. பணத்துக்காக இந்துக்கள் கடத்தப்படுவது தடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். என ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான பல்வாஷாகான் நட யூஸுப் ஆகியோர் வற்புறுத்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபைக்கு தேசிய 'சுவர்ணபுரவ' விருது

(அலுவலக நிருபர்)


அகில இலங்கை ரீதியில் 2008 ஆம் ஆண்டுக்கான தேசிய விருதான 'சுவர்ண புரவ' என்ற விருதினை நல்லூர் பிரதேச சபை சுவீகரித்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

1977 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் இவ்விருது வழங்கப்பட்டு வருகின்றது. இருந்தும் முதன்முதலில் இவ் விருதைப் பெற்றுக் கொண்ட தமிழ்ப் பகுதியிலுள்ள பிரதேச சபையாக நல்லூர் பிரதேச சபை திகழ்கின்றது.

வட மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் வரும் உள்ளூராட்சித் திணைக்களத்தின் 34 உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து வட மாகாணத்தின் முதன்மைப் பிரதேச சபையாக நல்லூர் பிரதேச சபையானது தேசத்துக்கு மகுடம் தேசிய கண்காட்சி நிகழ்வில் பங்கு பற்றுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக் கண்காட்சியானது இலங்கையின் 63 ஆவது சுதந்திர தினமான இன்று வெள்ளிக்கிழமை மொனராகலை மாவட்டம் புத்தல நகரில் நடைபெறவுள்ளது.

இதற்கான தெரிவை வட மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ். ரங்கராஜா வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி பி. சிவலிங்கம் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.




COLOMBO STOCK EXCHANGE

## பங்குச்சந்தை யாழ்ப்பாணம்

மாசி 02 2011

| பங்குசந்தைச் சுட்டிகள் | இன்று | நேற்று |
|---|---|---|
| அனைத்துப் பங்கு (ASPI) | 7262.26 | 7190.77 |
| மிலங்கா (MPI) | 7150.94 | 7121.28 |
| **உரிமைமுதல் தகவல்கள்** | | |
| வியாபாரப்புரள்வு (Rs.) | 4137.71 Mn | |
| பங்குகளின் அளவு (Nos.) | 111.21 Mn | |
| வியாபாரம் (No.) | 41075 Nos | |
| சந்தை முதல்( mkt.Cap (Rs) | 2.41 Bn | |
| **விலை அசைவுகளின் அடிப்படையில்** | | |
| **அதிகரிப்பு (Top 5 gainers)** | **விலை (Rs)** | **+%** |
| முல்லர் | 3.20 | 23.00 |
| லங்கெம் சிலோன் | 48.40 | 19.80 |
| சிறி அக்கிறி பாம் | 218.20 | 18.91 |
| கெமிக்கல் இன்டர்சீஸ்(X) | 127.10 | 18.34 |
| சொவர்லொஜிக் பினான்ஸ் | 68.20 | 15.99 |
| **குறைவு (Top 5 Losers)** | **விலை(Rs)** | **(-)%** |
| எஸ்.எம்.பி.லீசிங் ((W) | 0.70 | 12.50 |
| சிற்றஸ் (W) | 43.90 | 6.60 |
| சிங்க புத்திர | 130.00 | 6.41 |
| சிற்றஸ் (W) | 37.70 | 6.22 |
| செலிங்கோ இன்சூரன்ஸ் | 270.00 | 5.26 |

## பொதுக்கூட்டம்

கொடிகாமம்

தென்மராட்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்குக்கிடையிலான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை 10 மணிக்கு தென்மராட்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமென பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் சக்திவேல் அறிவித்துள்ளார்.

இக் கூட்டத்திற்கு விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளைத் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

# யாழ். மாநகர சபையால் உணவகம் 'சீல்'வைப்பு

(அலுவலக நிருபர்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட யாழ்ப்பாணம், குருநகர் - கதீற்றல் வீதியில் இயங்கிவந்த உணவகம் ஒன்று சுகாதார விதிமுறைகளுக்கு முரணாக இயங்கி வந்தமையையடுத்து யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவால் நேற்று முன்தினம் சீல்வைத்து மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் சுகாதார விதி முறைக்கு முரணாக பல உணவகங்கள் இயங்கி வருகின்றன. நேற்று முன்தினம் யாழ். மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் பொலிஸாருடன் இணைந்து சுகாதர சீர்கேடாக இயங்கிவரும் உணவகங்களில் சோதனை நடத்தினர்.

குருநகரில் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகில் இயங்கிவரும் உணவகம் ஒன்றில் சோதனை நடத்தியபோது பாவனைக்குதவாத உணவுப் பொருட்கள் மற்றும் தின்பண்டங்கள் என்பவற்றைக் கைப்பற்றி அழித்துள்ளனர்.

இவ் உணவகத்தில் உணவு தயாரிக்கும் இடம் துர்நாற்றம் வீசியும் இலையான்களின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்பட்டதாலும் கழிவகற்றும் செயற்பாடுகள் திருப்திகரமானதாக இல்லாமையாலும் மேற்படி உணவகத்தை 'சீல்' வைத்து மூடியுள்ளதாகவும் யாழ். மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பகீரதன் தெரிவித்துள்ளார்.


யாழ். மாநகர முதல்வரின் அறிவுறுத்தலின்படியே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பல்லாயிரம் ரூபா செலவில் இராட்சத திமிங்கலம் புதைப்பு

வடமராட்சி

பருத்தித்துறை முனைக் கடற்கரையில் அண்மையில் இறந்த நிலையில் கரை ஒதுங்கிய இராட்சத திமிங்கிலம்துண்டு துண்டுகளாக வெட்டப்பட்டு அப்பகுதியில் குழி ஒன்றில் புதைக்கப்பட்டது.

33 அடி நீளமும் 16 அடி சுற்றளவும் கொண்ட 10 ஆயிரம் கிலோ கிராம் எடை கொண்ட திமிங்கிலம் இறந்த நிலையில் கரையொதுங்கியது. இறந்த இந்த திமிங்கிலத்தால் சுற்றுப்புறச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுவதுடன் அப்பகுதி குடியிருப்பாளர்களுக்கும் சுகாதாரத்துக்கு கேடு விளைவிக்கும் என்பதைக் கருத்திற் கொண்டே புதைக்கப்பட்டது. பருத்தித்துறை நகர சபை 'பெக்கோ' மூலம் இராட்சத திமிங்கிலத்தைத் துண்டு துண்டாக வெட்டி பாரிய குழி ஒன்றினுள் போட்டு புதைத்துள்ளது. இதற்கு 40 ஆயிரம் ரூபாவுக்கு மேல் செலவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



புலோலி சின்னத்தாய்ப் பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற திருவாசக முற்றோதல் நிகழ்வில் அடியார்கள் திருவாசகம் ஓதுவதைப் படத்தில் காணலாம்.

(படம்:- வடமராட்சி நிருபர்)

# கல்வி நிர்வாக சேவை தரம் - III பரீட்சார்த்திகளின் வயதெல்லை நீடிப்பு

கல்வி அமைச்சினால் நடத்தப்படும் கல்வி நிர்வாகச் சேவை தரம் III வகுப்பிற்கான போட்டிப் பரீட்சைக்குரிய வயதெல்லை தளர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நடத்தப்படும் மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஆகக்கூடிய வயதெல்லை 45 ஆக இருந்தது. ஆனால் இவ் வயதெல்லை தளர்த்தப்பட்டுள்ளதாகவும் விரைவில் வர்த்தமானி மூலம் மேலதிக விவரங்கள் அறிவிக்கப்படும் என்றும் கல்வி நிர்வாக சேவை - III ஆம் வகுப்புக்கான பரீட்சைக்குரிய விண்ணப்ப முடிவுத் திகதி இம் மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்காலிக கூடாரங்கள் வழங்கல்

செங்கலடி,

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் வீடுகள் முழுமையாகச் சேதமடைந்த குடும்பங்களுக்கு தற்காலிக கூடாரங்களை அனர்த்த முகாமைத்துவ அமைச்சு வழங்கியுள்ளது.

பட்டிப்பளை மற்றும் ஏறாவூர் தாமரைக் கேணி ஆகிய பிரதேசங்களில் வெள்ளத்தினால் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு முதற்கட்டமாக இக்கூடாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜப்பான் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இக்கூடாரங்களை உரிய முறையில் அமைத்துக் கொடுக்கும் பணியில் இராணுவ வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தினால் தமது வீடுகளை இழந்த இம்மக்கள் சுமார் ஒரு மாதத்திற்கும் மேலாக பொதுக் கட்டிடங்கள் மற்றும் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்தனர்.

ஏறாவூர் தாமரைக்கேணி பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான கூடாரங்களை பதில் பிரதேச செயலாளர் என். நவரூபரஞ்சனி பொறுப்பேற்றார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் மூவாயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஆன போதிலும் ஐம்பது பேருக்கு மாத்திரமே இத் தற்காலிக கூடாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# கல்வி நிருவாக சேவை பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு உச்ச வயதெல்லை நீடிப்பு; புதிய அறிவிப்பு விரைவில்

### தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் மகா சிவம்

(காரைதீவு நிருபர்)

இலங்கை கல்வி நிருவாக சேவை தரம் III மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான உச்ச வயதெல்லை நீக்கப்படும், அத்துடன் விண்ணப்பிப்பதற்கான கால எல்லையும் நீடிக்கப்படும்.

அதற்கான புதிய வர்த்தமானி அறிவித்தல் மிக விரைவில் வெளியிடப்படுமென கல்வியமைச்சரோடு நடத்திய பேச்சு வார்த்தையில் பலன் ஏற்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

மேற்படி பரீட்சைக்கான உச்ச வயதெல்லை 45 எனவும் விண்ணப்ப முடிவுத் திகதி ஜனவரி 31 என்றும் டிசெம்பர் 31 வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ் உச்ச வயதெல்லை ஆயிரக்கணக்கான அதிபர், ஆசிரியர்களை பாதித்துள்ளதாக செயலாளர் த. மகாசிவம் கல்வியமைச்சரிடம் சுட்டிக்காட்டியதையடுத்து உச்ச வயதெல்லை நீடிக்கப்பட்டு புதிய அறிவித்தல் வெளிவரவிருக்கிறது.

அதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஓரிரு நாட்களில் புதிய விளம்பரம் வர்த்தமானிப் பிரகடனம் செய்யப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# பாம்புக் கடிக்கு இலக்காகி சிறுமி பரிதாபமாக உயிரிழப்பு

வாழைச்சேனை,

வாகரையிலுள்ள தட்டுமுனையைச் சேர்ந்த பத்துவயது சிறுமி ஒருவர் பாம்புக் கடிக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு காவேரிகுளம் வயலில் தனது பெற்றோர்களுடன் காவல் குடிசையில் உறங்கிக் கொண்டிருந்த மயில்வாகனம் கஜேந்தினி வயது (10) என்ற சிறுமியே பாம்புக் கடிக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். இவர் வாகரை மகாவித்தியாலயத்தில் ஐந்தாம் தரத்தில் கல்வி பயின்று வந்துள்ளார்.

குறித்த சிறுமி வாகரை வைத்தியசாலையில் இருந்து வாழைச்சேனை வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனளிக்காது உயிரிழந்துள்ளார்.

# வெல்லாவெளி பிரதேச மக்களுக்கு மனிதாபிமான உதவிகள்

மண்டூர்,

வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல அரச சார்பற்ற அமைப்புகளும் அரச நிறுவனங்களும் மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளதாக போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் உ. உதயசிறிதர் தெரிவித்தார்.

சேவா லங்கா, கெயார், யுனிசெப், சேவ்த சில்றன் ஆகிய அரச சார்பற்ற நிறுவனத்தினரும் வவுனியா பொது வைத்தியசாலை, சமுர்த்தி அதிகார சபை, சங்கானை பிரதேச செயலகம் முதலிய அரச நிறுவனங்களும் இந்த உதவிகளை வழங்கியுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் அவர் இந்த நிறுவனங்களுக்கு நன்றியை தெரிவித்துள்ளார்.

# விசேட வைத்திய நிபுணர் குழுவால் வைத்திய முகாம்

தோப்பூர்,

மூதூர் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு பல்வேறு நோய்களுக்கும் உள்ளாகிய மக்களுக்கு தேவையான இலவச வைத்திய சிகிச்சையினை கொழும்பிலிருந்து வருகை தந்த விசேட வைத்தியர் குழுவினர் கடந்த 27, 28 ஆம் திகதிகளில் நடத்தி உள்ளனர்.

தூர கஷ்டப் பிரதேசங்களிலிருந்தும் வருகை தந்த நோயாளர்களில் 2500 க்கும் மேற்பட்ட நோயாளர்கள் ஆனைச்சேனையில் இடம்பெற்ற இம்மருத்துவ முகாமில் சிகிச்சைகளைப் பெற்றுக் கொண்டதாகவும் அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மக்களுக்காக இலவசமாக வழங்கி வரும் இவ்வாறான வைத்திய சிகிச்சைகள் பல்வேறு அமைப்புக்கள் மூலமாகவும் முன்னெடுக்கப்பட்டு வருவதையிட்டு பண வசதி அற்ற பாதிக்கப்பட்ட நோயாளர்கள் மிகுந்த திருப்தி கொண்டுள்ளனர்.

# 400 குடும்பங்களுக்கு றோட்டரி கழகத்தால் 6 இலட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுகள்


மண்டூர்

கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பெண்டுகள்சேனை, தாராகாடு பூராவெளி, முருக்கன் தீவு ஆகிய பகுதிகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 400 குடும்பத்தினருக்கு மட்டக்களப்பு றோட்டரிக் கழகம் 6 இலட்சம் ரூபா பெறுமதியான மனிதநேய உதவிகளை வழங்கியுள்ளது.

மேலும் கோயில் போரதீவு கிராமத்தில் 92 குடும்பங்களுக்கும் நொச்சிமுனை கிராமத்தில் 140 குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. மண்டூர், வேத்துச்சேனை, காத்தான்குடி, கிரான் ஆகிய பகுதிகளில் மருத்துவ முகாம்களும் றோட்டரிக் கழகத்தினால் நடத்தப்படவுள்ளன.

மேற்படி றோட்டரி கழக தலைவர் பிரேலோ ஹண்டி, செயலாளர் சி.புண்ணியமூர்த்தி மற்றும் எஸ்.ரி.ஜோர்ஜ். (கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர்) ஆகியோர் அடங்கிய குழுவினர் இம் மனித நேயப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.





அம்பாறை சேனநாயக்கா சமுத்திரத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டதன் காரணமாக கல்முனை நகரையும் நாவிதன்வெளி பிரதேச கல்லோயா குடியேற்ற கிராமங்களையும் இணைக்கும் கிட்டங்கி தாம்போதியின் மேலாக வெள்ள நீர் கரைபுரண்டோடுவதையும் மக்கள் பயணிக்க முடியாது வீதிகளில் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- நற்பிட்டிமுனை மேலதிக நிருபர்)

# வைத்தியசாலையின் நிலைமை தொடர்பாக விசேட கலந்துரையாடல்

புளியந்தீவு,

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் தற்போதைய நிலைமை குறித்து ஆராயும் விசேட கலந்துரையாடல் மீள்குடியேற்ற பிரதியமைச்சரின் மட்டக்களப்பு அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. வைத்தியசாலையின் தற்போதைய நிலை, சுகாதாரத் தொண்டர்களின் நிரந்தர நியமனம், வைத்தியசாலையில் கையொப்பமிட்டுவிட்டு எவ்வித வேலையும் செய்யாமல் நிருவாகத்தில் தலையிட்டுக் கொண்டிருக்கும் ஊழியர்களின் விடயம், மருத்துவத் தாதி ஒருவருக்கு அண்மையில் நடந்த சம்பவம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கின்றது

மஸ்கெலியா,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அரசியல் கட்சிகள் வேட்பாளர்களை நியமித்து இதுவரையில் தேர்தல் திணைக்களத்தின் மூலம் இலக்கங்கள் வழங்கப்படாதுள்ள போதிலும் மலையகத்தில் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்து வருவதைக் காண முடிகின்றது.

தேர்தலில் போட்டியிடும் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்று உறவினர்களையும் நண்பர்களையும் சந்தித்து அளவளாவி தமக்கு வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திவருகின்றார்கள். அதே நேரம் வேட்பாளர்களுக்குரிய இலக்கங்கள் கிடைக்காத நிலையிலும் ஊடகங்களினூடாக பிரசாரத்தை மேற்கொள்ளும் பணிகளிலும் சில வேட்பாளர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

மேலும், வேட்பாளர்கள் மத்தியில் போட்டா போட்டி எழுந்துள்ள காரணத்தால் தோட்டக் கமிட்டித் தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு 'விருந்து' வைத்துக் கவனிக்கும் கைங்கரியங்களும் ஆங்காங்கே இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. வேட்பாளர்களுக்குரிய இலக்கங்கள் கிடைத்த பின்னர் மேலும் போட்டா போட்டிகள் அதிகரிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## மாசிமக மஹோற்சவம்

(நாவலப்பிட்டி மேலதிக நிருபர்)

நாவலப்பிட்டி- அருள் மிகு ஸ்ரீமுத்துமாரியம்பாள் தேவஸ்தான வருடாந்த மாசி மக மஹோற்சவம் எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெறும்.

அன்றைய தினம் விசேட பூஜை வழிபாட்டுடன் காலை 11.00 மணிக்கு கொடியேற்ற வைபவமும் அதனைத் தொடர்ந்து பகல் அன்னதானமும் வழங்கப்படும். மாலை 5.30 மணிக்கு நித்திய பூஜை, யாக பூஜை, வசந்தமண்டப பூஜை, சுவாமி உள் வீதி வலம் வருதல், பிரசாதம் வழங்கல் இடம்பெறும்.

## கடுமையாகத் தாக்கப்பட்ட தனியார் பஸ் சாரதி வைத்தியசாலையில் அனுமதி

பதுளை,

தனியார் பஸ் சாரதியொருவர் கடுமையாகத் தாக்கப்பட்டு ஆபத்தான நிலையில் பதுளை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதல் சம்பவம் நேற்று முன்தினம் இரவு பதுளை -பேரகெட்டிய என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது.

துளை- குயின்ஸ்டவுன் பெருந்தோட்டத்தைச் சேர்ந்த இப்பஸ் சாரதியை இனந்தெரியாத கும்பலொன்று பொல்லுகளினால் கடுமையாகத் தாக்கியதுடன் அவரிடமிருந்த பத்தாயிரம் ரூபா பணத்தையும் கையடக்கத் தொலைபேசியையும் அபகரித்துச் சென்றுள்ளது.

ஆபத்தான நிலையில் பாதையில் கிடந்த இப்பஸ் சாரதியை அவ்வழியாக வந்தவர்கள் பதுளை அரசினர் மருத்துவ மனையில் அனுமதித்தனர். இவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. இது தொடர்பாக பதுளைப் பொலிஸாருக்கு கிடைத்த புகாரையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விஷேட தேவையுடைய மாணவன் கீழே விழுந்து உயிரிழப்பு

**விளையாடிக்கொண்டிருந்த வேளை சம்பவம்**

பதுளை,

சக மாணவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த விசேட தேவையுடைய மாணவன் ஒருவன் கீழே விழுந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்தில் மரணமானார்.

இச்சம்பவம் மொனராகலைப் பகுதியின் கும்புக்கன் சுபாக்கியா அங்கவீனப் பாடசாலையில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.சி.எய்ச். தம்மிக்க சிந்தக்க என்ற (16வயது) மேற்படி மாணவன் ஆண்டு எட்டில் கல்வி கற்றுவந்தவராவார். இம் மாணவன் சக மாணவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த போது கீழே விழுந்து கடுங்காயங்களுக்குள்ளாகியுள்ளான். இதையடுத்து உடனடியாக மொனரா கலை அரசினர் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதிலும் அங்கு சிகிச்சை பலனின்றி மரண மாகியுள்ளான்.

இச்சம்பவம் தொடர்பாக மொனரா கலை பொலிஸ்நிலையப் பொறுப் பதிகாரி டி.பி.எம்.கலனசூரிய விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.

## மதுபோதையில் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் கைது

பதுளை,

மது போதையில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பதுளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பண்டார ரத்னாயக்கவினால் பதுளை அரசினர் மருத்துவ மனைக்கு முன்னால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் பதுளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்தவரென்றும் குறிப்பிடத்தக்கது.

கைதுசெய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் தான் மது போதையிலிருக்கவில்லையென்று கூறியதையடுத்து அவர் பதுளை அரசினர் மருத்துவமனை சட்ட வைத்திய அதிகாரி எம்.பி.எஸ்.கே. சேனாரத்னவிடம் வைத்திய பரிசோதனைக்குட்படுத்தப்பட்டபோது குறிப்பிட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் மதுபோதையில் இருந்தமை ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. விசாரணையின் பின்னர் குறிப்பிட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படுவாரென்று பொலிஸ் நிலையத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாற்றுதொழிற்சங்க அங்கத்தவர்களை எதிரிகளாக பார்க்கும் மனோபாவத்தை ஊக்குவிக்கக் கூடாது

**சாந்தினிதேவி சந்திரசேகரன் கோரிக்கை**

மாற்று தொழிற்சங்க அங்கத்தவர்களை எதிரிகளாகப் பார்க்கும் மனோபாவத்தை மலையகத் தலைமைகள், தொழிலாளர்கள் மத்தியில் ஊக்குவிக் கூடாது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவி சாந்தினி தேவிசந்திரசேகரன் தெரிவித்துள்ளார். வேட்பு மனுத்தாக்கல் செய்த தன் பின்னர் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் அவர் கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வேறு எந்த துறையினைவிடவும் பெருந்தோட்டத்துறையில் தொழிற்சங்கங்களுக்கிடையிலான போட்டி குரோதமாக வளர்ந்து வருவது வேதனை தருகின்றது. தமக்கிடையிலான போட்டி உணர்வுகளில் உச்சக்கட்டமாக சில தோட்டங்களில் அப்பாவி உயிர்களும் காவு கொள்ளப்படும் வேதனையான சம்பவங்களும் நடைபெற்றுவிடுகின்றன. இந்த மனோ நிலையை மாற்றி; எந்த தொழிற்சங்கத்தில் அங்கத்தவர்களாக இருந்தாலும் கூட தமக்குள் சகோதர உணர்வுகளை வளர்த்துக்கொள்ளும் பக்குவத்தையும் சந்தர்ப்பத்தையும் தொழிற்சங்கங்களுக்கிடையிலான கூட்டு வளர்த்தெடுக்கும். தற்போது தேர்தலுக்காக நாம் அமைத்துள்ள தொழிற்சங்க இணைப்பினை அனைத்துத் தொழிலாளர்களுமே மன நிறைவோடு விரும்புகின்றார்கள். போட்டியில்லாத அன்றாட வாழ்க்கையை மக்கள் விரும்புகின்றார்கள். ஆகவே, தேர்தல் முடிந்தாலும் கூட தொழிற்சங்க தலைமைகள் மக்கள் நலனை முதன்மைப்படுத்தி அவர்களின் மத்தியில்

போட்டி உணர்வுகளை வளர்க்காமல் இருக்கவேண்டும். அமரர். சந்திரசேகரன் தனது காலத்தில் எப்போதுமே தொழிற்சங்க பேதங்களை முன்வைத்து செயற்பட்டதில்லை. தம்மை நாடிவரும் அனைத்து தரப்பு தொழிலாளர்களையுமே ஒரேவிதமாக கவனித்து செயற்பட்டார். எந்த தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் கூட எமது மக்கள் ஒரேவிதமான பிரச்சினைகளுக்கே முகம்கொடுத்து வாழ்கிறார்கள். இந்நிலையில், தேர்தல் காலங்களிலும் அங்கத்தவர்களை சேர்க்கும் காலங்களிலும் எமது அங்கத்தவர்களின் உயிரையும் வாழ்க்கையையும் பணயம் வைக்கக் கூடாது.

ஆகவே, தேர்தல்கள் முடிவடைந்த பின்னரும் கூட தொழிலாளர்கள் தமக்குள் இணைந்துவாழும் பக்குவத்தையும் மனோ நிலையையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

## ஸ்ரீ காளியம்மன் ஆலய வருஷாபிஷேக தேர்த்திருவிழா

கண்டி,

கண்டி, திகன- இராஜவெல்ல அருள் மிகு ஸ்ரீ காளியம்மன் ஆலய வருஷாபிஷேக தேர்த் திருவிழா எதிர்வரும் 7ஆம் திகதி மாலை 5.00 மணி முதல் நடைபெறும். இத்தேர்த் திருவிழாவையொட்டி எதிர்வரும் 5ஆம் திகதி காலை 8.30 மணிக்கு கணபதி ஹோமம் மற்றும் விசேட பூஜைகளுடன் கொடியேற்றமும் 6ஆம் திகதி காலை 9.45 மணிக்கு விசேட பூஜைகளுடன் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டமும் மாலை சுவாமி உள்வீதி வலமும் 7ஆம் திகதி காலை பால்குட பவனியும் மாலை 5.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் நடைபெறும்.தொடர்ந்து 8ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தீர்த் தோற்சவமும், கொடியிறக்கமும் மாலை 4 மணிக்கு மாவிளக்கு பூஜை, அன்னை ஊஞ்சல் பூங்காவனத் திருவிழாவும், 9 ஆம் திகதி மாலை 4 மணிக்கு வைரவ மேடை, மகேஸ்வர பூசைகளுடன் திருவிழா இனிதே நிறைவேறும்.

இவ்வாலய பிரதமகுரு சிவாச்சார்யமணி சிவஸ்ரீ நடரெட்னராஜ குருக்கள் தலைமையில் மகோற்சவ கிரியைகள் நடைபெறும். விழா ஏற்பாடுகளை ஆலய பரிபாலன சபையும் இந்து இளைஞர் மன்றமும் மேற்கொண்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மவட்டத்தில் மாறிவரும் சமூகச்சூழலும் AIDS ஐ எதிர்கொள்வதற்கான சவால்களும்

உலகளாவிய நிலையில் வாழ்ந்து வருகின்ற மனித சமூகத்தினரின் தாய்மொழி, சமயம், புலம்சார் கலாசாரம் என்பன ஒவ்வொருவருக்கும் இயல்பான உள்ளுணர்வோடு ஒட்டிக் கொள்வதனை செய்தி வாயிலாக வாசித்தறிய முடிகிறது. ஆனால், அவரவருக்குரிய சமயநெறி சார்ந்த வழிபாடு பல்வகையிலும் நலமோடு நீண்டகால வாழ்வும் சிறப்பும் அருள வேண்டும் என்பதே அவரவர்க்குரிய இறைவணக்கத்தின் வேண்டுதலாக அமையும்.

இறைவணக்கத்தின் மூலமாக பெறுகின்ற அனுபவங்கள் இறைவனிடத்தே பயபக்தி என்பது எல்லையில்லாத ஓர் உச்சநிலையாகவே கொள்ள முடிகிறது. இறைவனுக்கு நாம் கொடுக்கின்ற பக்திமயமான உறவின் உணர்வு போன்று எம்புல மருத்தவர்களையும் கொள்ளலாம்.

ஈழத்தின் வடபுலத்தினை எடுத்துக் கொண்டால் அம்மா, அப்பா, பிள்ளை கல்வி, பண்பு, பணிவு என்பனவெல்லாம் மூன்றெழுத்துக்களாக அமைந்திருப்பதையும் இச் சொல்லடுக்களுக்குள் அனைத்துமாக வாழ்வியலோடு ஒன்றித்து வாழ்வனவாக அமைகின்றன. ஆனால், கல்வி ஒன்றின் மூலமே வீடு, கிராமம், நாடு எனும் வளர்ச்சி பண்புகள் மேலெழுகைக்கு அத்திபாரமிட்டு நலமானதொரு வழிகாட்டியாய் அமைகின்றன எனலாம். மனித வாழ்வியலில் பண்பு மிகமுக்கியமானதொரு கூறாகும். மனிதன் உயிர்வாழ உணவு எவ்வகை முக்கியமோ வாழ்கின்ற மனிதர் ஒவ்வொருவர்க்கும் பண்பு அவசியமாகின்றது. பண்போடு வாழ்கின்ற ஒவ்வொருவருக்கும் இறப்பினிலும் அவரவரால் விதைக்கப்படுகின்ற பண்புகள் அனைத்தும் அவன் நாமம் வாழ வாழ்த்திக் கொண்டேயிருக்கும்.

'ஒழுக்கம் விழுப்பம் தரும்' என்பது வள்ளுவர் வாக்கு. ஒழுக்கம் என்பது எமது பிள்ளைகளால் நாம் பராமரிக்கப்படுவதற்கான அத்திபாரமாக அமையும் என்பது பின்னிப் பிணைந்த பொருள் நிறைந்த சமூகவுயர் கருத்தாகும்.

**மேல்மாடியாயினும் சாதாரண சிறு மனைகளாயினும் வாழ்கின்ற மக்கள் ஒழுக்கக் கோட்பாடுடைய நெறியினை கடைப்பிடிப்பதன் மூலமே 'எயிட்ஸ்' நோயிலிருந்து எம்மையும் சமூகத்தினையும் காப்பாற்றிக் கொள்ள முடியும்**



படைப்பிலக்கியங்களில் பேசு பொருள் வடிவமாகக் கொள்ளப்படுவதனை காணலாம். ஒவ்வொருவரும் மனைவியரோடு, பிள்ளைகளோடு உறவினர்களோடு நண்பர்களோடு பெரியோரென போற்றப்படுகின்ற கற்றோரோடும் கணமறிந்து உரையாடிக் கொள்வதற்கான ஓர் பண்பு நிலை இருப்பதனை நாம் காண்கிறோம். எழுதுதல், மேடையில் பேசுதல் அனைத்துமே ஓர் பண்பிலக்கிய வடி வத்திற்குள் அமைகின்றன எனலாம். ஒழுக்கம் என்பது மனித சமூகத்தின் மிக நெருக்கமான தொப்புள் கொடியுறவாகும். அதனுடைய மேன்மை இன்றும் வாழ்வியலோடு பன்முகம் கொண்டதாகவே கூறமுடியும்.

திருமணம் என்பது ஆண் + பெண் இருபாலாருக்கும் எதிர்கால வாழ்க்கைக்கு துணையொன்றினை தேடிக்கொள்ளுகின்ற தவிர்க்க முடியாததொன்றாகவே இவ் இணைவு அவசியமாகின்றது. எமது பொறுப்புக்களாக இருப்பது போன்று அடுத்த பரம்பரையினரை நாம் பெற்றெடுத்து வாழ வைப்பவர்களாக எமது நிலை அமைவதனை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். அப்பணியின் மூலமே எமது முதுமைக் காலத்தில்

நாம் வாழ்கின்ற யாழ். மாவட்டத்தினை நோக்கும் போது பற்பல தொற்று நோய்களால் எமது வாழ்வியலில் பெரிதும் துன்பப்படுவதனை அனுபவ வாயிலாக அறிந்ததொன்று. பல் வகையான நுளம்புகளால் மலேரியா, டெங்கு போன்ற காய்ச்சல் நோய் பரப்பிகளாக யாழ். குடாநாட்டினையும் ஏனைய பிரதேசங்களையும் ஆட்டிப்படைக்கின்ற ஓர் துன்பியல் நிகழ்வாக அறிகின்றோம்.

மேலும் பற்பல ஒழுக்கக் கேடுகளாய் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியதும் எவ்வகையிலும் அழிக்கமுடியாததுமான வைரஸ் எச்.ஐ.வி (H.I.V.) ஐ (Human Immuno-deficiency virus) உற்றுநோக்கினால் அவை ஏற்படுத்துகின்ற நோயான எயிட்ஸ் (Acute Immuno deficincy Syndrome) எனும் நோயானது மனிதனின் ஒழுக்கக் கேடுகளினால் தேடப்படுகின்ற பாரிய நோயாகும். சிகிச்சையளிக்கக் கூடிய மருத்துவ முறைகள் இருக்கின்ற போதும் எயிட்ஸ் நோய் பீடித்த நோயாளி ஒருவரை குணமாக்குவதற்கு பல ஆயிரம் ரூபாயை எமக்காக அரசு செலவு செய்யவேண்டிய நிலையினில் அந்நோயானது எம்புலத்தினிலும் எமது சமூகத்தை ஆட்டிப்படைக்கின்றமை ஓர் துர்ப்பாக்கிய நிலையாகும்.

(தொடரும்)

கே.ஆர்.திருத்துவராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்கள் வீதி ஒழுங்குகளை உரியமுறையில் கடைப்பிடிக்க வேண்டும்

போக்குவரத்துப் பொலிஸ் அத்தியட்சர்

அச்சுவேலி

"வீதி விபத்துக்களில் பாதிக்கப்படுவோரில் 60 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்கள் மாணவர்கள் என்பது மதிப்பீடுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. மாணவர்கள் போக்குவரத்து ஒழுங்கு விதிமுறையை உரிய முறையில் கடைப்பிடித்து ஒழுகினால் வீதி விபத்துக்களிலிருந்து தங்களையும் சமூகத்தையும் காப்பாற்றிக் கொள்ளமுடியும்."

- இவ்வாறு யாழ். மாவட்ட போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் அத்தியட்சகர் எஸ். ஜெயதிலக்க தெரிவித்தார்.

அச்சுவேலி மத்திய கல்லூரியில் நடைபெற்ற மாணவர்களுக்கான போக்குவரத்து விழிப்புணர்வுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது;- மாணவர் மத்தியில் ஏற்படுகின்ற சட்ட ஒழுங்கும் விழிப்புணர்வும் சமூகத்தில் எதிர்பாராத மாற்றத்தை ஏற்படுத்தும். மாணவர்கள் தாம் அறிந்து கொண்ட நல்ல விடயங்களை நண்பர்களுக்கும் சமூகத்துக்கும் எடுத்துக்கூறி அதனால் ஏற்படக்கூடிய நல்ல விளைவுகளை சமூகத்தைச் சென்றடையச் செய்யவேண்டும்.

சமூக நிறுவனங்களினதும் செயற்பாட்டுக்கும் தனி மனிதனது நல்வாழ்வுக்கு சட்டங்கள் ஒழுங்குமுறைகள் உரிய முறையில் கடைப்பிடித்து ஒழுக வேண்டியது கட்டாயமாகும். இந்த வகையில் வீதிப் போக்குவரத்து ஒழுங்கு விதிமுறைகளை உரிய முறையில் பின்பற்றப்படுவதன் மூலம் நாம் எமக்கும் சமூகத்திற்கும் உதவமுடியும். வீதிப்போக்குவரத்து விதிமுறை உரிய முறையில் பின்பற்றப்படாமை யினாலேயே பெருமளவு விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

இலங்கையில் ஆண்டுதோறும் 2 ஆயிரத்து 500 க்கு மேற்பட்டவர்கள் வீதி விபத்துக்களால் உயிரிழக்கின்றனர். ஆயிரக் கணக்கானோர் உடல் உறுப்புக்களை இழக்கின்றனர்.

இலங்கையில் நடைபெறும் வீதி விபத்துக்களினால் பெருமளவில் பாதிக்கப்படுபவர்கள் மாணவர்களே. மாணவர்கள் விழிப்புணர்வுடன் நடந்து கொண்டால் சமூகத்துக்கும் தங்களுக்கும் உதவியவர்களாக இருக்கமுடியும்.

யாழ். மாவட்டத்தில் வாகனப் பயன்பாட்டின் அளவு நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் வீதி விபத்துக்களும் அதிகரித்து வருகின்றன. இந்த வகையில் வீதிப் போக்குவரத்து விதிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும் - என்றார்.

## மஹா கும்பாபிஷேகம்

சாவகச்சேரி

கிளிநொச்சி குஞ்சுப் பரந்தன் பொறிக்கடலை அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 .13 மணிக்கு ஆலய பிரதம குரு 'வேதாகம கிரியா ஜோதி' சிவஸ்ரீ பால கிருஷ்ண குமாரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

நேற்று காலை 8.28 மணிக்கு கிரியைகளுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. 5 ஆம் திகதி சனிக்கிழமையும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெற்று தொடர்ந்து 24 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளதென ஆலய அறங்காவலர் சபையினர் அறிவித்துள்ளனர்.

## இதயநோயால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு காரைநகர் அபிவிருத்திச் சபை நிதி உதவி

(வட்டுக்கோட்டை நிருபர்)

காரைநகர்தோப்புக்காட்டையில் இதய நோயால் பாதிக்கப்பட்டுள்ள இளம் பெண் ஒருவருக்கு இதய நோய் சத்திரசிகிச்சை செய்வதற்காக காரைநகர் அபிவிருத்திச் சபை 25 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

கடந்த சில மாதங்களாக இதய நோயால் பாதிக்கப்பட்டுள்ள மெய்ஞ்ஞானபதி கயல்விழி என்பவருக்கே இந் நிதியுதவி கிடைத்துள்ளது. ஏற்கனவே இப்பெண் இதய சத்திரசிகிச்சைக்கு உதவி கோரி ஜனாதிபதிக்கு விண்ணப்பித்தபோது ஜனாதிபதி நிதியத்திலிருந்து ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய மட்ட புத்தாக்கப் பாடல் போட்டிக்கு முத்துத்தம்பி மகா வித்தியாலயம் தெரிவு

'யூனியன் அசூரன்ஸ்' நிறுவனத்தின அனுசரணையுடன் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட 'நல்லதோர் பிரஜையை உருவாக்குவோம்' என்னும் புத்தாக்கப் பாடல் போட்டியில் யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயம் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

மாவட்ட மட்டப்போட்டியில் இரண்டாவதாகத் தெரிவாகி அண்மையில் தேசிய போட்டிக்கான தெரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. விரைவில் இறுதிப் போட்டியில் பங்குபற்றவுள்ளது.

முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் இசையாசிரியர் விஜயபாரதியால் உருவாக்கப்பட்ட புத்தாக்கப் பாடலை இம்மாணவிகள் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் நடைபெற்ற போட்டியின் போது பாடினார்கள். ஆசிரியர்களான திருச்செல்வம், நாகேந்திரம் ஆகியோர் பாடலுக்கான பின்னணி இசையை வழங்கியிருந்தனர்.

யாழ். கல்வி வலயத்திலிருந்து அகில இலங்கைப் பாடல் போட்டிக்கு முத்துத்தம்பி மகா வித்தியாலயம் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



'யூனியன் அசூரன்ஸ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட 'நல்லதோர் பிரஜையை உருவாக்குவோம்' எனும் புத்தாக்கப் பாடல் போட்டியில் பங்குபற்றிய முத்துத்தம்பி மகா வித்தியாலய மாணவிகள் பாடசாலை அதிபர் தி. சத்தியபாலன் பிரதி அதிபர் கௌரி பரந்தாமன், இசையாசிரியை விஜயபாரதி ஆகியோருடன் காணப்படுகின்றனர்.

## அரச உத்தியோகத்தர் வீடு கட்டுவதற்காக பிணையாளியுடன் கடனுதவி வழங்க முடிவு

யாழ்ப்பாணம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வீடு கட்டுவதற்காக இரு பிணையாளிகளுடன் வழங்கப்பட்டு வந்த கடனுதவி, அமைச்சர் எடுத்துக் கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து ஒரு பிணையாளியுடன் மட்டும் வழங்கப் படவிருக்கிறது.

அரசாங்க உத்தியோகத்தர்களின் நலனில் அக்கறை கொண்ட அமைச்சர் விமல் வீரவன்ச வீடு கட்டுவதற்காக கடனுக்கு விண்ணப்பிக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு ஒரு பிணையாளியின் பொறுப்போடு 5 இலட்சம் ரூபா நிதியை வழங்குமாறு தெரிவித்ததுடன் இந்த நடைமுறையை உடனடியாக அமுல்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

வன்னிப் பிரதேசத்தில் மீள்குடியேறிய அரச உத்தியோகத்தர்கள் நிரந்தரமாக வசிப்பதற்கு வீடு இன்மையால் கஷ்டப்படுவதாகவும் அவர்கள் வீடு அமைப்பதற்கு அல்லது திருத்துவதற்கு 5 இலட்சம் ரூபா நிதியைக் கடனாக வழங்குமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் விமல் வீரவன்சவிடம் கிளிநொச்சி அரசாங்க அதிபர் கேட்டிருந்தார்.

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு கடன் வழங்குவது குறித்து கொழும்பில் நடைபெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்ட போது இந்த முடிவை எடுத்திருந்தார்.

## வீட்டுத் திட்டத்திற்குத் தெரிவானோர் காணி உறுதிகளை ஒப்படைக்குக!

மானிப்பாய்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 'ஜீ.ரி.சற்' வீட்டுத் திட்டங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் உடனடியாக தங்களது காணி உறுதிகளை ஒப்படைக்குமாறு சாவல்கட்டு கிராம அலுவலர் கேட்டுள்ளார்.

மேற்படி பிரதேச செயலர் பிரிவில் உள்ள சாவல்கட்டு ஒ/131 கிராம அலுவலர் பிரிவில் 'சுவர்ண பூமி' வீட்டுத் திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் உடனடியாக தங்களுடைய காணி உறுதியினை அப்பகுதி சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் ஒப்படைக்குமாறு வேண்டப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சினி பிட்ஸ்

- தனது தோழிகளுடன் 'ஆடுகளம்' படத்தை பார்த்து ரசித்த பட ஹீரோயின் டாப்ஸி விரைவில் 'வந்தான் வென்றான்' படப்பிடிப்பிற்காக மும்பை செல்கிறார்.
- 'கன்னட படத்தில் நல்ல ஸ்கிரிப்ட் அமைந்தால் நடிப்பேன்' என்கிறார் ரஜனிகாந்த்.
- வெங்கட் பிரபு, யுவன் சங்கர் ராஜா, பிரசன்னா, பிரேம்ஜி ஆகியோர் தங்களது ஹேர் ஸ்டைலை புதுவிதமாக மாற்றி அமைத்துள்ளனர்.
- சமீபத்தில் கல்லூரி விழாவுக்கு சென்ற ஸ்ரேயா, 'திருட்டு சிடியில் எந்த படமும் பார்க்காதீர்கள். அதன் மூலம் கிடைக்கும் பணத்தை தீவிரவாதம் போன்ற தீய காரியங்களுக்குத்தான் பயன்படுத்துகின்றனர்' என்றாராம்.
- சுப்ரமணியம் சிவா இயக்கும் 'சீடன்' படத்தில் 25 நிமிடங்கள் மட்டுமே எனது காட்சிகள் வரும் என்கிறார் தனுஷ்
- 'தெய்வ மகன்' படத்தின் தலைப்பை மாற்றும் திட்டம் உள்ளது என்கிறார் இயக்குநர் கிரீடம் விஜய்.
- 'என்னுடைய படங்களில் பாத்திரங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் தருவேன். ஹீரோ என்று தனிப்பட்ட முக்கியத்துவம் யாருக்கும் இருக்காது' என்கிறார் இயக்குநர் சசிக்குமார்.
- 'தாஜ்மஹால்' ரியா சென், மீன் வறுவல் என்றால் ருசித்து சாப்பிடுவாராம்.
- 'மைனா' ஹீரோ விதார்த் அடுத்த 'முதல் இடம்' என்ற படத்தில் ஹீரோவாக நடிக்கிறார். கேரளாவை சேர்ந்த கவிதா நாயர் ஹீரோயின். குமரன் இயக்குகிறார்.
- 'வேலூர் மாவட்டம்' படத்தில் பொலிஸ் அதிகாரி வேடத்தில் நடிக்கிறார் நந்தா.
- 'முத்துக்கு முத்தாக' கதையை சொல்லும்போதே இயக்குநர் மதுரவன் தன்னையும் அறியாமல் அழுதாராம். 'கதை கேட்டுக் கொண்டிருந்த என் கண்களிலும் கண்ணீர் வழிந்தது. இப்படத்தில் அழுது நடித்திருக்கிறேன்' என்கிறார் மோனிகா
- 'சூர்யாவும் நானும் பிஸியாக நடித்துக் கொண்டிருப்பதால் அடுத்த சில வருடங்களுக்கு இருவரும் ஒரே படத்தில் சேர்ந்து நடிக்க முடியாது' என்கிறார் கார்த்தி.
- 'மாதவனை பார்த்து பேசியே தீருவேன்' என்று மாணவி ஒருவர் அவரது வீட்டுக்கு கடந்த சில வாரங்களாக வந்து போகிறாராம். படப்பிடிப்பில் இருப்பதால் அந்த ரசிகையை சந்திக்க முடியவில்லை என்கிறார் மாதவன்.

# நடுநிசி

கௌதம் மேனன் இயக்கத்தில் உருவாகியுள்ள 'ந
நாய்கள்' திரைப்படத்தில் ஒரு காட்சியை கூட வெட்டாம
சென்சர் 'ஏ' சான்றிதழ் வழங்கியுள்ளனர். இந்தப் படம்
இம்மாதம் 11 ஆம் திகதி திரைக்கு வருகிறத சமீரா ரெட்டி
வீரா மற்றும் நான்கு புதுமுகங்கள் நடித்துள்ள இந்த
திரைப்படம் 1978 இல் பாரதிராஜா இயக்கத்தில்
கமலஹாசன் நடித்து பெரும் வெற்றிபெற்ற
'சிகப்பு ரோஜாக்கள்' படத்திற்கு பிறகு தமிழில்
உருவாகும் உளவியல் சார்ந்த திரில்லர்
படமாக கருதப்படுகிறது.

மைய பாத்திரமான வீரா மற்றும் அனைத்து பாத்திரங்களையும் ஒன்றிணைக்கும் ஒரு பயங்கரமான இரவில் நடக்கும் சம்பவங்கள் அவன் மனதில் ஏற்படுத்தும் பாதிப்புகளை மையமாக கொண்டு கதை அமைந்துள்ளது.

நடுநிசி நாய்கள் திகில் பட வகையை சேர்ந்ததல்ல என்றாலும் பலவீனமான இதயம் கொண்டவர்களுக்கான படம் அல்ல.




# நண்பனாக மாறிய3 இடியட்ஸ்

**ஜெமினி** நிறுவனம் அனைத்துப் பி. சிளை
அறிவிப்பை வெளியிட்டுள்ளது. விஜய் நடிக்கும்
'நண்பன்' என்று தலைப்பு வைத்துள்ளார் இயக்கு ர்
ஸ்டார் ரஜனியின் 'பாண்டியன்' படத்துக்காக
நினைவிருக்கலாம்! இதனை படத்தின் செய்தித்தெ
மாலை வெளியிட்டுள்ளார். படத்துக்கு இசை. ஒ
பரமஹம்சா. பாடல்கள்: நா முத்துக்குமார், கலை:
தயாரிப்பு: ராஜீ ஈஸ்வரன். தயாரிப்பு வடிவமைப்பு:
கார்க்கி. திரைக்கதை - இயக்கம்: ஷங்கர். கதாநாய
நடிகர்கள்: ஜீவா, சிறீகாந்த், சத்யராஜ், சக்யன் மற்று
இந்தப் படத்தில் மிக முக்கியமான ஒரு த்திரத்தி
அனுயா மற்றும் அஜய்ரத்னமும் முக்கிய வேடத்
படப்பிடிப்பு ஊட்டியில் நடந்தது. தொடர்ந்து திரு
படமாக்குவதற்காக படப்பிடிப்பு குழுவினர் கோவை
ஊர்வல காட்சி அவினாசி சாலை ஜென்னி கிளப் மு
சிறீகாந்த், சத்யராஜ் ஆகியோர் நடித்தனர். மார்வாடி
ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. படப்பிடிப்பு ஏ
பெப்ரவரி 25 ஆம் தேதி முதல் 'விஜய்' நடிக்கும் பகு


முத்துக்கு முத்தாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ள 'நடுநிசி
வட்டாமல்
படம்
ரட்டி




# ரவிக்குமாரின் ஐடியா

**ரஜனி** நடித்த அனிமேஷன் படமான 'சுல்தான் தி வாரியர்' பின்பு 'ஹரா'வானது. இப்போது 'ராணா' வாகியிருக்கிறது. ஆனால், இந்த மாற்றத்தால் ரஜினிக்கு இன்னொரு கூடுதல் கேரக்டர் கிடைத்திருக்கிறது என்பது மட்டும்தான் புதுசு. நேற்றைய கோடம்பாக்கத்தின் பரபரப்பு ரஜனி நடிக்கும் 'ராணா' படத்தை பற்றிதான்! பத்திரிகையாளர்களுக்கு அவசரம் அவசரமாக அனுப்பப்பட்ட செய்தி குறிப்பில் ரஜனி மூன்று வேடத்தில் நடிக்கும் 'ராணா' என்ற விஷயம் பிரதானமாக இடம் பெற்றிருந்தது. ஒரு புதுப்படம் போலவே இதை அறிவித்திருந்தார்கள். ரஜனி ரசிகர்களுக்கு புத்துணர்ச்சியை அளிக்கக் கூடிய மந்திரவார்த்தைகள்தான் அவையெல்லாம் என்றாலும், நிஜம் என்னவாக இருக்கும் என்ற ஆவலும் தேடலும் அநேகமாக எல்லா பத்திரிகையாளர்களுக்கும் இருந்தது. நாம் விசாரித்தபோது கிடைத்த தகவல்கள் வேறு மாதிரியானவை. 'சுல்தான் தி வாரியர்' படத்திற்கு சுமார் பத்துக் கோடி வரை பைனான்ஸ் செய்திருந்த ஆட்லேப்ஸ் நிறுவனம் தனது பணத்தை திரும்ப வாங்கிக் கொண்டதாம். மேலும், இரண்டு கோடிகள் வட்டியாக கொடுத்து பன்னிரெண்டு கோடியாக கடந்தவாரம் தான் செட்டில் செய்யப்பட்டது என்கிறார்கள் கோடம்பாக்கத்தில். இந்தநிலையில் ஈராஸ் நிறுவனத்தோடு ஒரு புது ஒப்பந்தம் போட்டார்களாம். இதுவரை எடுக்கப்பட்ட அனிமேஷன் பகுதிகளை ஒரு ரஜனியாக வைத்துக் கொண்டு படத்தில் மேலும் இரண்டு நிஜ ரஜனிகளை உள்ளே நுழைத்துவிடலாம். அதற்கேற்றாற் போல திரைக்கதையை சுவாரஸ்யமாக்கிக் கொள்ளலாம் என்று ஐடியா கொடுத்தாராம் இயக்குநர் கே.எஸ். ரவிகுமார். இந்த டிஸ்கஷன் நடந்து கொண்டிருக்கும்போது சில சமயங்களில் ரஜனியே கூட விரும்பி ரவிக்குமார் ஆபிஸுக்கு வந்திருக்கிறார். அவரும் டிஸ்கஷனில் கலந்து கொண்டிருக்கிறார். முள் மேல் விழுந்த சேலையாக பல கோடி ரூபாய்களை இந்த அனிமேஷன் படத்தில் கொட்டியிருந்தார் சவுந்தர்யா ரஜினி. இப்போது சேலையும் கிழியாமல் முள்ளும் உடையாமல் காப்பாற்ற போகிறார் கே.எஸ்.ரவிகுமார். அவர் போட்டிருக்கும் இந்த புதிய திட்டம் ரஜனி ரசிகர்களுக்கு நிஜமாகவே சர்க்கரைப் பொங்கலாக இருக்கும் என்பதுதான் அசரவைக்கும் உண்மை! அதுமட்டுமல்ல... இப்படத்தில் மற்ற இரண்டு ரஜனியுடன் ஜோடி சேர அனுஷ்காவிடமும், தீபிகா படுகோனிடமும் பேச்சுவார்த்தை நடந்து வருகிறதாம்.


ஆடுபுலி

...சினைகளையும் தீர்த்து படத்தின் அதிகாரப்பூர்வ ...டிக்கும் 3 இடியட்ஸ் படத்தின் தமிழ்ப் பதிப்புக்கு, ...பக்கு்ர் ஷங்கர். இந்த தலைப்பு ஏற்கெனவே சூப்பர் ...க்காக வைக்கப்பட்டு பின்னர் கைவிடப்பட்டது ...ப்தித்தொடர்பாளர் நிகில் அதிகாரபூர்வமாக நேற்று ...சை: ஹாரிஸ் ஜெயராஜ். ஒளிப்பதிவு: மனோஜ் ... கலை: முத்துராஜ். எடிட்டிங்: ஆண்டனி. நிர்வாக ...மைப்பு: விமல்ஜி. வசனம்: ஷங்கர் மற்றும் மதன் ... கதாநாயகன்: விஜய், கதாநாயகி இலியானா. மற்ற ...ன மற்றும் பலர். இயக்குநர் - நடிகர் எஸ்.ஜே. சூர்யா ...திரத்தி... தோன்றுகிறார். 'சிவா மனசுல சக்தி' நாயகி ... வேடத்தில் நடிக்கின்றனர்! இதன் முதல் கட்ட ...து திருமண ஊர்வலம் மற்றும் பாடல் காட்சியை ... கோவை வந்தனர். திங்கள் காலை 6 மணி முதல் ...கிளப் முன்பு படமாக்கப்பட்டது. இதில் நடிகர் ஜீவா, ...ர்வாடி வீட்டுத் திருமணக் காட்சி போல பிரமாண்ட ...ப்பு ஏற்பாடுகளை கோவை பாபு செய்திருந்தார். ...கும் பகுதிகள் படமாக்கப்படவுள்ளது.

# பாலா பட ஹீரோ

**'அவன் இவன்'** படப்பிடிப்பில் இருக்கிறார்கள் ஆர்யாவும், விஷாலும். கொடுத்த திகதிகளின் படி பார்த்தால் எப்பவோ படப்பிடிப்பு முடிந்து இருவரும் வேறு படங்களில் நடித்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் எடுப்பது பாலாவாச்சே? ஆரம்பிக்கிற திகதி மட்டும்தான் இவர் கையில். முடிவு எப்போது என்பதை கணிக்க தமிழ்சினிமாவில் இன்னும் யாரும் பிறக்கவே இல்லை என்பதுதான் சகிக்க முடியாத நிஜம். இந்த நேரத்தில் விஷாலை வைத்து அடுத்த படத்தை எடுக்க தயாராக இருந்த பிரபுதேவா இரண்டு முறை படப்பிடிப்பை ஒத்தி வைத்து விட்டார். இப்போது அந்த படத்தை இயக்குகிற எண்ணத்தையே கிடப்பில் போட்டுவிட்டதாக தகவல். விஷால் வரும்போது எனது திகதிகள் ஒத்து வந்தால் இயக்குவேன். இல்லையென்றால் இந்த படமே வேண்டாம் என்கிறாராம் கோபம் கோபமாக! இதில் லிங்குசாமி மட்டும் கொஞ்சம் வித்தியாசம். இவர் இயக்கவிருந்த 'வேட்டை' படப்பிடிப்பும் ஆர்யாவுக்காக வெயிட்டிங். ஆனால் பாலாவுக்கே போன் செய்த லிங்குசாமி, எனக்காக அவசரம் அவசரமா படத்தை முடிக்க வேண்டாம். நிதானமா அனுப்பி வைங்க. அதுவரைக்கும் நான் காத்திருக்கேன் என்றாராம். பாலா படத்தின் ஹீரோ யாராக இருந்தாலும் அடுத்தடுத்த படங்களில் பெரிய ஹிட் அடிப்பார்கள் என்பது சென்டிமென்ட். அந்த சென்ட்டிமென்ட்டுக்காகதான் இப்படி விட்டுக் கொடுக்கிறார் லிங்கு என்பவர்களும் இருக்கிறார்கள். இயக்குநர்கள் இருவரும் இப்படி கால்குலேஷன்களில் கிடந்து தவியாய் தவித்துக்கொண்டிருக்க, நடப்பது நடக்கட்டும் என்ற அலட்சிய மூடுக்கு வந்திருக்கிறார்கள் ஆர்யாவும், விஷாலும்.




புதிய காவியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்புணர்வு உள்ள மக்களாலேயே ஊழலை தடுத்து நிறுத்த முடியும்

விழிப்புடன் கூடிய, உணர்வுபூர்வமான, தகவல் அறிவுடைய பொது மக்கள் இல்லாத நிலையில் ஊழலிருந்து நாடு விடுதலை பெறுவது சாத்தியமனாதல்ல என்பது தான் முதலில் முன்வைக்கும் கருத்து.

முழு வரலாற்றிலும் ஒவ்வொரு நாட்டிலும் சட்ட முறைமையிலும் இவ்வுண்மை மீண்டும் மீண்டும் தெளிவுபடுத்தப்பட்டு வந்துள்ளது. இங்கு முன்வைக்கப் போகும் கருத்துரைகள் ஒரு குறிப்பிட்ட நாட்டையோ, சட்ட வரம்பெல்லையையோ குறிப்பதல்ல. மாறாக ஊழல் மேற்கொள்ளப்படுகின்ற இடங்களைப் பற்றிய பொதுவான கருத்தாகும்.


ஒவ்வொரு அதிகாரியும் தனது உத்தியோகபூர்வ பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் முழுமையான நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். அதிலிருந்து எவ்வித வழுவுதலும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என ஒவ்வொரு பிரஜையும் எதிர்பார்க்கும் ஒரு மனநிலை. அவ்வாறான ஒரு தேசிய சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். அவ்வாறான சீரிய நேர்மை நிலையிலிருந்து சற்றே வழுவல் நிகழ்ந்தாலும் அது பொறுத்துக் கொள்ளப்படமாட்டாது. நேர்மை நிலை நிறுத்தப்படுவதற்கான முறையான செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு, குற்றமிழைத்தவர் தண்டனைக்குட்படுத்தப்படுவார் என பொது மக்கள் அனைவரும் முழு நம்பிக்கையுடன் எதிர்பார்க்கும் ஒரு நிலை இதனையடுத்துத் தோன்றும்.

கல்வியினூடாக நடைமுறையின் மூலம் இந்தக் கருதுகோள் அறிமுகப்படுத்தப்பட்டாலன்றி இவ்வாறான ஒரு பொது மனநிலை எந்த நாட்டிலும் ஏற்படுத்தப்பட முடியாது. எனவே இந்தக் கருதுகோள் எமது பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்படுவதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதே தற்போதைய தேவையாக் உள்ளது.

தம் மீது அதிகாரம் பிரயோகிக்கும் நிலையிலுள்ள அனைவரிடமிருந்தும் முழுமையான நேர்மையை எதிர்பார்ப்பது தமது உரிமை என்பதையும் அதிலிருந்து சற்றேனும் குறைந்த ஒரு நிலைப்பாடு எதிர் பார்க்கப்படமாட்டாது - ஏற்றுக் கொள்ளவும்படாது என்பதையும் நமது குழந்தைகள் தெரிந்து கொள்ளட்டும். கல்வி பாடத்திட்டங்கள் அனேகமாக ஜீவனோபாயத்தை பெற்றுக் கொள்வதற்கான பாடங்களைக் கொண்டதாகவே உள்ளன.

கடமை, நேர்மை பற்றிய ஆண்டாண்டு கால ஞானத்தை உள்ளடக்கும் கண்ணோட்டப் பாடங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

எமது கல்வி முறையில் நிரப்பப்படாதுள்ள பாரிய வெற்றிடமான இது உடனடியாக நிரப்பப்படவேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் இந்த எதிர்வு கண்ணோட்டம் இல்லாமையே அங்கு அநீதிகளும், ஊழலும் நிலவுவதற்குக் காரணமாக அமைகின்றது. நவீன யுகத்தில் நாம் எமது உரிமைகளைப் பற்றி வலிந்துரைக்கும் அதே வேளை சமூகத்திற்கான எமது கடமை தொடர்பான கவனத்தை புறக்கணிக்கின்றோம். எமது கல்வி முறை மூலம் இதற்குப் பரிகாரம் காணப்படுவது அவசரத் தேவையாகும். இது தொடர்பான ஜப்பானிய உதாரணங்களை நாம் படிப்பினையாகக் கொள்ளலாம். அங்கு பல நூற்றாண்டுகளாக குழந்தைகளுக்கு, தொழில் மேற்கொள்ளுபவர்களுக்கு, சக பிரஜைகளுக்கு, நாட்டுக்கு என அவர்களின் கடமைகள் பற்றி சிறப்பான கல்வி புகட்டப்படுகின்றது. இதன் விளைவாக அவர்கள் மற்றவர்களிடமிருந்து எத்தகைய உயர்பதவியிலிருந்தாலும் கூட, குறைவான தரத்தை எதிர்பார்ப்பதில்லை.



ஜப்பானில் உத்தியோக பூர்வ ரீதியான ஊழலைத் தடுப்பதிலும், இழைக்கப்பட்ட அநீதிக்குப் பரிகாரம் காண்பதிலும் பொது மக்கள் அபிப்பிராயம் எவ்வாறு அழுத்தம் பிரயோகிக்கின்றது என்பது தொடர்பான எண்ணற்ற உதாரணங்களைக் கூற முடியும். பொதுத் துறையில் பணியை நேர்மை நிலையில்லை என்று கருதினால் தங்களின் உயிரையே கூட தியாகம் செய்து விடத் தயாராகும் அளவுக்கு அங்கு இந்தப் பாரம்பரியம் நிலவுகின்றது.

இது ஓர் உச்ச நிலை உதாரணம் என்ற போதும் அது நேர்மை நெறியே. அதன் அடிப்படைக் கருத்து என்ன வென்றால் பொதுத்துறை பணியில் முழுமையான நேர்மை கடைப்பிடிக்கப்படுவதனை எதிர்பார்த்து அழுத்தத்தை பிரயோகிக்கும் எதிர்க்க முடியாத தான மக்களின் பொது அபிப்பிராயம் தான் அந்த முக்கிய கருத்து.

ஊழல் எண்ணற்ற பல்வேறு வடிவங்களில் தோற்றம் பெறலாம் என்ற காரணத்தினால் இவையனைத்தும் குறிப்பிடத்தக்க முக்கிய விடயங்கள் தான். இலஞ்சம் பணம் சார்ந்தது மட்டுமல்ல உதவிகள் புரிதல், சட்டத்தின் பிரயோகத்தை தவிர்த்து ஒருவர் தனது பதவியின் முக்கியத்துவத்தை வலிந்து நிலை நிறுத்தல், கீழ் நிலை அதிகாரிகள் தங்கள் கடமையை புரிவதை தடை செய்யும் வகையில் ஒருவர் தனது பதவிபலத்தை பிரயோகித்தல், குடும்ப உறுப்பினர்களுக்கு பதவிகள் வழங்குதல், அரசியல் நிதியை துஷ்பிரயோகம் செய்தல், அரசியல் உதவிகளுக்கான வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்குதல், அச்சுறுத்தலும் அச்சுறுத்திப் பணம் பறித்தலும், நீதியான வழக்கு விசாரணை நடைமுறையில் தலையீடு செய்தல், இவ்வாறு பட்டியல் நீண்டு கொண்டே போவதாகவுள்ளது.

இந்தக் காரணி காரணமாக இந்த முறைகள் அனைத்தும் சட்ட விதிகளின் கீழ் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டு ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற விதத்தில் சட்டம் இயற்றப்பட முடியாது. இந்த சந்தர்ப்பத்தில் தான் சமூகத்தின் நேர்மை உணர்வு செயற்பட வேண்டும். எவ்வளவுதான் கடினமான பாதையானலும் நியாயத்தை வலிந்துரைக்க வேண்டும். ஊழல் பாதை எளிதானது. ஆனால் நேர்மை நெறிப் பாதை கடினமானது என்ற போதும் நமது அனைத்து பாரம்பரியங்களும், மதங்களும் நேர்மை நெறியைத் தான் போதிக்கின்றன. தம் மத போதனையின் படி ஊழலின் பாதை எளிதானது. ஆனால், நேர்மை நெறிப்பாதை சிரமமானது. முதல் பாதையை தேர்ந்தெடுப்பவர்களின் 'வாழ்க்கை எளிதானது'. ஆனால், இரண்டாவது பாதையை தேர்ந்தெடுப்பவர்களின் 'வாழ்க்கை கடினமானது'. இருப்பினும் கடமை எது வென்பது தெளிவானதும், பிழையற்றதாகும். நேர்மை நெறிப்பாதை சிரமமான போதும் அது தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பாதை.

ஊழலுக் கெதிராக அமைப்பு ரீதியான வலுப்படுத்தல் என்ற இரண்டாவது கருத்தைப்பார்த்தால்.

இவ்வாறான கடமையுணர்வூட்டப்பட்ட பொது மக்கள் ஏனையோரிடமிருந்தும் இதே போன்ற கடமையுணர்வை எதிர்பார்க்கின்ற நிலையில், அவர்களுக்கான சில அத்தியாவசியமான தேவைகள் வழங்கப்பட வேண்டும். தகவல் பெறுவதற்கான உரிமை, முறைப்பாடு செய்யும் போது ஒருவர் பாதுகாக்கப்படுவதற்கான உரிமை, முறைப்பாடு செய்வதற்கான ஓர் அதிகாரத்துவ ஸ்தாபனம், அந்த அதிகாரத்துவ ஸ்தாபனத்திற்கு முறைப்பாடு மீது புலன் விசாரணை செய்யும் கடமை, புலன் விசாரணை முடிவுகளின் படி தண்டனை அல்லது நட்ட ஈடு வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் என இன்னும் பல தேவைகள் உள்ளன.

இந்த நோக்கத்தை அடைவதற்காக சட்டத்தில் அறிமுகம் செய்யப்பட வேண்டிய திருத்தம் செய்யப்பட வேண்டிய சட்ட அங்கங்கள்.

தகவல் சுதந்திர சட்டம்,

குற்றத்தை எடுத்துச் செல்பவரின் பாதுகாப்புக்கான சட்டம்,

பிரதான கணக்குப் பரிசோதகர் திணைக்களம் நீதி, நேர்மையுடன் புலன் விசாரணைகளை நடத்துவதற்கு வழி செய்யும் கணக்குப் பரிசோதனை சட்டம்,

சொத்துக்கள், கடன்கள் பற்றிய பிரகடனத்துக்கான சட்டம், அத்துடன் நிதிநிலைப் பிரகடனச் சட்டம் அதன் செயற்பாட்டு நீதியாக பலப்படுத்தப்படல்.

இது தொடர்பான மேலதிக ஆலோசனைகள் தேசிய ஊழல் எதிர்ப்பு செயலாக்கத் திட்டம் தொடர்பாக நடத்தப்பட்டதான, இன்று இங்கு சமர்ப்பிக்கப்படவுள்ளவையான பல்வேறு ஆய்வுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பான இன்னும் இரண்டும் அம்சங்களும் முக்கிய கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டியவை.

ஏற்கெனவே வறியவர்களும் வசதிகள் ஏதும் அற்றோரும் இருப்பவர்களில் பெரும்பான்மையானவர்கள், தான் ஒரு நாட்டில் ஊழல் காரணமாக பாதிக்கப்படுகின்றார்கள் என்பது ஒரு முக்கிய அம்சம். அவர்களின் உரிமையை அவர்களாகவே வலிந்து நிலைநிறுத்திக் கொள்வதற்கோ அல்லது இழைக்கப்பட்ட அநீதிக்குப் பரிகாரம் தேடிக் கெவ்வதற்கோ அவர்களிடம் வலிமை இல்லை.

(தொடரும்)

செ.ரமேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வழக்கின் எதிரிகள் யார்? எதிர்வாதிகள் யார்?

## சட்டமும் சமூகமும் 14




எல்லா வழக்குகளிலும் ஒரு வழக்காளி இருந்தால் ஒரு எதிராளியும் இருப்பார். குற்றவியல் வழக்குகளில் ஒரு முறைப்பாட்டாளர் இருப்பார். பொலிஸாரே வழக்குத் தாக்கல் செய்வார்கள். குற்றவியல் வழக்குகளில் முறைப்பாட்டாளரே சாட்சியாவார். ஒன்றுக்கு மேற்பட்ட முறைப்பாட்டாளர்கள் இருப்பின் அவர்கள் யாவரும் முதலாம், இரண்டாம், மூன்றாம் சாட்சிகள் எனப் பட்டியல் இடப்படுவார்கள். சில குற்றவியல் வழக்குகளில் ஒன்றுக்கு மேற்பட்ட எதிராளிகளும் இருப்பார்கள். இப்போது நீதிமன்றங்களில் இத்தகைய காட்சிகள் சர்வசாதாரணமானவை.

ஒரு நீதிமன்றத்தில் பொலிஸார் 'B' றிப்போர்ட்டை தாக்கல் செய்து எதிராளிகள் யாவரையும் குறிப்பிட்ட வழக்கின் சந்தேக நபர்கள் (Suspects) எனக் குறிப்பிடுவார்கள். இந்த சந்தேக நபர்கள் மீது குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்படின் அவர்களிடம் குற்றவாளியா? சுற்றவாளியா? என மன்றில் வினாவப்படுவார்கள். குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் இவர்கள் யாவரும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் (Accused) என்றே குறிப்பிடப்படுவார்கள். இதன் பின்னர் இவர்கள் மீதான வழக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்படும். வழக்கின் முடிவில் குற்றவாளியா? நிரபாரதியா? என்பது மாஜிஸ்திரேட் அவர்களால் தீர்மானிக்கப்படும். குற்றவாளிகளாகக் காணப்படின் குற்றத்தீர்ப்பு வழங்கப்படும். குற்றத்தீர்ப்பு தண்டனைப் பணமாகவோ (Fine) சிறைத்தண்டனையாகவோ (Imprisonment) வழங்கப்படும். சில வழக்குகளில் இரண்டு தண்டனைகளும் வழங்கப்படும். (Both Fine and Jail). அதற்கு சட்டத்தில் இடமுண்டு.

குடியியல் வழக்குகளில் ஒரு வழக்காளியும் (Plaintiff) எதிர்வாதியும் (Defendants) இருப்பார்கள். குடியியல் வழக்கு நடபடிமுறைகள் வித்தியாசமானவை. குற்றவியல் வழக்கு நடபடிமுறைகள் வேறுபட்டவை.

### எதிராளிகள் பெறும் வரப்பிரசாதங்கள் யாவை?

ஒரு குற்றவியல் வழக்கில் வழக்காளி தரப்பினர் எதிராளி மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்களை சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்க வேண்டும். கொலை, கொள்ளை, வழிப்பறி (Waylay, பாலியல் வன்முறை (Sexual Assult), இன்னும் தீவைப்புச் சம்பவங்கள் (Arson), இவையாவும் குற்றவியல் குற்றங்களாகும் (Criminal Offences). களவு, ஏமாற்றுதல், மோசடி போன்றவை தீங்கியல் (DELICT or TORTS) குற்றங்களாகும்.

மேலும் குற்றவியல் குற்றங்கள் யாவும் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் (Beyond Reasonable Doubt) நிரூபிக்கப்பட வேண்டும். வழக்கு விசாரணையின் போது ஏதாவது சந்தேகம் ஏற்படுமாயின் அந்த சந்தேகத்தின் பலன்கள் குற்றம் சுமத்தப்பட்டவருக்கே சாதகமாக அமைய வேண்டும். The Benefit of The Doubt Goes to the Accussed) என்பது கட்டாயமான சட்ட விதியாகும். அவ்வாறான சூழ்நிலைகளில் குற்றம் சாட்டப்பட்டவர் நிரபராதி என (Not Guilty) விடுதலை செய்யப்படுவார். (He will be accquitted or Released) இதனை விடுதலை செய்தல் என்பர். சில வழக்குகளில் நீதிபதி எதிரியை விடுவிப்பு செய்யலாம்.

விடுவிப்பு என்பது (Reedeem) தற்காலிகமானது. அதாவது போதிய சாட்சியங்களோ (Witness), சான்றுகளோ (Evidence) இல்லாத நிலையில் எதிர்காலத்தில் அதற்குரிய சான்றுகள் கிடைக்கலாம் என்ற அடிப்படையில் அவ்வாறு கிடைக்கும் பட்சத்தில் வழக்கை மீண்டும் தாக்கல் செய்து விசாரணை நடத்தக்கூடிய வகையில் இந்த விடுவிப்பு அமையும் சான்றுகள் கிடைத்தால் வழக்கு மீளத்தொடரப்படும். இல்லாவிடின் விடுதலை செய்யப்படுவார்.

சில வேளைகளில் குற்றவியல் அல்லாத குற்றங்கள் தொடர்பில் குற்றவாளியாக் காணப்படும் ஒருவருக்கு நீதிவான் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையை விதித்து (Suspended Sentence) தீர்ப்பு அளிக்கலாம். உதாரணமாக ஐந்து வருட காலத்திற்கு நடைமுறையில் இருக்கக் கூடியதாக ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். ஒருவனுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்படுமாயின் அவர் வீட்டுக்குப் போகலாம். அவர் சிறைக்கு அனுப்பப்பட மாட்டார். ஆனால் அவர் மீண்டும் குற்றம் ஏதாவது குற்றம் புரிந்தால் அந்தக் குற்றத்திற்கு வழங்கப்படும் தீர்ப்பையும் சேர்த்து முன்னர் ஒத்தி வைக்கப்பட்ட தண்டனை வழங்கப்பட்ட காலத்தையும் சேர்த்து 5+ என தண்டனைக் காலத்தை சிறையில் கழிக்க வேண்டிவரும். சாதாரண சிறைத்தண்டனை (Punnishment) யாயின் அவர் சிறையில் பௌதீக ரீதியாகக் கட்டுப்படுத்தப்பட்டு அவரது அசைவியக்கம் (Movement) முற்றாகக் கட்டுப்படுத்தப்படும் (Confined). ஆனால் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படுமாயின் (Rigerous Punnishment) அவர் சிறைக்குள்ளேயே பணிசெய்யுமாறு (வேலைகள்) பணிக்கப்படுவார். அவரது அசைவியக்கம் மிகக் கடுமையாக கட்டுப்படுத்தப்படும்.

### இருவர் செய்த ஒரே குற்றம்

சில வேளைகளில் இரண்டு அல்லது மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினர் குற்றச்செயல்களில் ஈடுபட்டிருப்பார்களானால் நீதிமன்றத்தில் தான் விரும்பி அக் குற்றச் செயலைச் செய்யவில்லை என்றும் மற்றவர்களது தூண்டுதல் காரணமாகவே (INCITE) தான் அந்தக் குற்றச் செயலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் சிலர் (DEFEND) எதிர்வாதம் செய்வதுண்டு.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் தீங்கியல் வழக்குகளில் இரண்டு சட்டப் பழமொழிகள் முன்வைக்கப்படும்.

முதலாவது, 'இழியேதுவால் வழக்கெழாது' (Exturpi Causa Non Oritur Acto)

அடுத்தது, 'ஒத்த தீமையில் எதிராளியின் நிலைமை வலிது' (In Pari Delicto) இதன்படி முதலாவது சட்டப் பழமொழியின் படி ஒருவர் இன்னொருவருடன் குற்றச் செயலில் ஈடுபட்ட பின்னர் மற்றவர் மீது குற்றம் சுமத்துவதை முதலாவது சட்டப்பழமொழி தடுக்கும். அதாவது கறை படிந்த கைகளோடு ஒருவர் நீதிமன்றுக்கு வந்து தனக்கு நீதி வழங்கும் படி கேட்க முடியாது. (Those Who Come To The Courts For Legal Remedy They Should Come To The Courts With Cleaned Hands) என்பதே இதன் ஆங்கில விளக்கமாகும்.

அடுத்ததாக இரண்டாவது பழமொழியான ஒத்த தீமையில் எதிராளியின் நிலைமை வலிது என்பது இருவர் சேர்ந்து செய்த குற்றத்தில் மற்றவர் மீது மட்டும் ஒருவர் குற்றம் சாட்டுபவராக இருந்தால் அவ்வாறு குற்றம் சாட்டப்படுவரை நீதிமன்றம் மேலாகக் கருத்தில் எடுக்கும். அதன் படி வழக்கு அணுகப்பட்டு தீர்ப்பு வழங்கப்படும். அதாவது குற்றம் சாட்டப்பட்டவர்க்கு குறைந்த தண்டனையும் குற்றம் சாட்டுபவருக்கு கூடிய தண்டனையும் வழங்கப்படும்.

(தொடரும்)

> சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
>
> **அனுப்பவேண்டிய முகவரி**
> **யாழ் ஓசை**
> **வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
> 117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

---

## வாசகர் ஓசை

### தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம் பற்றிய வாசகர் கருத்து

வீரகேசரி பெற்றெடுத்த குழந்தையே 'யாழ்ஓசை'யே உனக்கு எனது வணக்கங்கள் உரித்தாகட்டும். சமூகத்தை விழிப்படையச் செய்யும் நோக்கில் நீ பல ஆக்கங்களை சுமந்து வருகிறாய். அதை பாராட்ட வேண்டும். ஏனெனில் எந்த ஒரு பத்திரிகையும் செயயாத ஒரு புதிய விடயத்தை நீ செய்திருக்கிறாய் என்றால் அது இவ் பத்திரிகையின் ஆசிரியரின் திறமையையும் ஆளுமையுமே ஆகும்.

அந்த வகையில் 'தடம் மாறும் கலாசாரம்' என்ற தலைப்பைத் தாங்கி வெளியாகும் பகுதியினை யாழ்ப்பாண மண்ணின் உயர் கலாசாரத்தை கீழ்த்தரமான முறையில் விமர்சிக்கப்படுவதாக அபிப்பிராயப்படுகிறார்கள்.

எனவே இவ் பகுதியை நிறுத்துவதா, இல்லையா என்ற வினாவுக்கான விடையை வாசகர்களிடம் விட்டிருந்தாய். அந்த வகையில் யாழ்ஓசை வாசகன் என்ற வகையில் இப்பகுதி இடைவிடாது வாரம் தோறும் வெளியாக வேண்டும் என்பதே எனது விருப்பம். ஏன்னெனில் விளையாட்டு, [illegible] அறிவியல் இவற்றை எந்த ஊடகத்தின் மூலமும் மக்கள் அறிந்து கொள்வார்கள். ஆனால் சமூகதின் ஆணி வேராக விளங்குகின்ற கலசாரம் சீரழிவதை பற்றி பத்திரிகைகள் சிந்திப்பதும் இல்லை. மக்களும் ஆர்வம் காட்டுவதும் இல்லை.

ஆனால் பேசும் போது மட்டும் யாழ்ப்பாணத்தில் கந்த புராணக்கலாசாரம் பேணப்படுகிறது என பேராசிரியர் முதல் பள்ளி மாணவர்கள் வரை குறிப்பிடுகிறார்கள். கந்தன் உறைகின்ற இடத்திலேயே கலாசாரம் தடம் மாறுகிறது என்பது அவர்களுக்குத் தெரியவில்லையா? அல்லது சொல்வதற்கு ஊடக வழியில்லையா? உன்னை போல பல [illegible] இவ்வாறான பகுதிகளை சிறகடித்து பறக்க விடும்போது தான் எமது கலாசாரத்தின் நிலை பற்றி கிணற்று தவளை போல் இல்லாமல் படித்த, பாமர, சமூக ஆர்வலர்களால் அறிந்து இனி வரும் காலங்களில் தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு இப் பகுதி உதவியாக இருக்கும். தமிழ் தாயின் குழந்தை நீ. உனக்கு தெரியும் தமிழர் நாம் அனைத்தையும் இழந்து இன்று கலாசாரம்/பண்பாடு என்ற ஓர் சொத்தை மட்டுமே வைத்திருக்கிறோம். அதை அழிவடையாது சீர்படுத்துவதற்கு இப் பகுதி பிரசுரம் ஆவது அவசியம் என்பதை பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

யாழ்ஓசை வாசகன் ம.றதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 13

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | ■ | 05 | 06 | 07 |
| 08 | ■ | 09 | 10 | 11 | 12 | 13 | ■ |
| 14 | 15 | ■ | 16 | 17 | 18 | ■ | 19 |
| 20 | ■ | 21 | ■ | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | ■ | 31 | 32 |
| ■ | 33 | 34 | 35 | ■ | 36 | 37 | 38 |
| 39 | 40 | ■ | ■ | 41 | 42 | 43 | ■ |
| 44 | ■ | 45 | 46 | 47 | 48 | ■ | 49 |

**இடமிருந்து வலம்**

1. கண்ணனிடம் சேலை பெற்றவள்
5. தகுதி
9. துரோணரின் பாடம்
14. உயிரினங்களை மூடி காணப்படுவது
16. தேசியக்கொடியில் வரும் இலையின் மரம்
22. கணவன் மனைவி கூட்டு
26. சுளரும் விளையாட்டுப் பொருள் (குளம்பியுள்ளது)
31. மனிதன் சேமிக்கத் துடிப்பது (திரும்பியுள்ளது)
33. இராமயணத்தில் கூனி போல் மகாபாரதத்தில்
36. ஒன்றும் புரியாதவள்
39. சிற்பக்கலைக்கு உதவுவது.
41. நாள்
45. கிராமிய நடனம்

**மேலிருந்து கீழ்**

1. கொலுசு
3. திறப்பு
4. நீரில் வளரும் பூ (தலை கீழ்)
5. தூய்மை (குளம்பியுள்ளது)
6. பெயராகவும் வினையாகவும் வரும் சொல்
11. நோன்பு
15. மாதம்
19. விடியல் பொழுது
21. பொருள் விற்று வாங்குபவருக்கு கிடைக்கும் பணம்
24. சிவன் / உயிர்களின் தலைவன்
27. சத்துள்ள இலை
29. திணமம், திரவம், வாயு மூன்று நிலைகளிலும் உள்ள இயற்கை பொருள்
36. உள்ளம்
39. நட்சத்திரம்
41. வேகம் (தலைகீழ்)

**குறுக்கெழுத்து போட்டி 11க்கான விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கோ | லா | க | ல | ம் | ■ | வா | லி |
| த | ட | ம் | ■ | ந | வீ | ன | ■ |
| ண் | ம் | ப | ட | ■ | ண் | ர | ச |
| ட | ■ | ரா | க | ம் | ■ | ம் | தா |
| ம் | த | மா | ■ | ச | தி | ■ | ம் |
| ■ | ச | ய | ன | ம் | ■ | ரா | கு |
| பு | ரா | ண | ■ | அ | ரி | ■ | சை |
| லி | ■ | ம் | உ | ■ | சி | வ | ன் |

## பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

**1. திருமதி.தி.சிதம்பரநாதன்**
டச்சு வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

**2. செ.றொபர்ட்**
சென் மேரீஸ் லேன்,
ஊர்காவற்றுறை.

**3. திருமதி ஷர்மிலா துஷ்யந்தன்**
பூம்பொழில், திருநகர் தெற்கு,
கிளிநொச்சி.

**குறுக்கெழுத்துப் போட்டி 13 க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக்கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.**

**அனுப்பவேண்டிய முகவரி**
குறுக்கெழுத்துப் போட்டி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.**




"இருந்தாலும் கமலா ரொம்ப திமிர் பிடிச்சவ!" "எப்படிச் சொல்றே?"
"இத்தனை வருடமா அவ வேலைக்காரி சொன்ன வம்புச் செய்திகளைத் தொகுத்து புத்தகமா போட்டிருக்கா!"




"அவர் ஒரு போலி பிளாஸ்டிக் சார்ஜன்னு எப்படிச் சொல்றே?"
"முகத்திலே சுருக்கம் விழுந்திருக்குன்னு சொல்றேன். வாங்க அயர்ன் பண்ணலாம் என்று கூப்பிடுகிறார்!"




"தாஜ்மஹால் மாதிரி ஒரு கட்டடம் கட்ட வேண்டுமென்று நீண்ட நாள் ஆசை!"
"கட்ட வேண்டியதுதானே?"
"என் மனைவி ஒத்துழைக்க மாட்டேனென்கிறாளே!"




"உங்க கிட்டே ரொம்ப குறைவா நோயாளிகள் வந்தாங்களே, இப்போ எப்படி?"
"பீஸை தவணை முறைப்படி செலுத்து மாறு
போட்டு போட்டேன்... ஒரே கூட்டம்!"




"வயிற்றை வைத்து இடிக்கிறீங்களே, கொஞ்சம் தள்ளி நில்லுங்க!"
"தொந்தி" ரவுக்கு மன்னிக்கவும்!"




"முதலிரவு அறைக்கு முன் நின்று கொண்டு மாப்பிள்ளை என்ன முணுமுணுக்கிறார்?"
"பாஸ்வேர்ட் சொன்னாத்தான் முதலிரவு அறைக் கதவு திறக்குமாம்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

யாழ்ப்பாணத்திற்கென்று உயர் பாரம்பரியம், கலாசாரம் என்பன முன்னொருகாலம் இருந்தது. இதனால் கலாசாரத்தின் தலைநகர் என அழைக்கப்பட்டது.அத்துடன்,அனைத்து வளங்களுடன் சிறப்புற்று விளங்கியது. ஆனால்,

இன்று !,

மரபுகள், வழக்காறுகள், பண்பாடுகள் என்பன அழிக்கப்பட்டு தலைகீழாக மாறிவரும் நகரமாகக் காணப்படுகின்றது. 21 ஆம் நூற்றாண்டின் நவயுக உலகிற்கேற்ப மாறிவரும் மக்கள், பண்டைய ஒழுக்க விழுமியங்களைப் பின்பற்றுவதைத் தமக்கு நாகரிகமற்றதெனக் கருதி வெளிநாட்டு மோகங்களுக்கு அடிமைப்பட்டு மரபுரிமையைப் பாழாக்குகின்றனர் எனக் கூறி கொள்ளமுடியும். இவ்வாறாக இன்றைய சமுதாயம் நாகரிக வாழ்க்கையை வாழ விரும்புகின்றது.

நடை, உடை, பாவனையில் பெண்கள் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளனர். குறிப்பாக சேலை உடுத்து கொண்டையில் பூமாலை சூடி மங்களரமாகச் செல்கின்ற பெண்களில் சில இளவட்டங்கள் சேலைப் பாவனையிலிருந்தும் மாறி இறுக்கமான துணிகளைக் கொண்ட உடைகளை அணிந்து கட்டிளமைப் பருவத்தினை வெளிக்காட்டி வம்புகளை வாங்கிக்கொள்வதோடு புனிதத் தன்மைஇழந்துகொள்கின்றமையைக் காணமுடிகிறது. இத்தகைய மாற்றங்களுக்கு திரைப்படங்களும் தென் நாட்டு பெண்கள் சிலரின் கவர்ச்சியான உடைகளுமே காரணமாகும்.

இதிலிருந்தே கலாரச் சீர்கேடுகள், வல்லுறவுகள் போன்ற ஒழுக்கக்கேடான நடத்தைகள் உருவாகின்றன. யாழ். நகரில் சடுதியாக அதிகமாக இடம்பெறும் இவ்வாறான சம்பவங்களினால் மண்ணின் புகழ் கெடுவதோடு பாதிப்புள்ளானவர்களின் புகழும் கெடுகின்றது.

சிறிது காலமாக ஏற்பட்டுவருகின்ற ஒழுக்கக்கேடான செயல்கள் இளைஞர்களையும், மக்களையும் தீயவழியில் செல்லத்தூண்டுகோலாக அமைகின்றன. 2007 ஆம் ஆண்டுப் பகுதிகளில் யாழ். நகருக்குள் இணையத் தளப் பாவனை, கைத்தொலைபேசி பாவனை குறைந்தளவிலே பயன்பாட்டிலிருந்தன.

2008, 2009, 2010 ஆகிய காலப் பகுதிகளிலிருந்து இன்று வரையான காலப்பகுதியில் அதிகமான பாவனைகள் மேற்கொள்ளப்பட்டு இளைஞர்கள், மாணவர்களின் கைகளில் விதம் விதமான கைத்தொலைபேசிகள் தவழ்கின்றதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனூடாக கல்வி நிறுவனங்களிலும் பாடசாலைகளிலும் பெண் பிள்ளைகளை தாறுமாறான வகையில் படம்பிடித்து இன்னொரு நபருக்கு அனுப்பி பயமுறுத்தும் இழிவான செயல்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு சில தவறான மாணவர்களினால் ஏனைய மாணவர்களும் தம் வாழ்வையும் கல்வியையும் இவ்வாறான இழிவான செயற்பாட்டின் மூலமாக அழித்து கொள்கின்றனர்.

சில சில பாடசாலை கல்வி நிலைய மாணவர்களிடையேயும் இளைஞர்களிடையேயும் நல் ஒழுக்கம் என்பது குறைந்து கொண்டு செல்கின்ற காரணமும் ... கின்றது. ஒருவரோடு ஒருவர் உரையாடும் போது தேவையில்லாத வகையில் தூசன வார்த்தைப் பிரயோகங்களைக் கேட்கக் கூடியதாக இருக்கின்றது.

பெரியவர்களையும் ஆசிரியர்களையும் மதித்தல், அவர்கள் சொற்கேட்டு அதன் படி நடந்து கொள்ளுதல் என்பது சிரமமான விடயமாக மாணவர்களுக்கு தென்படுகிறது. இதனால் நல்லொழுக்கமான இன் சொல்லின் புனிதத் தன்மை மலிந்து கொண்டே செல்கின்றது. இவ்வாறான செயற்பாடுகள் மூலமாக மாணவர்கள் சீரழிந்து விழுமிய வழியில் இருந்து பிறழ்கின்றனர்.

மேலும் கல்வி நிலையங்கள் ஒழுங்கு படுத்தப்பட்ட வேலைத்திட்டங்களில் இளைஞர்கள் கேளிக்கை, நையாண்டி வார்த்தைகளால் பேசி பெண்களின் மனதைப் புண்படுத்தி அவர்களின் கல்வியைப் பாதிக்கும் வகையில் வம்புத்தனமான சேட்டைகளினால் மனம் பாதிப்புக்குள்ளாகி கல்வியில் கூடுதலான கவனம் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

பல்கலைக்கழகங்களில் 'ராகிங்' எனும் விசமத்தனத்தால் பல மாணவ, மாணவிகள் மன அழுத்திற்குள்ளாகியும் தற்கொலை செய்து கொள்ளவும் வழிவகுக்கிறது. ஒரு மனிதன் இன்னொரு மனிதனை புண்படுத்தும் இழிவான செயலை மேற்கொள்கின்றனர்.

சில மாணவ, மாணவிகள் தனியார் கல்வி நிலையத்திற்கோ அல்லது பொது விடங்களுக்கோ செல்வதாக பெற்றோரிடம் சொல்லிவிட்டு அங்கு செல்லாது தீய பழக்கம் உள்ள மாணவர்கள் சிலரின் வழிகாட்டுதலில் அசௌகரியமான செயலில் ஈடுபடுகின்றனர். இதற்கு ஆதரவான வகையில் கல்வி நிலையமருகே உள்ள விற்பனை நிலையங்கள் செயற்படுகின்றன. அந்த நிலையங்கள் பார்ப்பதற்கு குளிர்பான விற்பனை நிலையமாக காட்சியளித்தாலும் உள்ளிடப்பகுதிகளில் மதுபானம், சிகரெட், பாக்கு வகைகள், போதை உண்டாக்கத்தக்க மென்பான வகைகள் என்பன மாணவர்கள், இளைஞர்கள் போதை இன்பத்தில் திளைக்க வழி செய்கின்றன.

இதன் மூலமாக 'போதை' என்கின்ற கொடுரமான மனிதனை நிலைமாற்றும் உணர்வினால் பெற்றோரின் கனவுகளையும் பாழடித்து தம் கல்விப் பருவ வாழ்வையும் அழித்து நல் மாணாக்கர்களையும் தீய வழியில் இட்டுச்சென்றும் பெண்பிள்ளைகளை தூசனவார்த்தைப் பிரயோகங்களால் தகராறுகள் செய்தும் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பதோடு, வீதியால் வருவோருடனும் சேட்டைகள் செய்து தூசன வார்த்தைப் பிரயோகங்களை பொழிகின்றனர்.

இவ்வாறான மனித நேயமற்ற செயல்களினால் ஒழுக்க விழுமியப் பண்புகள் என்பன இல்லாதொழிந்து காட்டு மிராண்டித் தனமான இராட்சத குணத்துடன் கூடிய பண்பில்லாத ஒடுக்கப்பட்ட வாழ்வு வாழ வேண்டும். இவ்வாழ்வு நரக வாழ்விற்கு வழிவகுக்கும் தன்மையுடையதாகும். இச்சமுதாயத்தில் ஒரு வித ஒழுக்கக் கேடு கட்டுப்பாடற்ற வாழ்க்கை முறைக்கு இன்றைய பரபரப்பான சூழ்நிலைகள் சாதகமாகின்றன. ஆபாசப்படங்களும் விகார வெறியுணர்வுகளைத் தூண்டிவிடும் மட்டகரமான பத்திரிகைகளும், புத்தகங்களும், கிளர்ச்சியூட்டும், களியாட்டங்களும், வீண் பொழுது போக்குகளும் காரணமாகின்றன. இவ்விடயங்கள் தொடர்ந்து நிகழ்வதால் நல் ஒழுக்கமற்ற சமுதாயமாகத் திகழ வழியேற்படுகிறது.

> சேலை உடுத்து கொண்டையில் பூமாலை வைத்துச் சூடி மங்களகரமாகச் செல்கின்ற பெண்களில் சில இளவட்டங்கள் சேலைப்பாவனையிலிருந்தும் மாறி இறுக்கமான துணிகளைக் கொண்ட உடைகளையும் அணிந்து கட்டிளமைப் பருவத்தினை வெளிக்காட்டி வம்புகளை வாங்கிக்கொள்வதோடு புனிதத் தன்மை இழந்து கொள்கின்றமையைக் காணமுடிகிறது.

## யாழ்ப்பாணத்தில் அருகி வரும் ஒழுக்க விழுமிய பண்புகள்




சி.ச.ஈழவேந்தன்
இளவாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாழ்ப்பாணத்தில் பிரபலமானவர்கள் வரிசையில்...

**யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பல கலைஞர்கள் தமது கலைகளினூடாக சமூகத்தில் வியக்கவல்ல பல மாற்றங்களைச் செய்துள்ளனர். மக்கள் மத்தியில் இன உணர்வுகளையும் சமூக அக்கறைகளையும் ஏற்படுத்தியுள்ளனர். இவர்களின் சரித்திரங்கள் சாதாரண மனிதனின் சரித்திரங்களாக அமைந்து விடுவதில்லை. நவீன காலத்தில் பல மாற்றங்கள் வந்து இவர்களின் கலை உணர்வுகளை மறைந்தாலும் மக்களின் மனங்களிலிருந்து இவர்களை மறைந்து விட முடியாது. அந்த வகையில் ஆட்டிஸ்ட் மணியம் கலை ஆர்வலர்களாலும் சினிமா ரசிகர்களாலும் மறக்கப்படாத ஒருவர். யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான இவரைப்பற்றி சில வரிகள் இங்கே.....**



# கலாபூசணம் ஆர்ட்டிஸ்ட் மணியம் இவரைப் பற்றி 25

* ஆர்ட்டிஸ்ட் மணியம் என்று எல்லோராலும் அறியப்பட்ட சுப்பிரமணியம் பெரியதம்பி-விசாலாட்சி தம்பதியினருக்கு மூத்தமகனாக 21.09.1923 ஆம் ஆண்டு நல்லூர் செட்டித்தெருவில் பிறந்தார்.
* ஆரம்பக் கல்வியை யாழ்.இந்துக் கல்லூரியிலும், உயர் கல்வியை யாழ்.கனகரத்தினம் மகா வித்தியாலயத்திலும் கற்றுத்தேர்ந்த இவர் ஓவியம் வரைவதில் மிக்க வல்லவராகத் திகழ்ந்தார்.
* இவர் இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற காலத்தில் இலங்கை கடற்படையில் இணைந்து நாட்டுக்காக திருகோணமலையில் பணியாற்றினார்.
* இரண்டாம் உலகப் போர் முடிந்த பின்னர் தாமாகவே கடற்படையிலிருந்து விலகி 1940 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியிலிருந்து ஓவியத்துறையில் முழு ஈடுபாடு காட்டத் தொடங்கினார்.
* ஓவியத் துறைக்குள் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட சுப்பிரமணியம் யாழ்ப்பாணத்தில் 'கட்-அவுட்', 'சேலைப்பனர்கள்', 'போஸ்டர்கள்' போன்றவற்றை மக்கள் ரசிக்கும் வண்ணம் வரைந்து இக்கலாசாரத்தை அறிமுகப்படுத்தினார்.
* 1950 களின் பின்னர் யாழ்ப்பாணத் திரையரங்குகளில் புகழ்பெற்ற நடிகர்களின் உருவப்படங்களை பிரமாண்டமாக வரைந்து வைத்து மக்களை சினிமாப்படம் பார்க்க வைக்கும் உக்தியை அறிமுகப்படுத்தினார்.
* அக்காலத்தில் இவர் வரைந்த பிரமாண்டமான 'மக்கள் திலகம்' எம்.ஜி.ஆர், 'நடிகர் திலகம்' சிவாஜி கணேசன் ஆகியோரின் உருவப் படங்களை பார்த்தே திரையரங்கினுள் படம் பார்க்கச் சென்றவர்கள் பலர்.
* 1950 களுக்கு முன்னர் புதிய திரைப்படங்களோடு கட்-அவுட்களும் பெரும் பணச்செலவுடன் இந்தியாவிலிருந்தே எடுத்து வரப்பட்டன. அதனை மாற்றியமைத்து திரைப்பட அரங்க உரிமையாளர்களுக்கு லாபத்தை பெற்றுக் கொடுத்த பெருமை இவரையே சாரும்.
* 'ஸ்ரீவள்ளி' திரைப்படங்களை புதிய வர்ண முறைகளுடன் வரைந்து சினிமா விளம்பரத் துறையினுள் நுழைந்தவர் 'அடிமைப் பெண்' என்ற திரைப்பட கதாநாயகன் எம்.ஜீ.ஆரின் உருவத்தை பெரிய கட்-அவுட்டாக வரைந்து புகழ் பெற்றார்.
* 'நான் நடித்த படங்கள் இலங்கையில் 100 நாட்களைக் கடந்து ஓடுவதற்கு ஓவியர் சுப்பிரமணியத்தின் கட்-அவுட்களும் காரணமாயிருந்தன. என நடிகர் சிவாஜி கணேசன் புகழும் அளவிற்கு உயர்வு பெற்ற இவர், 1960 ஆம் ஆண்டில் எம்.ஜீ.ஆரையும் சிவாஜி கணேசனையும் நேரில் சந்தித்து அவர்களின் பாராட்டுக்களைப் பெறும் பாக்கியத்தையும் பெற்றுக் கொண்டார்.
* 'நல்லவன் வாழ்வில்' என்ற படத்தில எம்.ஜீ.ஆரின் முகத் தோற்றத்தை 22 அடி உயரம் வரை வரைந்து வர்ணஜாலம் செய்து சினிமா ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றக் கொண்டார்.
* 'காவல்காரன்' திரைப்படத்திற்காக எம்.ஜீ.ஆர் நிமிர்ந்து நிற்கும் தோற்றத்தை இவர் ராஜா திரையரங்கில் வரைந்து வைத்ததை இன்றும் பழைய சினிமா ரசிகர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.
* உயிர் ஓவியக் கலைஞரான மணியம் திரையரங்குகளில் மட்டும் கட்-அவுட்களை வரைவதுடன் நின்று விடாது, யாழ்ப்பாணத்தில் இந்து ஆலயலங்களிலும் கிறிஸ்தவ தேவாலயங்களிலும், பொது இடங்களிலும், வீடுகளிலும் சுவர் ஓவியங்களையும் உருவப் படங்களையும் வரைந்து வைத்துள்ளார்.
* யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டே சிங்கள திரைப் படங்களுக்கும் கட்-அவுட்களையும், பனர்களையும் வரைந்து கொடுத்துள்ளார்.
* சிங்கள சினிமாவில் புகழ்பெற்ற நடிகரான காமினி பொன்சேகா தன்னைப் பிரமாண்டமாக வரைந்த ஆட்டிஸ்ட் மணியத்தை அழைத்து பாராட்டிக் கௌரவித்தார்.
* 20 ஆயிரத்திற்கும் அதிகமான பிரமாண்டமான ஓவியங்களை வரைந்து சாதித்த இவர், தனது கடைசிக் காலம் வரை சமூகத்தில் தனது பெயர் நிலைத்து நிற்கும் வகையில் அழிந்து போகாத பல படைப்புக்களைத் தந்துள்ளார்.
* 1964 ஆம் ஆண்டு சோபியத் தலைவர் லெனின் உருவப்படத்தை வரைந்து கொடுத்து சோவியத் ரஷ்ய அதிகாரிகளின் பாராட்டையும், 1993 ஆம் ஆண்டு போல் பீ.கரீஸ்லின் தோற்றத்தை வரைந்து அமெரிக்கர்களின் கௌரவத்தையும் பெற்றுக் கொண்டார்.
* நாகபூசனி அம்பாள் நாகத்தின் மீது வீற்றிருக்கும் தோற்றத்தை நயினாதீவு அம்மன் ஆலய வசந்த மண்டபத் திரைச்சேலையில் அழகுற வரைந்து கொடுத்தவர் எம்.எஸ்.மணியம் ஆவார்.
* எங்கு சென்றாலும் தன்னை ஈழத்தமிழனாக அடையாளம் காட்டிக் கொள்ளும் இவர் யாழ்ப்பாணத்தில் ஓவியக் கலையை வளர்ப்பற்கு 'மணியம் ஆட்ஸ்' எனும் ஓவியப்பயிற்சிக் கூடத்தை ஆரம்பித்து அதில் பல ஓவிய ஆர்வலர்களை மாணவர்களாக இணைத்துப் பயிற்றுவித்தார்.
* இனப்பற்றும் தேசப்பற்றும் மிக்க இவர் இன விடுதலைக்கான பயணத்தில் தனக்குரியதான பங்களிப்பையும் செய்துள்ளார். இதன் காரணத்தால் 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வால் இவரின் அளப்பரிய ஓவியப் பொக்கிஷங்களும் தொழில் உபகரணங்களும் திட்டமிட்டு அழிக்கப்பட்டன.
* 1954 ஆம் ஆண்டு சிவக்கொழுந்து என்பவருடன் இல்லறவாழ்வில் இணைந்து ஒரு பெண் குழந்தைக்கு தந்தையானார்.
* 'ஓவியச்செல்வன்'(1960),'ஓவியச்சுடர்மணி'(1970) "Vocational Exeellence' (1993), 'ஓவியக் கலைச்செம்மல்'(1994), 'ஓவியப்பெருவி' (1998),'கலைஞானச்சுடர்(2005), 'குகஸ்ரீ' (2003) ஆகியபட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.
* ஈழத்து ஓவியத்துறையில் இவர் ஆற்றிய மகத்தான பங்களிப்பைப் பாராட்டி இலங்கை அரசு 1998 ஆம் ஆண்டு கலாபூசண விருதையும், இலங்கை கம்பன் கழகம் 1995 ஆம் ஆண்டு பேராசிரியர் கைலாசபதி விருதையும் வழங்கிக் கௌரவித்தன.
* குள்ளமான உருவமும் அதிர்ந்து பேசாத சுபாவமும் உடையவரான இவர், 55 வருடங்கள் தொடர்ச்சியாக ஓவியத்துறையில் பணியாற்றி யாழ்ப்பாணத்திற்கும், ஈழத்தமிழருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.
* மை தோய்ந்த தூரிகைகளால் வரலாறுகளைப் பதித்து வந்த ஓவியர் சுப்பிரமணியம், தனக்குப் பின்னால் பல ஓவியக்கலைஞர்களை உருவாக்கிவிட்டு 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி இயற்கையை எய்தினார்.




தொகுப்பு - அஸ்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலைப்போமா?



*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

இவ்வாறான வீட்டுச் சூழலில் வளருகின்ற ஒரு பிள்ளை தனக்கு ஏற்பட்டிருக்கின்ற சிக்கலான, குழப்பமான ஓர் உணர்வுக்கு யாரிடம் ஆலோசனை கேட்க முடியும். எமது பாடசாலைகளில் அந்த வாய்ப்புகளுக்கான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டிருப்பினும் அவை எவ்வளவு தூரம் திறன்பட அமுல்ப்படுத்தப் படுகின்றன? அவற்றில் ஈடுபடும் ஆசிரியர்களும் தமது வழமையான, காலங்காலமாக ஊறிவந்த சிந்தனைப் போக்கிலிருந்து எவ்வளவு தூரம் மாறியிருக்கிறார்கள் என்பது நோக்கப்பட வேண்டியது.

'வாரும். எங்கை கிடந்திட்டு வாறீர்? நான் நினைச்சன் நீரும் உம்மடை /பிரண்ட் போல ஓடிட்டீர் எண்டு!... கதைக்க வேண்டாம்... எனக்கு உந்த விளக்கம் ஒண்டும் தேவையில்லை... நீர் கிளாசுக்கு வெளியாலே போம்! கெற் அவுற்!!'.

இது ஓர் உயர்தர வகுப்பு மாணவிக்கு, அவரைக் கற்பிக்கும் ஆசிரியரால் கூறப்பட்ட அல்லது சொரியப் பட்ட வாய் (வசை) மொழிகள். அந்த ஆசிரியைக்கு அவ்வளவு தூரம் கோபம் ஏற்படும்படியாக இந்தப் பிள்ளை என்ன செய்தது என்பது ஆராயப்படவேண்டியது. ஆனால், துரதிஷ்டவசமாக அந்த ஆசிரியை உளவளத்துணை கற்று, அதில் ஈடுபடுகின்ற ஒருவர் நல்லவர் அமைதியானவர்.

ஆயினும் அவரின் வகுப்பில் நடந்த ஒரு 'ஓடிப் போதல்' நிகழ்வால் பாதிக்கப்பட் டுப் பொரிந்து தள்ளியமையானது, அவருடைய மனப்பாங்கில் இன்னமும் இருக்கின்ற சுய விருப்பு வெறுப்புக்களையும், முற்கற்பிதங்களையுமே காட்டுகின்றது.

வீட்டிலும் பாடசாலையிலும் இவ்வாறான விடயங்கள், பிரச்சினைகள் தொடர்பாகக் கதைக்க முடியாது புறமொதுக்கப்படும் பிள்ளைகள் தாங்கள் நினைத்தபடி, தமக்குத் தெரிந்தபடி நடந்துகொள்ளத் தலைப்படுகிறார்கள். பின்பு அதன் விளைவுகளை எதிர்கொள்ளத் திராணியற்று, பக்கபலமின்றிச் சிதைந்து போகிறார்கள்.

பல சமயங்களில், பாதிக்கப்படும் பெண்பிள்ளைகள் தங்களுக்கு என்ன நடக்கின்றது என்பதனை ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்ளாது, அதனை இரகசியமாகக் காக்க விரும்புவதனைக் காண்கிறோம். இவ்வாறான வேளைகளில், ஏற்படுகின்ற பாதிப்புகள் உடனடியாக வெளியே வராது, அவை மென்மேலும் அதிகளவு பாதிப்புகளை ஏற்படுத்திக்கொண்டுபோய், இறுதியில் சீர்செய்யப்பட முடியாத நிலைமைகளுக்கு இட்டுச் செல்கிறது.

மற்றையது, இந்த வயதுடைய பிள்ளைகள் சிலரில் உறுதியாக இருக்கும். தேவைப்படும் சந்தர்ப்பங்களில் 'இல்லை' 'முடியாது' என்று சொல்லுகின்ற இயல்புகள் வளர்ச்சியடையாது இருக்கலாம். இவர்கள் 'முகத்துக் கஞ்சி' 'பாவம் பார்த்து' 'மறுக்க முடியாமல்' 'வேறு வழியின்றி' சில விடயங்களுக்கு ஒத்துக்கொள்வார்கள். நண்பர்களின் வற்புறுத்தலாலோ அல்லது தெரிந்தவர்களின் 'ஆலோசனைகளின்' பேரிலோ இவர்கள் தமது வயதிற்கும் விருத்திக்கும் பொருத்தமில்லாத சில காரியங்களில் ஈடுபடலாம். மேலும் இவ்வாறான உறுதியான முடிவுகளை எடுக்கும் திறன் அற்றோர் இலகுவில் மற்றவர்களால் தவறாக வழிநடத்தப்படுகின்ற, 'எடுபடுகின்ற' ஆபத்துகளையும் கொண்டிருக்கின்றார்கள்.

நாங்கள் சந்திக்கின்ற பல உதாரணங்களில், உள்ள இளம் பிள்ளைகள் தமக்கு ஏற்கனவே உறவான, தெரிந்த ஒருவருடனேயே இவ்வாறு நடந்துகொள்வதனை அவதானிக்கின்றோம்.

இவ்வாறு தெரிந்த, நெருங்கிய அல்லது தூரத்து உறவினர்களோடு பழகவிடும் பொழுது, அந்த உறவின் எல்லைகள் சம்பந்தமாக எல்லோருமே விழிப்புடன் இருத்தல் நல்லது.

*(தொடரும்)*

வைத்திய கலாநிதி சா.சிவயோகன்
(உள மருத்துவ நிபுணர்)

# வீட்டு வைத்தியம்

- முகச் சுருக்கம் நீங்க-முள்ளங்கியைத் துருவிச் சாறு எடுக்கவும். 2 மேசைக்கரண்டி சாறோடு 2 மேசைக்கரண்டி மோர் கலந்து முகம் முழுவதும் தடவவும். 1 மணி நேரத்திற்குப் . பிறகு வெந்நீரால் முகத்தை சுத்தம் செய்யவும். இதனை தினமும் செய்து வருங்கள் உங்கள் முகத்தின் சுருக்கங்கள் பறந்தே ஓடிவிடும்.
- பற்கள் உறுதியாக இருக்க யாருக்குத்தான் விருப்பம் இல்லை. இதனைச் செய்து பாருங்கள். சில துளி கடுகு எண்ணெயில் சிறிது உப்பு கலந்து பற்பசை போல் தினமும் பல் துலக்கிப் பாருங்களேன் உங்கள் பற்கள் உறுதி பெறும்.
- நீங்கள் வயிற்று புளிப்புத் தன்மையால் அவஸ்தைப் படுபவரா? இதோ அதனைப் போக்க எளிய வழிமுறை - வெற்றிலையுடன் நாலைந்து மிளகு சேர்த்து மூன்று நாட்கள் காலையில் சாப்பிட்டு வாருங்கள்.
- உயர் ரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்த வெங்காயச் சாறோடு சம அளவு .தேன் சேர்த்துத் தினமும் காலையில் ஒரு தேக்கரண்டி சாப்பிடவும்.
- உங்களுக்கு பல் வலியா? இனி இல்லை வலி. பல்வலியைப் போக்க- சிறிது மஞ்சள் பொடியைப் பல்லில் வைத்து அழுத்தவும். வலி காணமல் போய்விடும்.
- தொண்டைப் புண்ணுக்கு -1 டம்ளர் தண்ணீரில் 3 அல்லது 4 கிராம்பை நசுச்சிப் போட்டு 2 தேக்கரண்டி சர்க்கரை 5 சொட்டு நெய் சேர்த்துக் கொதிக்க வைக்கவும். ஆறிய பிறகு இதைக் குடிப்பதால் நல்ல நிவாரணம் கிடைக்கும்.
- செடிகளுக்கு அதிகமாக இரசாயன உரங்கள் தேவையில்லை -வேப்பிலைகளைப் போடுவதால் பூஞ்செடிகள் நன்றாக வளரும்.
- ஒன்று அல்லது இரண்டு கடுகெண்ணெய், மூக்கடைப்பை விரைவில் குணமாக்கும்.
- உங்களின் கால்களின் அடிப்பாதத்தில் ஆணியா? இனிமேல் கவலை எதற்கு? தினமும் இரவில் பாதங்களில் மிதச் சூடான பாதாம் மாவை அவற்றின் மீது தடவி வரவும்.



- மலர்க்குரு அல்லது சருமத்தில் கட்டி இருந்தால்(ஈரமான) அரிசி மாவை அவற்றின் மீது தடவ நல்ல குணம் தெரியும்.
- சுளுக்கு ஏற்பட்டால் கைகால் வீங்கலாம். 1 மேசைக்கரண்டி புளிக்கரைசலோடு அதேயளவு உப்பு சேர்த்து வீங்கிய இடத்தில் தடவவும். சிறிய துணியால் கட்டி வைக்கவும். விரைவில் நிவாரணம் கிடைக்கும்.
- பூச்சி, எறும்புக்கடி, குளவி போன்றவை உங்களை கொட்டினால் இவற்றால் ஏற்படும் வலிக்கு உடனடி நிவாரணம் பற்பசையை அதன்மீது தடவுவதால் எரிச்சல் உடனே குறையும். பற்பசையில் இருக்கும் புதினா எரிச்சலை குறைக்கும். பருக்களிலும் பற்பசையைத் தடவலாம்.
- உங்கள் அழகான முகத்தில் கரும்புள்ளிகள் மறைவில்லையா? இதோ, உங்களுக்காக பாலாடையைத் தினமும் உங்கள் முகத்தில் தடவி வரவும். முக்கியமாக மூக்குப் பகுதியில் தடவுவதால் கரும்புள்ளிகள் மறையும்.
- உங்களின் வாயினால் துர்நாற்றம் வீசுகிறதா? இதோ உங்களுக்காக தினமும் வெந்தயத்தை மென்று வாருங்கள் வாய் துர்நாற்றம் பறந்திடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'அழகியல் திறமை கொண்டவன் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவன்'

## கர்நாடக இசைக் கலைஞர் திருமதி.சுகன்யா அரவிந்தனுடனான நேர்காணல்

அழகியல் திறமை கொண்டவன் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவனாகிறான். எல்லோராலும் பாடவும் ஆடவும் வரையவும் முடியாது. இந்த திறமைகள் எமக்கு கிடைத்த வரம். இக் கலைகளை உரிய வகையிலே போற்றி வளர்ப்போம் என்கிறார் ஈழத்தின் புகழ் பூத்த கர்நாடக இசைக் கலைஞரும் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளருமான .சுகன்யா அரவிந்தனை அவரது இல்லத்தில் யாழ் ஓசைக்காக நேர்காணல் கண்டோம். அதனை இங்கு தொகுத்து தருகிறோம்.

**கேள்வி :** கர்நாடக இசைத்துறையில் ஆர்வம் வரக் காரணம் என்ன?

**பதில்:** எனது தாயார் சந்திரமதி சிவானந்தன் ஓர் இசையாசிரியர். கலைஞரும் கூட. தந்தையார் சபாபதி சிவானந்தனும் சிறந்த இசை ஆர்வலர். இவர்களது ஆர்வமும் ஊக்கமும் சிறுவயதிலிருந்தே வாய்ப்பாட்டு மட்டுமல்லாது வயலின் இசைக்கருவி வாசிப்பதிலும் பரத நாட்டியம் கற்பதிலும் கூட என்னை ஈடுபடவைத்தது.

**கேள்வி :** தங்களுடைய குரு யாரெனக் கூற முடியுமா?

**பதில் :** ஆரம்பத்தில் எனது தாயாரிடம் வாய்ப்பாட்டு, வயலின் என இரு துறைகளையும் கற்றேன். பின்னர் இசை நுணுக்கங்களை மேலும் விருத்தி பண்ண வாய்ப்பாட்டினை சங்கீத பூஷணம் அமரர் எல்.திலகநாயகம் போலிடமும் வயலினை வித்துவான் ஆர்.எஸ். கேசவமூர்த்தி யிடமும் பரதக்கலையினை கலாகீர்த்தி சாந்தினி சிவனேசனிடமும் பயின்றேன்.

**கேள்வி :** தங்களுடைய இசைப்பயில்பு பற்றி சுருக்கமாக கூறுவீர்களா?

**பதில்:** 1981-1985 வரை எனது ஆரம்பக் கல்விக்காலம். இந்தக் காலங்களிலேயே பாடசாலை சார் போட்டிகளிலே கலந்து கொண்டு பல வெற்றிகளைப் பெற்றிருக்கிறேன். அவற்றுள் 1982 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்த் தினப் போட்டியிலே அகில இலங்கை மட்டம் வரை சென்று முதல் பரிசு பெற்றதும் தங்கப்பதக்கம் பெற்றதும். அத்தோடு சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அனுபவத்திலும் அநேக போட்டிகளில் பல மட்டங்களிலும் கலந்து கொண்டு பரிசில்கள் பெற்றதுண்டு. பின்னர் 1995 ஆம் ஆண்டு பல்கலைக்கழகம் சென்று சமூகவியல் துறையில் சிறப்புப் பட்டம் பெற்று தொடர்ந்து கர்நாடக சங்கீத துறையிலும் சிறப்பு பட்டம் பெற்றுள்ளேன்.

**கேள்வி :** தங்களுடைய இசை அரங்கேற்றம் எப்போது நடைபெற்றது?

**பதில் :** 1992-05-22 அன்று எனது இசை அரங்கேற்றம் நடைபெற்றது. எனது குருநாதர் அமரர் திலகநாயகம் போலினுடைய இசைப்பணியின் வெள்ளி விழா நல்லை ஆதீனத்திலே இதே நாள் இசை ஆர்வலர்களால் முன்னெடுக்கப்பட்டது. அந்த தகைசால் அவையிலே எனது அரங்கேற்றம் இடம்பெற்றது. 'இசை மரபு வழிப்பேத்தி' என்ற உயர்ந்த உறவு பின்னணியிலே எனது முதல் மேடையேற்றம் நிகழ்ந்தது என்றுமே எனக்கு மறக்க முடியாத அனுபவம்.

**கேள்வி :** இதுவரை தாங்கள் எத்தனை மேடைக் கச்சேரிகள் செய்திருக்கீறீர்கள்?

**பதில்:** ஏறக்குறைய 55 முதல் 60 மேடைக்கச்சேரிகள் செய்திருக்கிறேன்.

**கேள்வி :** தாங்கள் பெற்றிருக்கும் பட்டங்கள் பற்றி கூறுங்கள்?

**பதில் :** வாய்ப்பாட்டிலும் வயலின் இசைக்கருவியிலும் பரதத்திலும் வட இலங்கை சங்கீத சபை நடாத்தும் பரீட்சைகளிலே சிறப்பாக சித்தியடைந்து அவர்களால் வழங்கப்படும் 'கலாவித்தகர்' பட்டம் மேற்படி மூன்று துறைகளிலும் பெற்றிருக்கிறேன். மேலும் பரதக்கலையில் திருச்சி கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரியிலே மேற்பட்டப் படிப்பினைத் தொடர்ந்து முது நுண்கலை மாணி பட்டம் பெற்றிருக்கிறேன்.

**கேள்வி :** இதுவரை இசை சம்பந்தமாக யாதாயினும் வெளியீடுகள் மேற்கொண்டிருக்கிறீர்களா?

**பதில் :** ஆம். இசைத்துறை நடனத்துறை சார்ந்த கட்டுரைகள் ஏறக்குறைய 10 முதல் வரையான கட்டுரைகள் பத்திரிகைகளிலும் 'அபிநயா' காலாண்டு இதழ்களிலும் மற்றும் சில சஞ்சிகைகளிலும் எழுதியிருக்கின்றேன். தற்பொழுது மாணவர்க்கும் ஆர்வலர்களுக்கும் பயனளிக்கும் வகையிலே ஒரு இசையியல் நூல் ஒன்றினை வெளியிடுவதற்குரிய தயாரிப்பிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றேன். பாடல் இறுவெட்டு வெளியீடுகளும் ஏறக்குறைய 12 இறுவெட்டுக்கள் வரை பாடியிருக்கிறேன்.

புகழ் பூத்த இந்திய இசை விற்பன்னர்கள் பத்மஸ்ரீ நித்திஸ்ரீ மஹாதேவனை வீரகேசரி நிறுவனத்தினர் முதன் முதலாக அழைத்து நல்லை ஆதீனத்திலே இசை நிகழ்ச்சி ஒன்றை ஒழுங்கு படுத்தியிருந்தனர். அந்நிகழ்வு எனது இறைவணக்கத்துடன் ஆரம்பமானதும் பின்னர் அவர்களால் பாராட்டுப் பெற்றதும் என்றும் என் வாழ்வில் மறக்க முடியாத பொழுதாகும்.



நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் இடம்பெற்ற இசைக்கச்சேரி

**நேர்கண்டவர்**
**கலைச்சுடர் என்.இராமச்சந்திரா(ஜே.பி)**

**கேள்வி :** நமது நாட்டில் கர்நாடக இசைத்துறை வளர்ச்சியடைந்துள்ளதா?

**பதில் :** இது பற்றி இரு கோணங்களில் நோக்கமுடியும். இசைத்துறை சார் கற்கை நெறி பற்றி நோக்கும் போது இசைக்கலை பட்டச் சான்றிதழ் கற்கை நெறிக்குரிய ஒரு துறையாக வளர்ந்திருக்கிறது. குறிப்பிட்ட எண்ணிக்கை மாணவர்கள் கற்று வெளியேறுவதோடு மட்டுமல்லாமல் தொழில் வாய்ப்பினையும் பெற்றுக் கொள்கிறார்கள். இந்த வகையில் இசைத்துறை வளர்ந்திருக்கிறது. அதே நேரம் இசையுலகிற்கு இளம் மேடைக் கலைஞர்களது வரவு குறைவாக இருக்கிறது. மாணவர்களிடத்தும் ஆசிரியர்களிடத்தும் சான்றிதழுக்காகவன்றி இசைக்காக கற்கும் நிலை மேலெழுந்தால் இந்நிலையை மாற்றிக் கொள்ளலாம்.

**கேள்வி :** கர்நாடக இசை வாழ்வில் தங்களால் மறக்க முடியாத சம்பவம் யாதாயினும் உண்டா?

**பதில் :** புகழ் பூத்த இந்திய இசை விற்பன்னர்கள் பத்மஸ்ரீ நித்திஸ்ரீ மஹாதேவனை வீரகேசரி நிறுவனத்தினர் முதன் முதலாக அழைத்து நல்லை ஆதீனத்திலே இசை நிகழ்ச்சி ஒன்றை ஒழுங்கு படுத்தியிருந்தனர். அந்நிகழ்வு எனது இறைவணக்கத்துடன் ஆரம்பமானதும் பின்னர் அவர்களால் பாராட்டுப் பெற்றதும் என்றும் என் வாழ்வில் மறக்க முடியாத பொழுதாகும்.

**கேள்வி :** பரதக்கலையிலும் தேர்ச்சி பெற்றவர் என்ற வகையில் இசைக்கச்சேரி பாடுவதற்கும் ஒரு நாட்டிய நிகழ்வுக்கு பாடுவதற்கும் ஏதேனும் வித்தியாசம் உண்டா?

**பதில் :** உண்டு. மேடைக்கச்சேரியிலே பாடகர் தனது ஆற்றலை தனக்கேற்ற வகையிலே சுதந்திரமாக வெளிப்படுத்த முடியும். ஆனால் நாட்டிய நிகழ்வுக்குப் பாடும் போது நாட்டியக் கலைஞருக்கேற்றவாறு அவரது ஆடல், பாவம், கோர்வைகள் மற்றும் சஞ்சாரிகள் எனப்படுகின்ற விஸ்தாரங்கள் எனப் பலவற்றையும் அவதானித்து அவற்றுக் கேற்ப பாடவேண்டும். நாட்டியத்துக்கு பாடும் போது சிறிது நாட்டிய அறிவு இருந்தால் மிகவும் நன்று. இது மிக சுருக்கமான விளக்கம்.

**கேள்வி :** ஒரு மேடைக் கச்சேரிக்கு தயார் செய்யும் போது எவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

**பதில் :** இசைக்கச்சேரிக்கு கொடுக்கப்பட்ட நேரவரையறைக்குள் அடங்கக்கூடியவாறு உருப்படிகளைத் தெரிவு செய்தல் அவசியம். ரசிகர்களது எதிர்பார்ப்பிற்கு ஏற்ப இராகங்களையும் தாளங்களையும் ஏற்ற வகையில் ஒன்றன் பின் ஒன்றாக அழகாகக் கோர்க்கப்படல் வேண்டும். இவை மட்டுமல்லாமல் எப்போதும் ஒரே இராகங்களையும் உருப்படிகளையும் திரும்பத்திரும்ப பாடிக் கொண்டிருக்காது புதிய புதிய இராகங்களையோ அல்லது உருப்படிகளையோ பாடலாம்.

அல்லது மனோதர்மப் பகுதியிலே அதாவது இராகம் பாடும் போதோ கற்பனாஸ்வரம் பாடும் போதோ யாதாயினும் புதிய நுட்பங்களைக் கையாளலாம். இவ்வாறு செய்யும் போது ரசிகர்களின் பெரும் பாராட்டைப் பெற்றுக் கொள்ளமுடியும். பலத்த எதிர்பார்ப்புடன் வரும் ரசிகரை நாங்கள் மனம் கோணாமல் மகிழ்ச்சிப்படுத்த முடியும்.

**கேள்வி :** வாய்ப்பாட்டு கலைஞர் ஒருவனுக்கு கருவி இசைகளது பரீட்சயம் அவசியமா?

**பதில் :** கருவி இசையினுடைய பரீட்சயம் இருந்தால் மிகவும் நன்று. தாளைக் கருவி இசையினுடைய பரீட்சயம் இருப்பின் லயப்பிடிப்பும் மற்றும் கற்பனாஸ்வரப் பகுதிகளிலே பல்வேறு பட்ட கணக்கு வழக்குகளையும் இயல்பாகவே செய்யக்கூடிய ஆற்றலும் வளர வாய்ப்புண்டு. முன்னுதாரணமாக பத்மஸ்ரீ பாலமுரளிகிருஷ்ணாவைச் சொல்லமுடியும். அவ்வாறே தந்தி வாத்தியங்களின் பரீட்சயம், சுருதி வானத்தை ஸ்வர ஞானத்தையும் ஸ்திரப்படுத்த உதவும்.

**கேள்வி :** பொதுவாக இசையின் பயன் என்ன? சுருக்கமாகக் கூறுங்கள்?

**பதில் :** மன இறுக்கத்தை தளர்வடையச் செய்யும்.

**கேள்வி :** உங்கள் வாழ்வின் குறிக்கோள் என்ன?


**பதில் :** என்றுமே பாடடிக் கொண்டிருக்க விருப்பம்

**கேள்வி :** இசைக் கலைஞர் என்ற வகையில் இளம் சமுதாயத்தினருக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில் :** அழகியல் திறமை கொண்டவன் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவனாகிறான். எல்லோராலும் பாடவும் ஆடவும் வரையவும் முடியாது. இந்த திறமைகள் எமக்கு கிடைத்த வரம். உரிய வகையிலே போற்றி வளர்ப்போம். கலைஞனுக்கு குரு பக்தி மிக அவசியம். முயற்சி, தேடல், சாதகம் என்பவற்றுக்கு அப்பால் குருவின் அருளாசியும் வளர்ச்சிக்கு மிக முக்கியம். இசையினை சான்றிதழுக்காக மட்டுமன்றி கலைக்காக படிக்க வேண்டும். அந்த வகையிலே முறையோடு பயின்று முழுமையான கலை அனுபவத்தை பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரத நாட்டிய ஆற்றுகைக் கலையில் ஆண்களினது பங்களிப்பு



ஆற்றுகைக் கலைகள் அழகியல் இன்பம் தருவன. அந்த இன்பத்தினூடாக ஆன்மிகத்தை நிலை நாட்டுவது. இந்நிலையுணர்ந்து இன்பம் பெற்றவர்கள் 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்று தமது பின்னோர்களுக்காக வளம்படுத்தி வளர்த்தார்கள். அதன் மகத்துவத்தை விளக்கிச் சென்றார்கள். ஆற்றுகைக் கலைகளில் பரத நாட்டியக் கலை தனிச்சிறப்பு வாய்ந்தது. இரஸானுபவங்களை கூட்டி அபிநயத்து அகமும் புறமும் அனுபவித்து இன்பம் பெற வைக்கிறது. ரசிகனுக்கும் கலைஞனுக்கும் பாலமாய் விளங்கி சமூக ஒருங்கிணைவை ஏற்படுத்துகிறது. இத்தகைய இறையின்பம் கூடிய ஆடற்கலையில் ஆதிக்கம் செலுத்தியவர்களில் ஆண்களுக்கு தனியிடமுண்டு.

நாட்டியத்தினுடைய ஆதி தெய்வம் சிவபெருமான். இவரால் உருவாகப்பட்டதே நடனக்கலை என்பது நாட்டியத்தினுடைய புராணவரலாறு. நாட்டியத்தின் இரண்டு பெரும் பிரிவுகளான தாண்டவமும் லாஸ்யமும் சிவபெருமான் பார்வதியால் தோற்றுவிக்கப்பட்டு உலகிற்கு பரப்பப்பட்டன. அது மட்டுமன்றி முருகக் கடவுள் வளர்ச்சிப் பருவத்தில் ஆடல் பயின்ற செய்தியினை கந்தபுராணம் கூறுகின்றது. இந்திரன் ஆடற்கலையில் சிறந்தவன் என்று வேதங்கள் கூறுகின்றன. நடனக்கலையானது சிவபெருமானிடமிருந்து தண்டு முனிவருக்கும் அவரிடமிருந்து பரத முனிவருக்கும் அப்படியே பூவுலகில் எங்கும் பரப்பப்பட்டது. இதன்படி நாட்டியக் கலையின் முதல் ஆசானாக சிவபெருமான் இருப்பது ஆடற்கலையில் ஆடவர்களின் பங்களிப்பு பற்றி ஆராய்வதற்கு துணிவை ஏற்படுத்துகிறது.

தொடர்ந்து ஆடற்கலை பூவுலகில் நாட்டிய(ஆண்) ஆசான்களால் பயிற்றுவிக்கப்பட்டு வந்ததுடன் அந்தந்த கால மன்னர்களால் ஆதரிக்கப்பட்டும் வந்தது. எனினும் பெண்கள் இதன்போது ஆடல்புரியும் ஆடல் மங்கைக்களாக விளங்கியமையை மறுக்கமுடியாது. சங்ககாலம், சங்க மருவிய கால அரசர்கள் ஏனைய கலைகள் போன்று ஆடற்கலையினையும் பேணிக் காத்தனர். ஆர்வமும் கொண்டிருந்தனர். இச்செய்தியினை இக் கால இலக்கியங்கள் மூலமாக அறிகின்றோம். தொடர்ந்து பல்லவர் காலத்தில் ஆடற்கலையை வளம்படுத்துவதில் மகேந்திரவர்மன் 1ஆம் இராஜராஜனின் நடனக்கலைப்பணியும் நாட்டிய ஆற்றுகைக்கலையில் ஆண்களது பங்களிப்பைப் பறைசாற்றுகின்றது. முதலாம் இராஜராஜனின் பிருஹதீஸ்வரர் ஆலய கல்வெட்டு ஒன்று பின்வருமாறு அமைந்துள்ளது.

*'.......வீணை வாசிப்பார் இருவருக்கு*
*கூத்தனான*
*செம்பியன் வீணை குஷித்தனுக்கு.....'*
*'.........தமிழ்பாட ஒருவனுக்கு*
*வாணராசி கூத்தனுக்கு.....'*

இங்கு கூத்தன் என்னும் பதம் ஆடல் நெறிபுனைந்த ஆண்மகன் அல்லது ஆடல் ஆசிரியன் பற்றிய செய்தியினைத் தாங்கி நிற்பதைக்காணலாம். இக் கால இலக்கியங்களிலும் இதற்குரிய ஆதாரங்களைக் காண்கிறோம். ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சீவகசிந்தாமணி சீவகன் நாட்டிய ஒப்பனைக் கலையில் சிறந்து விளங்கியதை அனங்க மாலை என்ற நாட்டியப் பெண்ணை அலங்கரித்ததாகக் கூறுகின்றது.

மஹாபாரதம் - ஹரிவம்சம் பகுதியிலே வாசுதேவரின் ராஜசூய வேள்வியிலே 'பத்ர' என்னும் நடிகன் நடனமாடி அனைவரையும் மகிழ்வித்ததுடன் 'லோக வீர மகாநட' என்ற விருதுப்பெயரும் பெற்றான் என்ற செய்திகளும் காணப்படுகின்றன. விஜயநகர மன்னர்கள், மராட்டிய மன்னர்கள், நாயக்க மன்னர்கள் போன்றோரின் சிறப்பான நடனக்கலைப் பணியும் இம்மன்னர்களின் சமஸ்தான வித்துவான்களாக இருந்தவர்களின் ஆடற்பணியும் சிறப்பாக நோக்கத்தக்கவை. 17 ஆம் நூற்றாண்டிலே தஞ்சையை ஆட்சி புரிந்த சஹஜி மன்னர் நாட்டியக் கலையினை சிறப்பாக ஆதரித்தவர். நாட்டியத்திற்காகப் பல பதப்பாடல்களை இயற்றியுள்ளார். ஸ்வரஜதிகள், சொல்லுக்கட்டுக்கள், ஜதீஸ்வரங்கள் எனப்பல உருப்படிகளைச் செய்தார். இவர்களைவிட முதலாம் துளஜாமன்னன், பிரதாசிம்மன், அமரசிம்மன் இரண்டாம் சரபோகி மன்னன், போன்றோரும் ஆடற்பணியாற்றியிருந்தனர்.

மேலும் இம்மன்னர் காலத்திலேயே வித்துவான்களான தஞ்சை நால்வரும் அவர்களின் முன்னோர்களும் ஆடற் கலை வரலாற்றில் முக்கிய இடம்பிடித்தனர். துளஜா மற்றும் சரபோஜி மன்னர் காலத்தில் வாழ்ந்த இவர்கள் அம்மன்னர்களின் அரச சபை வித்துவான்களாகவும் விளங்கினார். நாட்டிய ஆசான்களாக மட்டுமன்றி நாட்டியத்திற்குத் தேவையான உருப்படிப் பாடல்கள் என்பனவற்றை மன்னர் பெயரிலும் இறைவன் பெயரிலும் பாடினர். நாட்டியம் ஆட வேண்டிய ஒழுங்கு முறையினை அமைத்து நெறிப்படுத்தினான். இந்த முறை இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றன. இவர்களது நாட்டியக் கலைப்பணி பற்றி தனியான ஆய்வை மேற்கொள்ளலாம்.

மேலும் தஞ்சை நால்வருக்குப் பின் வந்த காலத்திலிருந்து 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை நாட்டியக்கலை பாரிய தேக்க நிலை ஏற்பட்டது. படித்தவர்கள் சிலர் எதிரெதிராக நின்று போரிட்டனர். சிலர் நாட்டியக் கலையை ஒழுக்கச் சீர்கேட்டுக்குரிய ஓர் ஊடகம் எனவும் ஒரு சாரார் நாட்டியக் கலை புனிதமானது. அதனைப் புனிதத் தன்மையுடன் பேண வேண்டும் என்றும் வாதாடினர். இவ்வாறான சூழ்நிலையில் 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியளவில் நடனக் கலையில் ஒரு வித மறு மலர்ச்சியும் தொடர்ந்து வளர்ச்சியும் ஏற்படத் தொடங்கியது. இந்நிலைக்கு பரதக் கலையை மேம்பட வைக்க பலபெண்கள் முயற்சி செய்தனர். எனினும் இ.கிருஷ்ணர் எனும் ஆண் வழக்கறிஞர் நாட்டியக் கலை மறு மலர்ச்சிக்குப் பாடுபட்டமையும் அவர் தாமே பெண்வேடம் பூண்டு ஆடி அம்பலவாணனின் கலையை மேம்படுத்தியதையும் இவ்விடத்திலே நோக்கவேண்டும். அது மட்டுமன்றி இக்காலத்திலே வாழ்ந்த பல ஆண் கலைஞர்கள் நட்டுவனார்களாக மட்டுமன்றி ஆடற் கலை தொடர்பான ஆய்வுகளையும் நாட்டியக் கலைக்குத் தேவையான பாடல்களையும் எழுதி நடனக் கலையின் வளர்ச்சிக்குப் பங்காற்றியிருக்கின்றனர். டொத்ஷோன் என்னும் ஆங்கிலேயர் இந்திய நடனம் மீது ஆர்வம் கொண்டு அதனைக் கற்று சிவநடனத்தில் தேர்ச்சி பெற்று 1927 களில் புளோரிடாவில் ஆடியதுடன் Cosmic Dance Of Siva என்ற பெயரில் 1000இற்கு மேற்பட்ட மேடைகளில் ஆடினார். கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி நந்திகேஸ்வரரின் அபிநயதர்ப்பணத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து உலகத்தில் உள்ள யாவரும் நடனக் கலை பற்றி அறியும் படி செய்தார்.

இன்றைய நிலையில் வாழும் நாட்டியக் கலைஞர்கள் பலர் நடனக்கலையை பல புதிய உத்தியியல் மாற்றங்களுடன் புதிய விதத்தில் பரிமாணமடையச் செய்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக அடையார் கே.லக்மணன், தனஞ்செயன், மாஸ்டர் சி.வி.சந்திரசேகர் மற்றும் வளர்ந்து வரும் கலைஞர்களான வினித், ஸ்ரீதர், ஜாவீரர், உசேன் இன்னும் பலரைக் குறிப்பிடலாம். இன்று பல ஆண் மாணவர்கள் நாட்டியத்தை விரும்பிப் பயில்வதுடன் பரதக் கலையின் எதிர் கால இருபிற்காக தம்மையும் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையிலும் இவ்வாறான ஒரு நிலைமையைக் காணக்கூடியதாகவே இருக்கின்றது. ஆதிகாலம் தொட்டு இன்று வரை அரசாளும் மன்னர்களால் நடனக் கலை ஆதரிக்கப்பட்டு வந்தமைக்கு சிங்கள, தமிழ் மற்றும் தமிழக இலக்கியங்கள் சான்றாகின்றன. குறிப்பாக 1ஆம் பராக்கிரமபாகுவின் வரலாறு பற்றிய நூல்களில் அவன் ஆடல் கலையைப் பேணிவளர்த்த செய்தியைக் காண்கிறோம். மேலும் கைலாய மாலை வையாபாடலில் யாழ்ப்பாண மன்னர்கள் ஆடற்கலையை ஆதரித்ததையும் அறிகின்றோம். பிற்காலங்களில் சுவாமி விபுலாளந்தர் இசை நடனக்கலைக்காக பல ஆய்வுகளை மேற்கொண்டதுடன் பல மொழிபெயர்ப்புக்களையும் செய்தனர். உதாரணம் மதங்கசூளாமணி சேர் பொன் இராமநாதன் பெண்கல்வியையும் ஆடற் கல்வியையும் ஒரு சேர வளர்க்க வேண்டும் என்று எண்ணினார். இவர்கள் இருவரின் விருப்பமும் இன்று விபுலானந்த இசை நடனக் கல்விக் கூடமாகவும் இராமநாதன் நுண்கலைப் பீடமாகவும் உயர்ந்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் நடன பாடம் பாடசாலைக் கலைத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டவுடன்

*(28ஆம் பக்கம் பார்க்க)*

நாட்டிய கலாவித்தகர்
திருமதி அ.உமாமகேஸ்வரி (BFA)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கிய இன்பம்

ஒரு விடயத்தை சாமர்த்தியமாகவும் நகைச்சுவையாகவும் சுவைபடவும் சொல்லுவதில் ஔவையார் சாமர்த்தியமானவர். அவருடைய பாடல்கள் அமிழ்தினும் இனிமையாகத் தித்திக்கும்.

ஔவையார் அக்காலத்தில் நடந்து சென்று பற்பல அரசர்களையும் தனவந்தர்களையும் சந்தித்து அவர்களுக்கு அரிய அறிவுரைகளைக் கூறி நல்வழிப்படுத்தி அவர்களைப் புகழ்ந்தும் பாடல்களைப் பாடி வந்தார். அவருடைய புகழ் எங்கும் பரவியிருந்தது. அவரை மூவேந்தர்கள் கூட பாராட்டி அவர்மீது உரிய மதிப்பு மரியாதை வைத்திருந்தனர்.

ஔவையாரது பாடல்கள் அனைத்தும் அளவற்ற பெருமையுடையவையாக திகழ்ந்தமையினால் அவரால் தாங்கள் பாடப்பெறுவதை எல்லோரும் தங்கள் பெரும்பேறாகக் கருதினார்கள். இதனால் அவரை அனைவரும் வரவேற்றுப் புகழ்ந்து உபசரித்தனர்.

ஒரு சமயம் மதுரையில் பாண்டிய மன்னனுடைய திருமணத்திற்குச் சென்றார். திருமண விழாவில் அளவிற்ற கூட்டம். அங்கு வருவோரும் போவோருமாக இருந்தனர். ஒரு நாட்டின் அரசனுக்கு திருமணம் என்றால் சொல்லவா வேண்டும்? ஔவையார் மிகவும் எளிமையாக இருப்பவர். ஆடம்பரத்தை அறவே வெறுத்தவர். எளிமையான உடை உடுத்திருந்த ஔவையாரை அரண்மனைக் காவலர்கள் பிடித்து வெளியே தள்ளிவிட்டனர். அங்குள்ளவர்கள் அவரை இன்னார் என அறிந்திருக்கவில்லை. அவரது உடையால் திருமண நிகழ்வின் உள்ளே செல்லத் தடை விதிக்கப்பட்டது.

உலகம் உடையின் உயர்வைக் கண்டு மதிக்கிறது. உள்ளத்தின் உயர்வை உண்ணுவதில்லை. இதுதான் இன்றைய யாதார்த்தமும் கூட. இதனால் ஔவையார் வேதனையும் சினமும் கொண்டார். எனவே அங்கு தனக்கு ஏற்பட்ட நிலையை எண்ணிப் பின்வரும் பாடல் மூலம் சுவை பட விளக்குகிறார்.

'மேலாடையின்றிச் சபை புகுந்தால் இந்த மேதினியோர்
நூலாயிரம் படித்தாலும் எண்ணார்; நுவல் பாற்கடலோ
மாலான வரணி பொன்னாடை கண்டு மகளைத் தந்தே
ஆலாலம் ஈந்தது தோலாடை சுற்றும் அரன் தனக்கே'

என்றார். இதன் கருத்து யாதெனில், சிவபெருமான் எளிமையான தோலாடையுடுப்பவர். திருமாலோ பட்டாடையுடுப்பவர். பாற்கடல் என்ன செய்தது தெரியுமா? அது கூட ஆடம்பரத்தை விரும்புகிறது. தோலாடையுடுத்த சிவனுக்கு ஆலால் விஷத்தைக் கொடுத்தது. ஆனால் பட்டாடையுடுத்திய பரந்தாமனுக்கோ தனது மகள் இலக்குமி தேவியைக் கொடுத்து பாற்கடலையே அவருக்கு பள்ளி கொள்ளக் கொடுத்தது. ஆதலால் சிறந்த ஆடையில்லாதவர்கள் ஒரு பெரிய சபைக்கு சென்றால் அவர்கள் எத்தனை தான் கற்றறிந்தாலும் அவர்களை சபையோர் மதிப்பதில்லை என்ற கருத்தில் மேற்போந்த பாடலை பாடினார்.

ஒருவன் திருமணவீடுகள், கோயில்கள், கொண்டாட்டங்கள் மற்றும் எந்த பொது நிகழ்வுகளுக்குச் சென்றாலும் நல்ல கவர்ச்சியான ஆடை அணிந்து சென்றால் சபையோர்களால் மதிக்கப்படுவான். இன்றேல் இழித்து ஒதுக்கப்படுவான் என்ற யதார்த்தத்தை வெளிப்படுத்தியாதாக இப்பாடல் அமைந்துள்ளது.

இக்கருத்தை இராமலிங்க அடிகளார் கூட தனது பாடல்கள் மூலம் விளக்கியுள்ளார்.

அழுக்கு ஆடைகளை உடுத்தியிருந்தால் மக்கள் நேரில் பார்த்தும் பாராதவர்களைப் போல இருப்பர். ஒருவித உதவியும் புரியமாட்டார். ஆனால், விலை உயர்ந்த ஆடை அணிகலன்களை அணிந்திருந்தால் வாருங்கள் வாருங்கள் எனக் கூறி நன்கு உபசரிப்பார்கள். இதுதான் உலகம் என்ற கருத்தை விளக்க முனைந்த இராமலிங்க அடிகளார் பின்வரும் தனது பாடல் மூலம் கூறவந்த கருத்தைக் தெளிவுபடுத்துகிறார்.

'நேரா அழுக்குத் துணியாகிப் உன்றனை நேரில் கண்டும்
பாரா தவரென நிற்பார்; உடுத்தது பட்டெனிலோ
வாரா திருப்பதேன் வாரும் என்பார் இந்த வஞ்சகர் பால்
சேராது நன்நெஞ்சமே ஒற்றியூரானைச் சேர் விரைந்தே'

என்ற பாடலில் விளக்குகிறார். அவரது இன்னொரு பாடல் மூலம் இதே கருத்தை விளக்கக் காணலாம்.

'காயார் சரிகைக் கலிங்கம் உண்டெல் இக்கலிங்கங் கண்டால்
நீயார்? நின்பெயர் எது? நின் ஊர் எது? நின் நிலை எது?
நின் தாயார் நின் தந்தை எவர்? குலம் எது?என்பார்
சற்றும் அவ்வல் வாயாரிடஞ் செலல் நெஞ்சே விடைதரவில்லையன்றே'.

என்ற பாடல் மூலம் விளக்குகிறார். இதன் கருத்து யாதெனில்,

சரிகைக் கரையிட்ட உயர்ந்த ஆடையை உடுத்தியிருந்தால் பார்த்தவுடன் ஐயா! வணக்கம் தங்கள் பெயர் என்ன? ஊர் எது? உங்கள் சுகம் எப்படி? தங்கள் தாய் தந்தையர் பெயர் என்ன? தங்கள் குலம் என்ன? என்று பலவாறு விசாரித்து உபசரிப்பார்கள். இத்தகைய ஈனமானவர்களிடம் செல்லக் கூடாது. சென்றால் பாவம் என்கிறார். இவ்வண்ணம் உலகம் ஆடைக்கும் பணத்திற்கும் அதிக மதிப்புக் கொடுக்கின்றது. ஆடை, அணிகலன்கள் இன்றிய ஔவையாரைப் பாண்டிய மன்னனின் திருமணச் சடங்கைக் காணவிடாது வாயிலிலே பிடித்து திருப்பியனுப்பியதால் வியப்பு ஒன்றுமில்லை. பாவம் மதுரையை விட்டே புறப்பட்டு விட்டார் ஔவையார். திருமண விழாவில் கலந்து மகிழ வேண்டும். நல்லுணவுண்டு பாண்டியனிடம் பரிசு பெற வேண்டும் என்று எதிரில் சில புலவர்கள் வருகிறார்கள். அப்போது தமிழ் மூதாட்டியான ஔவையாரிடம் தமிழ்த் தாயே பாண்டிய மன்னனின் திருமணம் தடல்புடலாக நடக்கிறதாமே! உயர்ந்த உணவு வகைகள் பரிமாறப்படுகிறதாமே! தாங்கள் இனிது உண்டீர்களா? பொன் பொருள்கள் ஏதும் பெற்றீர்களா? என எதிரில் வந்த ஔவையாரிடம் வினாவினர். இதனைக் கேட்ட ஔவை மூதாட்டி உண்டேன்! உண்டேன்! உண்டேன்! என மூன்று முறை கூறினார்.


என்ன அம்மையார் உண்டேன் என்று மூன்று முறை கூறுகின்றீர்களே அப்படி என்ன விசேஷம் என்றார்கள் புலவர்கள். அப்போது ஔவையார் தெளிந்த தமிழிலே பாண்டிய மன்னனின் மகத்தான திருமணத்தில் தான் உண்டவைகள் பற்றிப் பின்வரும் பாடல் மூலம் அங்கு நின்ற புலவர்களுக்கு உரைத்தார். இதோ அப்பாடல்,

'வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்
துண்ட பெருக்கம் உரைக்கக் கேள்- அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள் பசியினால்
சுருக்குண்டேன் சோறு உண்டிலன்'

என்ற பாடல் மூலம் விளக்குகிறார். இதன் கருத்து யாதெனில் இனிய தமிழைத் துறைபோகக் கற்ற எனக்கு திருமண வீட்டில் உண்ட சிறப்பை உரைக்கிறேன். கேளுங்கள் எப்படி உண்டேன் என்றால் அங்கு நெருக்கடிக்குள்ளாகினேன். தள்ளுப்பட்டேன். இடறுப்பட்டேன் நீண்ட பசியினால் வயிறு சுருக்குண்டேன் ஆனால் உணவு மட்டும் உண்ணவில்லை. என்று அங்கு நடந்த நிகழ்வை அப்படியே நகைச்சுவையாகப் பாடல் மூலம் அப்புலவர்களுக்கு உணர்த்துகின்ற பாணி இவருக்கு கைவரப் பெற்றமை சிறப்பிற்குரியது.

**எஸ். நதிபரன் B.A. (Hons)**

# ஊர்ப் புதினம்



...ன்னர், பிரபுக்கள் காலத்தில் தமது வரலாற்றை, புகழை கல்லில் பொறித்து வைக்கும் கல்வெட்டு முறை இருந்தது.

பின்னாளில் இறந்து போன தமது உறவுகளின் அந்தியேட்டி நிகழ்வில் அவர்களின் வரலாற்றை அச்சடித்து சிறு புத்தகமாகக் கல்வெட்டாக வெளியிடும் பண்பாடாக இந்து மத மக்களிடம் உருவாகியது.

தமது அன்புக்குரியவர்களின் நினைவாக வெளியிடும் கல்வெட்டை அவரது குடும்பத்தினர், நெருங்கிய உறவினர் மட்டும் ஞாபக நாட்குறிப்பாக வைத்திருக்கின்றனர். ஏனையோர் அதனை வாசித்த பின் காகிதக் குப்பையாகக் கழித்து விடுவதைப் பரவலாகக் காண முடிகிறது.

இதற்குப் பதிலாகச் செய்த புதிய முன்னோடி நிகழ்வுகளும் உள்ளன.

ஓர் அன்பர் கல்வெட்டை அச்சிடாமல் அதன் பெறுமதிக்கு ஏழைச் சிறார்களுக்கு சப்பாத்து, சொக்ஸ் வாங்கிக் கொடுத்தார்.

இன்னொருவர் கிராமப்புற பாடசாலை ஒன்றுக்கு கணினி, பிறின்டர் வாங்கிக் கொடுத்தார். இன்னுமொரிடத்தில் பிரதேச சபை நூலகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் பகுதிக்கு புத்தகங்களை வாங்கிக் கொடுத்தார்.

தனது தாயாரின் நினைவாக அந்தியேட்டிக்கு வந்த ஒவ்வொரு குடும்பத்தவருக்கும் ஓர் தென்னம்பிள்ளை கொடுத்ததைக் கண்டேன். இது போல கொய்யா மரம், மாமரம், பலாக்கன்று என அவரவர் வளவு வசதிக்கேற்ப மரக் கன்றுகளைக் கொடுத்ததும் நடந்துள்ளது.

ஆதவரவற்ற முதியோர் சிறுவர் இல்லங்களுக்குச் சென்று அறுசுவை உணவு தானமாக வழங்கியோரும் உண்டு.

தரம் 5 புலமைப் பரிசில், க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர் தரம் சித்தியடைந்த வறிய மாணவர்களின் கல்விக்கு மாதாந்தம் உதவித் தொகை வழங்கி வரும் தர்மவான்களும் சிலர் உள்ளனர்.

கல்வெட்டினுள் உள்ளடக்காமல் தனியாக பாப்பா பாடல்கள், தேவார திருவாசகம், அகராதி, கணனி கட்டுரைகள் ஆகியவற்றில் ஏதாவதொன்றை தனியாக அச்சிட்டுக் கொடுக்கின்றனர்.

சமூகப் பயன் கருதிய நிகழ்வுகளின் பதிவுகளில் சிலவே அவை.

தமது உறவுகளின் பெருமையை காகிதத் தாளில் மட்டும் பறை சாற்றாமல் நீண்ட காலம் நிலைத்திருக்கும் வகையில் செய்யப்படும் நல்ல நிகழ்வுகளை மற்றவர்களும் பின்பற்றினால் நல்லதல்லவா?

தனம் படைத்தோர் நல்ல மனம் படைத்தோராக மாறினால் வளப் பற்றாக்குறைகளை எதிர்நோக்கும் இடங்கள் வளம் படைத்ததாக மாறும். மக்கள் நலம் பெறுவர். பூமியின் சுற்றுச் சூழல் வளம் பெறும். எதற்கெடுத்தாலும் அரச, அரசசார்பற்ற துறைகளிடம் கையேந்தும் நிலையில் பலவற்றுக்கு நாமே உதவ முடியும்.

இறந்து போன எம் உறவுகளுக்குச் செய்யும் நல்ல புண்ணியங்களைச் செய்து சமூகம் வளர உதவுவோம்.

- சிவகாமி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்ச்சிப் பாதையில்

## ● புன்னாலைக் கட்டுவன் அ.த.க.பாடசாலை

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட உடுவில் கல்வி கோட்ட பிரிவில் புன்னாலைக்கட்டுவன் கிராமத்தில் அமைந்துள்ள பெரிய பாடசாலையாக புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை காணப்படுகின்றது.

வளர்ச்சி கண்டு வரும் இப்பாடசாலை இந்த வருடம் முதல் வகை 2 பாடசாலையாக வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

1927 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் சேர் பொன். இராமநாதன் அவர்களினால் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதேவேளை இப்பாடசாலை கதிர்காமையரால் ஆரம்பிக்கப்பட்டது எனவும் வரலாறுகள் மூலம் அறியமுடிகின்றது. கதிர்காமையரே பாடசாலையின் முதலாவது அதிபராகவும் விளங்கியுள்ளார்.

இப்பாடசாலையில் 2010 டிசெம்பர் மாதம் வரையும் தரம் 1 முதல் தரம் 9 வரையுமே வகுப்புக்கள் இடம்பெற்றன. 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தரம் 10, 11 வரையான வகுப்புகளினை நடாத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு முதல் 2010 வரையும் தரம் 5 க்குரிய புலமைப் பரிசில் பரீட்சையில் வருடாந்தம் சராசரி இரண்டு மாணவர்கள் வீதம் சித்தியடைந்துள்ளார்கள். இப்பாடசாலையின் மாணவர்கள் விளையாட்டுக்களிலும் சிறந்து விளங்கி வருகின்றார்கள். 2010 ஆம் ஆண்டு கு. தீபாஜினி என்ற மாணவி 15 வயதுப் பிரிவு தட்டெறிதலில் தேசிய மட்டப்போட்டியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

யா/புன்னாலைக்கட்டுவன் அ.த.க. பாடசாலையின் வளர்ச்சிக் காலத்தில் கடமையாற்றிய அதிபர்களை குறிப்பிட வேண்டியுள்ளது.

புதிய கட்டிடத்தில் முதல் அதிபராக எஸ்.கே.காசிநாதர் 1927 முதல் 1931 வரை அவரைத் தொடர்ந்புது வி.கணபதிப்பிள்ளை 1931 முதல் 1933 வரையும் கடமையாற்றினார்கள். ஏ.டபிள்யூ முருகேசு என்பவர் 1933 முதல் 1942 வரையும் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். இவரின் காலம் முக்கியமானதாகும். இவரது காலத்தில் பாடசாலையில் இரவுப் பாடசாலை ஆரம்பித்து முதியோர் கல்வியை நடத்தி வந்துள்ளார்.

பின்பு பி.வேலுப்பிள்ளை 1942 முதல் 1951 வரையும், கே.சிவகுரு 1951 முதல் 1953 வரையும் ஏ.பொன்னையா 1953 முதல் 1954 வரையும் அதிபராகக் கடமையாற்றியுள்ளார்கள். தொடர்ந்து கார்த்திகேசு என்பவர் 1954 முதல் 1964 வரையும் பத்து வருடங்கள் கடமையாற்றியுள்ளதுடன் இவர் மாணவர்களிடையே மதப்பற்றையும் விழுமியங்களையும் ஊக்குவிப்பதில் முயற்சி உடையவராக இருந்துள்ளார்.

தொடர்ந்து கே. கந்தையா 1964 முதல் 1966 வரையும், எஸ்.நடராஜா ஐயர் 1966 முதல் 1971 வரையும், அ.முதலித்தம்பி 1971 முதல் 1972 வரையும், எஸ்.கனகசபை 1972 முதல் 1983 வரையும், கே.தங்கராஜா 1983 வரையும் 1991 வரையும் எஸ்.பொன்னம்பலம் 1991 முதுல் 1992 வரையும் அதிபர்களாக கடமையாற்றி பாடசாலை முன்னேற்றத்திற்கு தம்மால் ஆன பணிகளைச் செய்துள்ளார்கள்.

1992 முதல் 2001 வரையும் எஸ்.சிவகுமார் என்பவர் அதிபராக இடம்பெயர்வு மற்றும் போர்ச் சூழல்களுக்கிடையில் சிறப்பாகக் கடமையாற்றியுள்ளார். தொடர்ந்து 2001 முதல் 2010 மார்ச் மாதம் வரையும் எஸ். மணியம் என்பவர் அதிபராகக் கடமையாற்றி பாடசாலையின் முன்னேற்றத்தில் பிரதான இடத்தை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

2010 மார்ச் முதல் த.லோகராஜா என்பவர் அதிபராகக் கடமையாற்றி வருகின்றார். இப்பாடசாலையில் தற்போது 259 மாணவர்கள் கல்வி கற்று வருவதுடன் நிரந்தர ஆசிரியர்களாக 14 பேரும் தற்காலிக இணைப்பில் ஒருவரும் ஆசிரிய உதவியாளர்களாக இரண்டு பேரும் உள்ளடங்கலாக 17 பேர் கடமையாற்றி வருகின்றார்கள். இதேவேளை இப்பாடசாலையில் இன்று வரை கல்விசாரா ஊழியர்கள் எவரும் நியமனம் செய்யப்படவில்லை.

**மைதானம் புனரமைப்பு செய்தல், பாடசாலைச் சூழலைப் பாதுகாப்பதற்காக சுற்று மதில் அமைத்தல், பலநோக்குச் செயற்பாட்டு அறை மற்றும் ஆசிரியர்கள் ஓய்வு அறை என்பன அமைத்தல் ஆகிய வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.**




இப்பாடசாலையில் ஆரம்பப் பிரிவு மாணவர் மன்றம், தமிழ் மன்றம், இந்து மன்றம், கிறிஸ்தவ மன்றம், கணித விஞ்ஞான மன்றம், சமூக விஞ்ஞான மன்றம், ஆங்கில மன்றம், சுகாதார மன்றம் மற்றும் சதுரங்கக் கழகம் எனபன இயங்கி மாணவர்களின் திறமைகளை வெளிக் கொண்டு வருவதற்கும் வளர்ப்பதற்கும் களம் அமைத்துக் கொடுக்கின்றன.

பாடசாலையின் வளர்ச்சியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பழைய மாணவர் சங்கம் மற்றும் புன்னாலைக்கட்டுவன் அபிவிருத்திச்சங்கம் என்பன பெரும்பங்காற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஏற்பட்ட நிஷாப் புயல் காரணமாக பாடசாலையின் முகப்பு வாயில் பெயர்ப் பலகை முற்றாகச் சேதமடைந்துள்ளது. இந்த முகப்பு வாயில் பெயர் பலகை திருத்தியமைக்கப்படவேண்டிய தேவை அவசியமாகவுள்ளது.

பாடசாலையானத வகை 2 ஆகத் தரமுயர்த்தப்பட்டதையடுத்து பாடசாலையின் உட்கட்டமைப்பு தேவைகள் அதிகரித்தள்ளது. மாணவர்களின் விஞ்ஞானப் பாட செயற்முறைப் பயிற்சிக்கு ஏற்ற வகையில் விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கப்படவேண்டும்.

மாணவர்களின் திறமையினை வளர்க்கும் முகமாக மைதானம் புனரமைப்பு செய்தல், பாடசாலைச் சூழலைப் பாதுகாப்பதற்காக சுற்று மதில் அமைத்தல், பலநோக்குச் செயற்பாட்டு அறை மற்றும் ஆசிரியர்கள் ஓய்வு அறை என்பன அமைத்தல் ஆகிய வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டினை அதிகரிப்பதற்கு ஏதுவாக பல்லூடக எறியி ஒன்றின் தேவை ஏற்பட்டுள்ளது.

இப்பாடசாலை மேலும் வளர்ச்சியடைய வேண்டிய வசதிகளை கல்வித் திணைக்கள அதிகாரிகள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் வழங்கி மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உரம் சேர்க்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.

## ஆன்மிக ஓசை

நோயாளிகளுக்கு வேண்டிய பணிவிடைகளை செய்யுங்கள். பசியால் வாடுபவர்களுக்க உணவு கொடுங்கள். அறியாமையில் உள்ளவர்களுக்கு முடிந்தவரை கல்வி அறிவு புகட்டுங்கள். நிச்சயம் உங்களுக்கு அமைதியும் ஆறுதலும் கிடைக்கும். - விவேகானந்தர்

உங்களுக்கு உள்ளவைகளை விற்று பிச்சை கொடுங்கள். பழமையாய்ப் போகாத பணப் பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்கு சம்பாதித்து வையுங்கள் அங்கே திருடன் அணுகுகிறதும் இல்லை. பூச்சிகள் கெடுக்கிறதும் இல்லை என்று இயேசு சொல்கிறார். - லூக்கா

பாருங்கள், உங்களில் இருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கிறார். நீங்கள் துன்பத்துக்கு ஆளாவது அவருக்கு கடினமாக இருக்கிறது. மேலும் உங்களுடைய வெற்றியில் அவர் பேராவல் கொண்டவராகவும் நம்பிக்கையாளர்கள் மீது அதிக பரிவு, கருணை உடையவராகவும் இருக்கிறார் - திருக்குர்ஆன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் விளையாட்டு செய்திகள்

## யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் கூடைப்பந்தாட்ட மைதானம் திறப்பு

அரியாலை,

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கூடைப் பந்தாட்ட மைதானம் கடந்த மாதம் **திகதி** காலை 9.00 மணிக்கு திறந்துவைக்கப் பட்டது. திறப்பு விழாவானது கல்லூரி அதிபர் வண. பிதா ஜெறோம் செல்வநாய கம் அடிகளார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூடைப்பந்தாட்ட திறப்புவிழாவிற்கு பிரதம விருந்தினர்களாக கூடைப் பந்தாட்ட மைதானத்தினை அமைப்பதற்கு பங்களிப்பினைச் செய்த பிரிகேடியர் சு.டேவிட் மற்றும் திருமதி போல்லி டேவிட் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். திறப்புவிழாவினைச் சிறப்பிக்கும் முகமாக கூடைப்பந்தாட்ட காட்சிப் போட்டி நடைபெற்றது. இதில் யாழ். புனித பத்திரிசிரியார் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிக்கொண்டன. யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அணியானது 25 : 16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி 1970 ஆம் 80 ஆம் ஆண்டுகளில் பலமிக்க கூடைப்பந்தாட்ட அணியாக அகில இலங்கை ரீதியில் பல வெற்றிகளை பெற்று வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## அச்சுவேலி மத்திய கல்லூரி நடத்திய மரதன் ஓட்டப்போட்டி

அச்சுவேலி,

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு அச்சுவேலி 'தங்காஸ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் 12 கிலோ மீற்றர் மரதனோட்டப் போட்டி நடைபெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற இப் போட்டியில் கல்லூரியின் 100 மாணவர்கள் கலந்துகொண்டனர். இதில் 70 பேர் குறித்த தூரத்தை ஓடி முடித்தனர். மரதனோட்டப் போட்டியில் முதல் பத்து இடங்களையும் பெற்றோர் பெயர் விபரம் வருமாறு,

ஜெ.பிரதீபன், ச.சஜிந்தன், ம.சூரியா, சி.ஜெயரூபன், தி.திலக்ஷன், வி.உமா வேந்தன், சா.சஞ்வீவன், யோ.ஜெனிராஸ், பி.சாருஜன், ஜெ.தர்சன்.



பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் இல்ல மெய்வல்லுனர் போட்டியின் போது நடைபெற்ற உடற்பயிற்சி நிகழ்வொன்றைப் படத்தில் காணலாம்.

(படம்:- அரியாலை நிருபர்)

## தயட்ட கிருல்ல வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன்ஸ் அணி வெற்றி

அரியாலை,

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் 2011.01.29 ஆம் திகதி நடைபெற்ற தயட்ட கிருல்ல வடமாகாண ரீதியிலான வலைப் பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி யில் தெல்லிப்பழை யூனியன்ஸ் அணி சம் பியன் பட்டத்தினை தனதாக்கிக்கொண்ட து.

வடமாகாண ரீதியில் நடைபெற்ற மேற் படிப் போட்டியின் இறுப்போட்டியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக அணியும் தெல்லிப்பழை யூனியன்ஸ் அணியும் மிகவும் விறுவிறுப்பாக மோதிக்கொண்டன. விளையாட்டின் முதல் பாதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன்ஸ் அணி 11:10 என்ற புள் ளிகளுடன் முன்னிலை வகித்தது. இரண் டாவது பாதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன்ஸ் அணியானது மிகவும் அபார மாக ஆடி 14 புள்ளிகளைப் பெற்றது. யாழ். பல்கலைக்கழக அணியினர் புள்ளிகளைப் பெறுவதற்கு பலவகை முயற்சிகளை எடு த்தாலும் அவர்களினால் 04 புள்ளிகளை மாத்திரமே பெறமுடிந்தது. ஆட்டத்தின் நிறைவில் தெல்லிப்பழை யூனியன்ஸ் அணியானது 25:14 புள்ளிகள் அடிப்படை யில் வெற்றிவாகை சூடியது.

இவ் இறுதிப்போட்டிக்கு பிரதம விருந்தி னராக பாராளுமன்ற உறுப்பினர் ஜே. சிறி ரங்கா கலந்துகொண்டு வெற்றிபெற்றவர்க ளுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவித் தார்.



வெற்றிபெற்ற தெல்லிப்பழை யூனியன்ஸ் அணியுடன் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சிறிரங்கா.

(படம் :-அரியாலை நிருபர்)

## துரையரப்பா விளையாட்டரங்கில் ஆசிரியர் விளையாட்டு விழா

அச்சுவேலி,

அகில இலங்கை ரீதியிலான ஆசிரியர்க ளின் விளையாட்டுவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையான நான்கு தினங்களுக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

மாகாண ரீதியில் வெற்றிபெற்ற அணிகள் அகில இலங்கை ரீதியிலான போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளன.

பெரு விளையாட்டுக்கள், தடகளப்போட் டிகள் என்பன நடைபெறவுள்ளன. போட்டி களில் வடக்கு மாகாண மட்டத்தில் வெற்றி பெற்ற யாழ். மாட்ட அணிகளும் கலந்து கொள்ளவுள்ளன.

போட்டிகளை திறம்பட நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. போட்டிகளில் அணிகள் கலந்துகொள்ள வும் வசதியான முறையில் தங்கியிருந்து போட்டிகளில் பங்குகொள்வதற்கான இடங் களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

## உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்ற விண்ணப்பம் கோரல்

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத் தினால் இளையோருக்கான அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் பாடசாலை அணிக ளுக்கு இடையே வருடாந்தம் நடத்தப்ப டும் உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலை அணிகள் இலங்கை உதைபந் தாட்டச் சம்மேளனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் மா. போட்டி பனிஸ்ரனுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள் ளது.

## பரதநாட்டிய

*(25ஆம் பக்கத் தொடர்ச்சி)*

நியமிக்கப்பட்ட முதல் நடன ஆசான் திரு. ஏரம்பு சுப்பையா அவர்கள். இவரது நடனப் பணி, இலங்கை நடனக்கலை வர லாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக் கத்தக்கவை. 1956 இல் இவரால் நிறுவப் பட்ட 'கலாபவனம்' நாட்டியப் பள்ளி இன் றுவரை செம்மையாக தன் பணியைச் செய்துவருகின்றது. உலகம் போற்றும் பிரம்மஸ்ரீ ம.த.நா. வீரமணி ஐயா, கதகளி ஆசான் வேல் ஆனந்தன் போன்றோர் நாட்டியக் கலைக்காக தம் வாழ்வை அர்ப் பணித்தார்கள். அது மட்டுமின்றி இன்று இலங்கையின் பல பகுதிகளிலும் வளர்ந் துவரும் ஆண் நடனக் கலைஞர்கள் பலர் தமது நடனக் கலையை செம்மையுடன் பேணிவருகிறார்கள். ஆண்கள் நடனக் கலையில் கலைஞராக ஆசிரியராக மட்டு மன்றி நடனக்கலைஞருக்கு பக்கவாத்தி யம், ஒலி, ஒளி, மேடை அமைப்பு, ஒப் பனை என்பவற்றிலும் பக்கபலமாக இருந்து வருகிறார்கள்.

தொகுத்து நோக்கிப் பார்க்கும் போது நாட்டிய ஆசானாக, ஆற்றுகை கலைஞ னாக, பக்கவாத்தியக் கலைஞனாக, நாட் டியம் தொடர்பான ஆய்வாள எழுத்தாள னாக, பேச்சாளனாக, நாட்டிய பாடலாக் கம் செய்வோனாக, நாட்டிய மேடை ஒலி-ஒளி ஒப்பனை அமைப்பாளனாக புகைப்படக் கலைஞனாக என்ற பல பரி மாணங்களில் ஆண்களது பங்களிப்பு நாட்டியக்கலை வளர்ச்சியில் இருந்த வண்ணமேயுள்ளன. 'சிவமின்றி சக்தி யில்லை' என்பது எவ்வளவு தூரம் உண் மையோ அதுபோல இன்றுவரை பரத நாட்டியக்கலை சீராக வளர்ச்சி பெற்று நிற் பதற்கு ஆண்களது பங்கும் உண்டு என் பதும் உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த கிழமையும் வாழ்க்கைப் பலனும்

ஒருவர் எந்தக் கிழமையில் பிறந்தாரோ அந்தக் கிழமையின் பலனையும் அவர் அனுபவிக்க வேண்டியதாகத்தான் இருக் கிறது.

**ஞாயிற்றுக்கிழமையில் பிறந்தவர்கள்**

ஞாயிற்றுக் கிழமையில் பிறந்தவர்கள் எந்த காரியமானாலும் அதிகாரத் தோர ணையோடு உரக்க பேசக் கூடியவர் களாக இருப்பார்கள். எந்தக் காரியத்தை யும் சாதிக்கும் திறமை பெற்றவர்களாக இருப்பார்கள்.

இன பந்துக்கள் விஷயத்தில் மிகுந்த அக்கறை கொள்வார்கள். இவர்களுக்குப் பிடித்தவர்களைத் தவிர மற்றவர்களை நெருங்க விட மாட்டார்கள். ஆகையால் இவரைக் கண்டு பேச பலர் பயப்படுவார் கள்.

ஆனால் சொன்ன சொல் தவறாமல் நடக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். எதுவானாலும் அதைத் திறமையோடு முடித்து வெற்றி காணக் கூடியவர்களாக வும் இருப்பார்கள்.

இவர்களின் 19, 28, 37, 45, 55, 64,73 வயதுகளில் தொழில் துறையில் முன் னேற்றமும் நல்ல வருமானமும் அடை வார்கள். மதிப்பு உயரும். ஒவ்வொரு மாதத்திலும் இவர்கள் ஒரு நல்ல காரியம் ஆரம்பிக்க நினைத்தால் அதை 1,10,19,28 தேதிகளில் செய்வது நல்லது. ( மற்ற எண்களுயம் கணக்கிலெடுத்துக் கொண்டு).

**திங்கட் கிழமையில் பிறந்தவர்கள்**

திங்கட் கிழமையில் பிறந்தவர்கள் இவர்கள் இளகிய மனதுள்ளவர்களாக இருப்பார்கள். பிறரிடம் அன்பாகப் பேசும் சுபாவமுள்ளவர்களாக இருப்பார்கள். தன் இனிய பேச்சுக்களால் பிறரைக் கவர்ந்து விடுவார்கள். பிறருக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நல்ல மனப்பான்மை யுள்ளவர்களாக இருப்பார்கள்.

இவர்கள் செய்யும் நல்ல காரியங் களைக் கண்டு இனபந்துக்களும் நண்பர் களும் இவரைப் போற்றிப் புகழ்வார்கள். எவரையும் பகைத்துக் கொள்ள மாட்டார் கள். நியாயம் வழங்குவதில் சமர்த்தர் களாக இருப்பார்கள். தன் தொழில் முறையில் நல்ல வருமானம் பெற்று சுக மாக வாழக் கூடியவர்களாகவும் இருப்பார் கள். சிறுவர் முதல் பெரியோர் வரை இவர் களிடம் அன்பாகப் பேசிப் பழகுவார்கள்.

இவர்களுடைய 20, 29, 38, 47, 56, 65, 74 வயது நடைபெறும் பொழுது முக்கிய மாற்றம் ஏற்படும். நல்ல நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இவர்கள் ஒரு நல்ல காரியம் செய்ய நினைத்தால் மாதத்தின் 2, 7, 11, 16, 20, 25, 29 திகதிகளில் செய்வது நல்லது. அந் தக் காரியம் வெற்றிகரமாக நடைபெறும்.

**செவ்வாய்க் கிழமையில் பிறந்தவர்கள்**

செவ்வாய் கிழமையில் பிறந்தவர்களி டம் கொஞ்சம் முரட்டுச் சுபாவமிருக்கும். பிறர் சொல்வதைக் கேட்க மாட்டார்கள். தன் போக்கே சரி என்று நடப்பார்கள். தன் போக்கைப் பற்றி எவராவது கண்டித்தால் அவர்களுடன் சண்டைக்குப் போவார் கள். தன் நன்மைக்காக கூறுகிறார்கள் என்று கருதமாட்டார்கள். ஆனால் நல்ல வர்களிடம் நல்லவர்களாகப் பழகுவார் கள். எவராவது ஒரு சிறிய குற்றம் செய்து விட்டாலும் அதைக் கண்டு விட்டால் அதைப் பெரிது படுத்தி அவர்களை வீண் விவகாரத்தில் இழுத்து விடுவார்கள். ஒரு சில சமயம் ஒன்றுமில்லாத காரணத்திற் காக தன் நண்பர்களையே பகைத்துக் கொள்வார்கள்.

சுற்றுப் புறத்திலுள்ளவர்கள் கூட இவர் களிடம் பழக அஞ்சுவார்கள். குடும்பத் தில் கூட சதா சண்டை, சச்சரவு நடை பெற்றுக் கொண்டே இருக்கும். இந்த நிலை இவர்களின் 54 ஆவது வயதிற்கு மேல்தான் மாறும். குடும்பத்தில் அமைதி உண்டாகும்.

இவர்களின் 18, 27, 36, 45, 54, 63, 27 ஆகிய வயதுகளில் ஒரு முன்னேற்றமும் எதிர்பாராத அதிஷ்டத்தின் மூலம் பண வருமானமும் ஏற்படும்.

ஒவ்வொரு மாதத்திலும் 9, 18, 27 திகதிகளில் செய்யும் எந்தக்காரியத்திலும் வெற்றியையே காண்பார்கள். இந்தத் தேதி புதன் கிழமையில் வாய்த்தால் விசேஷ பலனை அடைவார்கள்.

(தொடர்ச்சி அடுத்த வாரம் வரும்)

## 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன் [04.02.11 முதல் 10.02.11 வரை]

### கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)



*** மேஷம்**

மேஷ ராசி அன்பர்களுக்கு எதிர்பா ராத வகைச் சிறப்புகள் தொழில் நிலை யில் அமையலாம். தொழில் சார்ந்த பிரயா ணங்களும் ஏற்படலாம். குடும்ப நிலையில் அனுகூலமான பலாபலன்கள் அமைய இட முண்டு.

பணவரவு மிகவும் திருப்திகரமான நிலை யிலே அமையும் பலனுண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் ஓரளவிற்கு வெற்றிகள் ஏற்ப டும் நிலையுண்டு. கடன் நிலைகளில் எதிர் பார்க்கின்ற நற்பலன்களை காண முடியாது. பெண்களுக்க நன்மை உண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.



*** இடபம்**

இடப ராசி அன்பர்களுக்கு சிறப்பான நற்பலா பலன்களுக்கு இடமுண்டு. புதிய முயற்சிகளில் வெற்றியும் நிறைவும் கிடைக்கும் நிலையுண்டு. தந்தை வழியாலும் அனுகூலமான நற்பலன்கள் ஏற்படும்.

குடும்ப நிலையில் மகிழ்வும் நிறைவான பலன்களும் அமையும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையிலேயே அமையும் பல னுண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பலாப லன்கள் ஏற்படும் நிலையுண்டு.

பெண்களுக்கு மன மகிழ்ச்சியுண்டு. மாண வர்களுக்கு வெற்றியுண்டு.



*** மிதுனம்**

தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலைகள் அமைந்திருக்கும். குடும்ப நிலையில் சற்று மத்திமமான பலன்களே அமையும். பணவரவு ஓரளவிற்கு தேவைக ளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு.

எடுக்கின்ற முயற்சிகளில் பொறுமை நிதா னத்துடன் செயற்பட வேண்டும்.

கடன் நிலைகளில் சற்று இழுபறி தாமத நிலைகள் ஏற்படும். பெண்களுக்கு அனுகூல பலன் உண்டு. மாணவர் முயற்சி தேவை.



*** கடகம்**

கடக ராசி அன்பர்களுக்கு அனுகூல மான பலா பலன்கள் அமைகின்ற நிலையுண்டு. தொழில் நிலைகளில் சற்று மந் தமான பலா பலன்களே ஏற்படும்.

எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். குடும்ப நிலையில் அனுகூலமான பலாபலன்கள் அமையும் நிலை யுண்டு.

பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் பலாபலன் உண்டு. கடன் நிலைகளில் சற்று மத்திமமான பலன்களே அமையும். பெண்க ளுக்கு மனமகிழ்வு உண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.



*** சிம்மம்**

சிம்மராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலன்களே அமையும். எடுக்கும் முயற்சிகளில் நிதானம் வேண்டும். தேவையற்ற வீண் அலைச்சல் நிலைகள் அதிகம் ஏற்படும் நிலைப்பாடிருக்கும். குடும்ப நிலையில் சற்று மத்திமமான பலன் களே அமைந்திருக்கும். பணவரவு சற்று சுமா ரான நிலையிலேயே அமையும் பலனுண்டு. கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும். பெண்களுக்கு மன சஞ்சலமிருக் கும். மாணவர்கள் முயற்சி தேவை.



*** கன்னி**

கன்னிராசி அன்பர்களுக்கு சிறப் பான பலாபலன்கள் அமையும் நிலையுண்டு. எடுக்கும் முயற்சிகளில் நல்ல வெற்றி உண்டு. தொழில் நிலைகளில் முன்னேற்றமான நிலை கள் அமையும். குடும்பத்தில் மகிழ்வும் நிறை வான பலன்களும் ஏற்படும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையிலே அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலா பலன்கள் ஏற்ப டும். பெண்களுக்கு நற்பலன் அமையும். மாண வர்களுக்கு மேன்மை ஏற்படும்.



*** துலாம்**

துலாராசி அன்பர்களுக்கு ஓரள விற்கு நற்பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண் டும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் ஏற்படும்.

பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. உடல் நிலையில் சிறு சிறு சுகயீ னங்கள் ஏற்பட்டு மறையும்.

கடன் நிலைகளில் ஓரளவிற்கு அனுகூல மான பலன் அமையும். பெண்களுக்கு அலைச் சல் நிலை இருக்கும். மாணவர்களுக்கு அனு கூலமுண்டு.



*** விருச்சிகம்**

விருட்சிக ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் ஏற்ப டும். தேவையற்ற வீண் அலைச்சல் நிலைகள் அமைந்திருக்கும். குடும்பத்தில் உறவினர்க ளிடையே மனச் சஞ்சலம் அமைந்திருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற் பாடு வேண்டும்.

பணவரவு சற்று மத்திமமான நிலையி லேயே அமைந்திருக்கும். கடன் நிலைகளில் இழுபறி அலைச்சல் நிலைகள் தொடரும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மா ணவர்கள் முயற்சி தேவை.



*** தனுசு**

தனுசு ராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலாபலன் அமையும். குடும்பத் தில் நல்ல முன்னேற்றமிருக்கும். மகிழ்ச்சிக ரம் இருக்கும். தொழில் நிலையில் அனுகூல மான நற்பலன்கள் அமையும்.

பணவரவு மிகவும் திருப்திகரமான நிலை யிலேயே அமையும். உறவினர்களின் மூல மாக அனுகூலமான பலன் ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்ப டும். பெண்களுக்கு சுப பலன் ஏற்படும். மா ணவர்களுக்கு முன்னேற்றமுண்டு.



*** மகரம்**

மகராசி அன்பர்களுக்கு சற்று சுமா ரான மத்திமமான பலன்களே அமை யும். தொழில் நிலைகளில் நிதானம் வேண்டும். குடும்ப நிலையில் திருப்திகரமற்ற நிலைகள் ஏற்படும்.

எடுக்கின்ற முயற்சிகளிலே நிதானமான செயற்பாடு வேண்டும். பணவரவு சற்று மத்திம மான நிலையிலேயே அமையும். கடன் நிலைக ளில் அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். பெண்களுக்கு அனுகூல பலன் குறைவு. மாண வர்கள் நிதானம் தேவை.



*** கும்பம்**

கும்பராசி அன்பர்களுக்கு ஓரள விற்கு அனுகூலமான பலன் உண்டு. தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை இருக் கும். எடுக்கின்ற முயற்சிகளில் ஓரளவிற்கு வெற்றி உண்டு.

குடும்பத்தில் அனுகூலமான பலன்கள் அமையும் நிலையுண்டு. எதிர்பாராத வகை செலவீனங்கள் அதிகமாக அமையும். கடன் நிலைகளில் சற்று மத்திம பலன்களே ஏற்படும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாண வர்கள் நிதானம் தேவை.



*** மீனம்**

மீனராசி அன்பர்களுக்கு சிறப்பான அனுகூலமான பலாபலன்கள் அமையும். தொ ழில் நிலையில் நல்லமுன்னேற்றம் இருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் அனுகூலமான வெற்றி தரும். குடும்பத்தில் மகிழ்வும் நிறை வான சுப பலன்களும் அமையும்.

பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையி லேயே அமைகின்ற பலன் உண்டு. கடன் நிலையில் சுமுகமான பலன் ஏற்படும். பெண் களுக்கு மகிழ்ச்சியுண்டு. மாணவர்களுக்கு வெற்றி உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில் 'நாக மரபில்' இனம், நாடு, அரசு

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இதனால் கொஸ்மஸ் கூறும் பெரிய வணிக துறைமுகத்தைக் கொண்டிருந்த மன்னன் நாகதீபத்தில் ஆட்சி செய்த மன்னர்களில் ஒருவனாகக் கருத இடமுண்டு. இக்கருத்தை மேலும் உறுதிசெய்ய வட இலங்கையில் கிடைத்த தமிழ் நாணயங்களின் தனித்துவமான அம்சங்களைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.

**மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்படும் தொல்லியல், இலக்கியச் சான்றுகள்**

தென்னாசியாவின் முதன்மை நாணயவியலாளர்களில் ஒருவரான பரமேஸ்வரிலால் குப்தா வடஇந்திய வரலாற்று ஏடுகளில் சொல்லப்படாத சில மன்னர்களினதும், சிற்றரசுகளினதும் வரலாறு வெளிச்சத்திற்கு வந்ததற்கு அவர்கள் வெளியிட்ட நாணயங்களை ஆதாரமாகக் காட்டுகிறார் (புரிவய 2000). இந்த உண்மை வடஇலங்கைக்கும் பொருந்தும் எனக் கூறலாம். இலங்கையில் கி.மு. 3ஆம் நூற்றாண்டு தொட்டு புழக்கத்திலிருந்த பலவகைப்பட்ட தமிழ் நாணயங்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் கி.பி. 13ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட அனைத்து நாணயங்களும் தமிழகத்திலிருந்தே கொண்டவரப்பட்டவை என்ற ஆழமான கருத்தே இருந்து வந்தது (Codrington 1924).

இதற்கு கி.பி.13ஆம் நூற்றாண்டில் நல்லாரைத் தலைநகராகக் கொண்ட இரசதானி தோன்றும்வரை இலங்கைத் தமிழரிடையே நாணயங்களை வெளியிடும் அளவிற்கு அரசமரபு தோன்றவில்லை என்ற ஆழமான கருத்திருந்தமை முக்கிய காரணமாகும்.

ஆனால், இந்த நம்பிக்கை ஒரு காரணமாகக் கொண்டு இலங்கையில் கிடைத்த அனைத்து தமிழ் நாணயங்களையும் தமிழகத்திலிருந்து கொண்டுவரப்பட்டவை என்ற முடிவுக்கு வந்துள்ளமை இலங்கைத் தமிழர் தொடர்பாக வெளிவந்திருக்கும் அண்மைக்கால முடிவகளுக்குப் பொருத்தமாகத் தெரியவில்லை. அதில் இப்பாரம்பரிய முடிவுகளை மீள்வாசிப்பிற்கு உட்படுத்த உதவும் நாம்பகரமான தொல்லியல் ஆதாரங்களில் ஒன்றாக வட இலங்கையில் கிடைத்த நாணயங்களைக் குறிப்பிடலாம். ஏனெனில் வடஇலங்கையில் அதிக அளவில் கிடைத்த தமிழ் நாணயங்களை தமிழக அரச வம்சங்கள் வெளியிட்ட நாணயங்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால் பெரும்பாலான நாணயங்களின் வடிவமைப்பு, அரச சின்னங்கள், குறியீடுகள் என்பவற்றில் வேறுபாடுகள் இருப்பதைக் காணலாம் (Pushparatnam : 2001).

**13**

தமிழக நாணயங்கள் பற்றி விரிவாக ஆய்வு நடத்திய ஆகுமுதன்மை நாணயவியலாளர்களான எலியொட் (Eliot; 1970), பிதுல்ஃப் (Bidduph1966), மிற்சினர் (Mictchiner 1998) போன்றோரும் வடஇலங்கையில் கிடைத்த தமிழ் நாணயங்களில் சில தனித்துவமான அம்சங்கள் உண்டு என்பதை தமது ஆய்வுகளில் சுட்டிக்காட்டியுள்ளனர். இருப்பினும் அவர்கள் இந்நாணயங்களில் காணப்படும் காளை, மீன் போன்ற சின்னங்களை தமிழக அரச வம்சங்கள் வெளியிட்ட நாணயங்களுடன் தொடர்புபடுத்தி இவற்றைப் பல்லவர், பாண்டியர் வெளியிட்ட நாணயங்கள் என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

முதலாவது வகை நாணயத்தில் முன்புறத்தில் பலிபீடத்திற்கு முன்னால் நிற்கும் நிலையில் காளையும், பின்புறத்தில் நான்கு கோடுகளால் இணைக்கப்பட்ட சதுரத்திற்குள் சிறிய வட்டமும், அதற்கு மூன்று அல்லது நான்கு புள்ளிகள் கொண்ட சின்னமும் காணப்படுகிறது (படம்-7). மிற்சினர் இந்நாணயத்தை கி.பி.6ஆம் நூற்றாண்டில் பல்லவர் வெளியிட்டதாகக் கூறுகிறார். இவரின் கருத்தையே ஏனைய ஆய்வாளர்களும் பொருத்தமான முடிவாக எடுத்துள்ளனர் (Codrington 1924:24, Mictchhiner 1998: 135, Seyne 1998:28).

தமிழகத்தில் சதுர வடிவில் நாணயங் களை வெளியிடும் மரபு பெரும்பா லும் ஏழாம் நூற்றாண்டின் பின்னர் மறைந்து போவதால் இந்நாணயத்தை ஆறாம் நூற்றாண்டில் வெளியிட்டிருக்கலாம் என மிற்சினர் கூறியிருப்பது பொருத்தமாக இருக்கலாம். ஆனால்



படம்-7

தமிழகத்தில் கிடைத்த பல்லவ நாணயங்களை ஆராய்ந்தால் அவற்றில் ஒன்று தானும் சதுரவடிவில் வெளியிடப்பட்டிருந்தற்கு ஆதாரம் காணப்படவில்லை. அண்மையில் பல்லவர் கால நாணயங்கள் பற்றி விரிவாக ஆராய்ந்து அது தொடர்பான நூல்களை வெளியிட்ட நாணயவியல் அறிஞர்கள் இரா.கிருஸ்ணமூர்த்தி, ஆறுமுக சீதாராமன் போன்றோர் தமிழகத்தில் கிடைத்த நூற்றக்கணக்கான பல்லவர் கால நாணயங்களின் புகைப்படங்களையும் இணைத்துள்ளனர். ஆனால் அதில் ஒன்றுதானும் சதுரவடிவில் அமைந்த நாணயங்கள் காணப்படவில்லை. இரா.கிருஸ்ணமூர்த்தி தனது நூலின் பின்னிணைப்பில் கொழும்பு, பம்பாய், சென்னை போன்ற இடங்களில் உள்ள அருங்காட்சியகங்களில் இருந்து பெறப்பட்டதாக கூறி சதுரவடிவில் அமைந்த சில நாணயங்களையும் சேர்த்துள்ளார் (Krishnamurthy 2004:176).

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அவற்றில் ஒன்று வடஇலங்கையில் கிடைத்த சதுர வடிவத்தை ஒத்த நாணயமாகும். இதிலிருந்து தமிழகத்தில் சதுர வடிவில் அமைந்த பல்லவ நாணயங்கள் எவையும் கிடைக்கவில்லை என்பது தெரிறது. ஆயினும் இவ்வகை நாணயத்தைப் பல்லவருக்குரியதாகக் கருதுவதற்கு அவர்கள் தமது அரச இலட்சனையான காளையைச் சில நாணயங்களில் பொறித்திருந்ததே காரணமாகும்.

ஆனால் தமிழகத்தில் கிடைத்த காளை யுருவம் பொறித்த பல்லவ நாணயங் களில் பெரும்பாலும் மன்னன் பெயர் அல்லது பட்டப்பெயருடன் சங்கு, சக்கரம், கப்பல், விளக்குப் பொன்ற சின்னங்களும் இடம்பெற்றிருப்பது பொதுவான அம்சமாக காணப்படுகிறது. ஆனால் இந்த அம்சங்களை வட இலங்கையில் கிடைத்த நாணயங்களில் காணப்படவில்லை.

(தொடரும்)

## காதலித்துப் பார்



கொட்டும் மழையில் குளிர்காய்வாய்
எறிக்கும் வெயிலில் இதம் காண்பாய்
குழந்தையின் சிரிப்பில் மனம் குழைவாய்
அழகிய நிலவில் கவிதை படிப்பாய்
காதலித்துப்பார்
கோபக் கனல் குளிர்ச்சி பெறும்
மௌன மொழி கதை பேசும்
தூக்கத்தில் பட்டாம் பூச்சிகள் பறக்கும்
விழியோரத்தில் விண்மீன்கள் கண்சிமிட்டும்
காதலித்துப்பார்
உள்ளத்தில் ஆயிரம் எண்ணங்கள் எழுச்சி பெறும்
இதயத்தில் இன்ப அதிர்ச்சி உண்டாகும்
என்றும் உன் நினைவில் உருகும்
அவளின் ஞாபகங்கள் சிலிர்ப்பூட்டும்
காதலித்துப்பார்
அழகிய மலர்களில் உன்முகம் தெரியும்
மெல்லிய இளந்தென்றல் மனதை வருடும்
வண்டினங்கள் உன்னுடன் இசைபாடும்
பாலைவனத்தில் நந்தவனம் உருவாகும்.
காதலித்துப்பார்



சு.தமிழினி
பருத்தித்துறை

## இதயப் பூ நீ

என் இதயக்குளத்தில்
முளைத்திட்ட உயிர் பூ நீ
நான் வாழும் வரை உன்
நினைவுகள் என் நெஞ்சில்
மலர்ந்திருக்கும்

## என் மதி அவள்

நட்சத்திர தோழியர் கூட்டங்களுடன்
என் மதி அவள் பயணிக்கிறாள்
அதோ அவள் யாரைக் கண்டு
நாணுகிறாள் - ஓ !
நான் அவளை ரசித்ததை
புரிந்து கொண்டாள் போலும்.

மைனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் இடம்பெற்ற கால்கோள் விழாக்களின் தொகுப்பு




யாழ். மாதகல் சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலையில் தரம் 1 இல் இணைந்த மாணவர்களுக்கான கால்கோள் விழா அண்மையில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் மற்றும் விருந்தினர்களுடன் மாணவர்கள் நிற்பதை படத்தில் காணலாம்.



கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழாவின்போது அதிபர் மற்றும் விருந்தினர்களுடன் புதிய மாணவர்களை படத்தில் காணலாம். (படம்:- வட்டுக்கோட்டை நிருபர்)



வவுனியா வடக்கு கனகராயன் குளம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற கால்கோள் விழாவின்போது தரம் 1 மாணவர்களை தரம் 2 மாணவர்கள் பூச்செண்டு கொடுத்து வரவேற்பதை படத்தில் காணலாம். (படம்:-நெடுங்கேணி நிருபர்)




யாழ். கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற கால்கோள் விழாவின் போது மாணவர்கள் இசை நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம்.



யா.மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கால்கோள்விழாவின்போது தரம் 2 மாணவர்கள் தரம் 1 மாணவர்களை சம்பிரதாய பூர்வமாக வரவேற்பதை படத்தில் காணலாம். (படம்:- மானிப்பாய் நிருபர்)



யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் இடம்பெற்ற கால்கோள் விழாவின்போது அதிபர் எஸ்.தியாகலிங்கம் மற்றும் விருந்தினர்களுடன் புதிதாக இணைந்த மாணவர்களையும் படத்தில் காணலாம். (படம்:- நெடுந்தீவு நிருபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி...

தன் சொந்த மண்ணில் இலங்கை ரசிகர்கள் மத்தியில் 10 ஆவது உலகக்கிண்ணப்போட்டியில் விளையாடவுள்ள குமார் சங்கக்கார தலைமையிலான இலங்கை அணி 2 ஆவது முறையாக உலகக்கிண்ணத்தை கைப்பற்றும் சாத்தியக்கூறுகள் உள்ளன. இலங்கைக்கு மீண்டுமொரு உலகக்கிண்ண கனவை பிறப்பித்துள்ளது.

இம்முறை உலகக்கிண்ணப் போட்டிகள் நடைபெறவுள்ள நாடுகளில் ஒன்றாக இலங்கையும் காணப்படுகின்றது. இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடன் இலங்கையும் இப்போட்டியை நடத்தும் வாய்ப்பினைப் பெற்றுள்ளமை பெரும் பலமாக அமைகின்றது. மூன்று நாடுகளிலும் 13 மைதானங்களில் மொத்தமாக 49 போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் இலங்கையில் மூன்று மைதானங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளமை இலங்கை ரசிகர்களுக்கு பெரும் விருந்தாக அமையும் என்பது மறுப்பதற்கில்லை.


பல்லேகல சர்வதேச விளையாட்டு அரங்கு-கண்டி


மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு அரங்கு- அம்பாந்தோட்டை


ஆர்.பிரேமதாஸ விளையாட்டு அரங்கு-கொழும்பு



அந்தவகையில் அம்பாந்தோட்டையில் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு அரங்கு, கொழும்பில் ஆர். பிரேமதாச விளையாட்டு அரங்கு, கண்டியில் பல்லேகல கிரிக்கெட் விளையாட்டு அரங்கு ஆகிய மைதானங்களில் போட்டி நடைபெறவுள்ளது. இதில் இலங்கையில் முதல் போட்டியாக இலங்கை- கனடா அகிய அணிகளுக்கிடையிலான போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் 30 பேர் கொண்ட உத்தேச அணியிலிருந்து உலகக்கிண்ண போட்டிக்கான 15 பேர் கொண் இலங்கை அணி தெரிவுசெய்யப்பட்டு போட்டிக்கான முயற்சிகளில் இலங்கை அணி ஈடுபட்டுள்ளது. பந்து வீச்சு, துடுப்பாட்டம், களத்தடுப்பு என அனைத்து வகையிலும் சிறந்த வீரர்கள் இவ்வணியில் இடம்பெற்றிருப்பது சவால் நிறைந்த உலகக்கிண்ணப்போட்டியில் இலங்கை பிரகாசிப்பதற்கான நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை வென்ற இலங்கை அணியில் இடம்பெற்றிருந்த சுழல் நாயகனான முத்தையா முரளிதரன் இம்முறை அணியில் இடம்பெற்றுள்ளமை அணிக்கு பெரும் பலமாக அமைந்துள்ளது. அதேவேளை மெண்டிஸ், ரங்கனஹேரத் ஆகியோர் சுழல்யாலம்காட்ட இம்முறை இலங்கை அணி 3 சுழல்களுடன் களமிறங்கவுள்ளது. அதேவேளை எதிரணியின் விக்கெட்டினை இமைப்பொழுதில் வீழ்த்தும் திறமைபடைத்தவரும் உலகக்கிண்ணப்போட்டியில் ஹெட்ரிக் விக்கெட்டை பறித்தவருமான லசித் மலிங்க அணியை வெற்றிப்பாதைக்கு நகர்த்துவார் என்பது மறுப்பதற்கில்லை.

எனினும் இலங்கை அணியில் அண்மைக்காலமாக தவிர்க்கமுடியாத வீரராக விளங்கிவரும் சுராஜ் ரன்தீவ் அணியில் சேர்க்கப்படாதது இலங்கை அணிக்கு பின்னடைவே. இவர் 21 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 22 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். சகலதுறை ஆட்டக்காரர்களாக அன்ஜலோ மத்தியூஸ், திஸ்ஸார பெரேரா போன்ற வீரர்கள் இடம்பெற்றிருப்பது சிறப்புக்குரியது. இதனிடையே இலங்கை அணியின் வழக்கமான ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான மஹேல ஜெயவர்தன, டி.எம். டில்ஷான் ஆகியோருடன் உப்புல் தரங்க சேர்க்கப்பட்டுள்ளமை சிறந்த ஆரம்பமாக அமைந்துள்ளது.

இந்நிலையில் இலங்கை அணிக்கு எப்போதும் சவாலாக அமையும் மத்தியதரவரிசைக்கு குமார் சங்கக்கார, திலான் சமரவீர, சாமர கபுகெதர, சாமர சில்வா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்

எனவே இவ்வாறு அனைத்து நிலைகளிலும் பலம் பொருந்தியுள்ள இலங்கை அணி இம்முறை 10 ஆவது உலகக்கிண்ணத்தை கைப்பற்றுவதற்கான சான்றுகள் அதிகமுள்ளன.

# கைப்பற்றுமா தென்னாபிரிக்கா?



கிரிக்கெட் ரசிகர்கள் மட்டுமன்றி அனைவரும் எதிர்பார்த்திருக்கின்ற 10 ஆவது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி ஆரம்பமாகுவதற்கு இன்னும் 15 நாட்களே உள்ளன. இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் 13 மைதானங்களை இந்த உலகக்கிண்ணம் அலங்கரிக்கவுள்ளது.

இம் மாபெரும் திருவிழாவில் கிண்ணத்தை கைப்பற்றுவதற்கு போட்டியிடும் நாடுகள் ஒவ்வொன்றும் மிகுந்த ஆவலுடன் காத்திருக்கின்றன. அண்மைக்காலமாக கிரிக்கெட் அரங்கில் சோபிக்கத்தவறிவரும் நடப்பு சம்பியனான அவுஸ்திரேலிய அணி மீதான நம்பிக்கை இம்முறை அனைவரிடத்திலிருந்தும் மறைந்து போயுள்ளது. இருந்தும் தற்போது இங்கிலாந்துடனான ஒரு நாள் தொடரின் மூலம் அவுஸ்திரேலியா உலகக்கிண்ணத்தில் நெருக்கடி கொடுக்கும் என்பது உறுதியாகியுள்ளது.

இந்நிலையில் இம்முறை உலகக்கிண்ணத்தை கைப்பற்றவுள்ள நாடுகளாக எதிர்பார்க்கப்படும் இந்தியா,இலங்கை, இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையே கிரேம் ஸ்மித் தலைமையிலான தென்னாபிரிக்க அணியும் ஒன்று.

இத்தொடரில் 'பி பிரிவில் இடம்பெற்றிருக்கும் தென்னாபிரிக்க அணி பங்களாதேஷ், அயர்லாந்து, நெதர்லாந்து ஆகிய அணிகளை இலகுவில் வெற்றி கொண்டாலும் அதில் இந்தியா, இங்கிலாந்து, மேற்கிந்தியதீவுகள் ஆகியவை பெரும் சவாலாக அமையும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

1992 ஆம் ஆண்டு கெப்ளர் வெஸல்ஸ் தலைமையில், அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் முதன்முதலாக களமிறங்கிய தென் னாபிரிக்க அணி அனைத்து அணிகளுக்கும் கடும் நெருக்கடி கொடுத்து அரையிறுதிக்குள் நுழைந்தது. ஆனால் அரையிறுதியில் டக்வொர்த் லூயிஸ் முறையில் சிக்கிய தென்னாபிரிக்க அணி 3 ஓவர்களில் 22 ஓட்டங்களை பெற்றாலே இறுதிப்போட்டிக்குள் நுழைய முடியும் என்ற நிலை உருவாகியது. இதில் தென்னாபிரிக்க அணி தோல்வியடைந்து இறுதிப் போட்டிக்குள் நுழையும் வாய்ப்பினை கைநழுவவிட்டது.

இதில் வேடிக்கை என்னவென்றால் மழைக்குப் பின்பு ஆட்டம் தொடர்ந்த போது மைதானம் இருள் சூழ்ந்த வகையிலே காணப்பட்டது. ஆனால் ஆட்டம் முடிந்த பிறகு ஒன்றரை மணிநேரம் சூரிய ஒளி பிரகாசமானது. அப்போது பிடித்த துரதிர்ஷ்டம் அந்த அணியை தொடர்ந்து அனைத்து உலகக் கோப்பை போட்டிகளிலும் துரத்தியது.

1996 ஆம் ஆண்டு இந்தியா, பாகிஸ்தான், இலங்கை இணைந்து நடத்திய உலகக் கோப்பை போட்டிகளில் பலமிழந்த மேற்கிந்திய அணிக்கு எதிராக லாரா, ரோஜர் ஹார்ப்பர் ஆகியோரின் தனிப்பட்ட அபார ஆட்டத்தினால் தென்னாபிரிக்கா தோல்வி தழுவி வெளியேறியது.

இவ்வாறு பலமுறை இறுதிப்போட்டியின் விளிம்புக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்பிய தென்னாபிரிக்க அணி இம்முறை 10 ஆவது உலகக்கிண்ணத்திலும் நெருக்கடிகளை எதிர் கொள்ள வேண்டிய கட்டாயத்திலேயே உள்ளது. தன் சொந்த மண்ணைத் தவிர பிறநாடுகளின் ஆடுகளங்கள் சிம்ம சொப்பனமாக உள்ள தென்னாபிரிக்க அணிக்கு இது கடுமையான போட்டியாக அமையும்.

இருந்தும் அண்மையில் இந்தியாவுடனான ஒரு நாள் தொடரில் அந்த அணிக்கு சவால் விடுத்திருப்பது உலகக்கிண்ணத்தில் அவ்வணிக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இருந்தும் தன் சொந்த ஆடுகளத்தில் வைத்தே இந்திய அணிக்கு சவால் விடுத்த தென்னாபிக்க அணி பிற ஆடுகளத்தில் திறமையை வெளிக்கொணருமா என்பதே தற்போதைய கேள்வியாகியுள்ளது.

எவ்வாறாயினும் இவ்வுலகக்கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்க அணி அனைத்து அணிகளுக்கும் சவாலாக அமையும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday February 04, 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org